www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් மார்ச்.14—20,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 300

## ஐ.நா. சபையில் செம்மணிப் புதைகுழி!

## இலக்கை எட்ட முன் வெடித்த குண்டு

## பூத்துச் சிரிக்கும் முரசு 300



## இன்னொரு சத்யராஜ்

## 300 முத்தான பரிசுகள்



படிப்பகம்

# முரசம்

## முன்னூறாவது படி

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

இது முரசின்
வெற்றிகரமான
முன்னூறாவது படி!
வாசகர் பலத்தில்
வசீகர ஆதரவில்
இந்த முன்னூறு படிகளை
எட்ட முடிந்துள்ளது!
வாழ்த்தியோர் மட்டுமல்ல
வசைமொழிந்தோர் கூட
'முரசு' வளர்வதற்கு
உதவி புரிந்துள்ளனர்'
'பத்திரிகை உலகில்
முரசு
முத்திரை பதிக்கும்'
என்று முதல் முரசத்தில்
கூறியிருந்தோம்!
முத்திரை
பதித்திருக்கிறதா? இல்லையா?
என்பதற்கான முடிவை
வாசக நெஞ்சங்களிடம்
விட்டுவிடுகிறோம்.
முன்னூறாவது
முரசில்
ஆசிரியர் பீடம்
அறிமுகப்படுத்தப்படும்
என்று கூறியிருந்தோம்!
'நாம் முரசிடம்
எதிர்பார்ப்பது
நேர்மையான விமர்சனங்களும்
உண்மையான தகவல்களுமே.
ஆசிரியர் பீடத்தையோ
முரசின் செய்தியாளர்களையோ
அறிமுகப்படுத்த தேவையில்லை.
சம்பந்தப்பட்டவர்களுக்கு
சிரமங்கள் ஏற்படுத்த வேண்டாம்
என்ற கருத்துப்பட
பல அன்பு நெஞ்சங்கள்
மடல் அனுப்பியிருந்தனர்!
செய்தியாளர்கள்
யார் என்பது தெரிந்தால்
அச்சுறுத்தல்கள் ஏற்படும்
தகவல்கள் சேகரிப்பதில்
இடையூறுகள் தோன்றும்
என்பது உண்மை!
'முரசு'மீது பலருக்கு
காய்ச்சல் உண்டு!
பொறாமைக் காய்ச்சல்
முதல், அம்பலப்படுத்தல்
பொறுக்காத காய்ச்சல்
வரை, பல ரகம்!
ஆகவே, முரசின்
செய்தியாளர்கள் -மற்றும்
புனைபெயர்களில்
எழுதுவோரை
அறிமுகம் செய்வதை
தவிர்த்தே ஆகவேண்டியுள்ளது!
எந்தவொரு பத்திரிகையும்
புனைபெயர்களில்
எழுதுவோர் விபரங்களை
வெளியிடுவதில்லை!
முரசின்
ஆசிரியர் பீட விபரம்
இங்கு அறிவிக்கப்படுகிறது!
ஆசிரியர் பீடம் மட்டுமே
முரசின்
வெற்றிக்கு காரணமல்ல!
மிகுந்த சிரமத்தின்
மத்தியிலும்.
தாம் இனம் காணப்பட்டால்
பல பக்கங்களில் இருந்து
ஆபத்து நேரலாம்
என்பது புரிந்தும்
சுறுசுறுப்பாக
தகவல்கள் திரட்டித் தரும்
செய்தியாளர்கள்தான்
முரசின்
இரத்த ஓட்டம் போன்றவர்கள்!
முன்னூறாவது
வெற்றிப் படியில் 'முரசு'
காலடி வைக்கும்
இந்த சந்தோச வேளையில்,
'முரசை' உருவாக்க
பங்கெடுக்கும்
அனைவரது உழைப்புக்கும்
மரியாதை செலுத்தியாக வேண்டும்!
முரசுமீது வாசக நெஞ்சங்கள்
கொண்டுள்ள நம்பிக்கைக்கு
முரசு
என்றென்றும் தலை வணங்கும்!
அந்த நம்பிக்கையை
காப்பாற்றுவதற்காக
'முரசு' மேலும்
நேர்மையுடன், உண்மையுடன்
பணிகளைத் தொடரும்!
'முரசு'
அரசுக்கு எதிரானதுமல்ல!
புலிகளுக்கு
ஆதரவானதுமல்ல!
தமிழ்க் கட்சிகளுக்கு
எதிரானதுமல்ல!
இன்னமும் சொன்னால்
தமிழ்க்கட்சிகளோடு
முரசுக்கு
உறவுகளும் உள்ளன!
ஆனால் 'முரசு'
உள்ளதை உள்ளபடி
எழுதும்போது
அன்பு நண்பர்களுக்கும்
உண்மை சுடுவதால்
ஒவ்வொரு விதமாக
வியாக்கியானம் செய்கின்றனர்.
அதற்கு 'முரசு'
என்ன செய்ய முடியும்?!
தூற்றுவோர் தூற்றட்டும்.
போற்றுவோர் போற்றட்டும்.
'முரசு' ஏற்றமுடன்
முன் செல்லும்!

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர் பீடம்***

**கௌரவ ஆசிரியர்:**
*இரா. பத்மநாதன்*

**ஆசிரியர் குழு**

என்.ஆர். அற்புதன்
எம். மணிவர்மன்
ரி. தியாகராசா
ஆர். டன்ஸ்ரன் ரமேஷ்
ஏ. ஹுசைன்
ஆர் 'ர்மி
ஏ. வித்யா
லியோடெ.
ஏழுமலை
பி. ஆனந்தன்
ரி. மயன்
டீ. நந்தினி

## அகங்காரம்

அகங்காரம் இருப்பதன் காரணமாக மனிதனுக்கு இறைவனின் காட்சி கிட்டுவதில்லை. இறைவனுடைய மாளிகையின் கதவருகே இந்த அகங்காரம் என்ற மரத்தின் வேர் நம்மைத் தடுத்து நிற்கிறது. இதைத் தாண்டிச் செல்லாவிட்டால் இறைவனது மாளிகைக்குள் நுழைய முடியாது.

ஒரு சமயம் ஒருவனிடம் பூதங்களை அடக்கியாளும் சக்தி இருந்தது. அவன் கூப்பிட்ட மாத்திரமே பூதம் அவன் முன்வந்து நிற்கும். அவன் சொல்லும் வேலைகளை அரைநொடியில் செய்துவிடும். இப்போது பூதத்திடம் சொல்வதற்கு வேலை ஒன்றும் இருக்கவில்லை. பூதமோ "வேலை சொல்" இல்லாவிட்டால் உன்னை விழுங்கி விடுவேன்!" என்று பயமுறுத்தியது. பயந்து போன மனிதன் "சற்றுப் பொறு. இதோ வந்துவிடுகிறேன்!" என்று தன் குருநாதரிடம் ஓடோடிச் சென்று நடந்ததைச் சொன்னான். உடனே குரு "உன்னுடைய சுருண்ட தலைமுடியை நிமிர்த்தச் சொல்" என்றார். சீடனும் அதன்படியே செய்தான். பூதம் இரவு பகலாக சுருட்டை முடியை நிமிர்த்தும் வேலையில் ஈடுபட்டது. எப்படிச் சுருண்டதோ அப்படியேதான் அந்த முடி இருந்தது. பூதத்தால் சொன்ன வேலையைச் செய்ய முடியவில்லை. பூதம் மன்னிப்புக் கேட்டு அவனை விட்டு நீங்கியது. அகங்காரம் இது போன்றதுதான். மறையும்: உடனே வந்துவிடும். அகங்காரத்தை நீக்காவிட்டால் இறைவனின் காட்சி கிடைக்காது.

தொகுப்பு: திருமதி சி.பாலாம்பிகை-சிலாபம்.

## ஆன்மீகம்



## வெட்கம் கொள்ளுங்கள்

வெட்கம் மனிதனின் இயற்கைக் குணமாக இருக்கிறது. யார் இக்குணத்தை பெற்றிருக்கிறாரோ அவர் சிறந்தவர் என்று போற்றப்படுகிறார். மனிதனை தீயவைகளைச் செய்வதை விட்டும் இது தடுக்கிறது. வெட்கத்தினால்தான் மனிதனுக்கும் மற்ற மிருகங்களுக்குமிடையே வித்தியாசம் காணப்படுகிறது

இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் "வெட்கம்கள் அனைத்தும் நன்மையாக இருக்கின்றன என்றும், "நீ வெட்கப்படாவிட்டால் நாடியதையெல்லாம் செய்து கொள்" என்றும், "வெட்கம் ஈமானில் உள்ளது, ஈமான் உடையவர் சுவர்க்கத்தில் இருக்கிறார்: வெட்கமில்லாமை மடத்தனத்தில் உள்ளது. மடத்தனம் உடையவர் நரகத்தில் உள்ளார்." என்றும் "ஒவ்வொரு மார்க்கத்திற்கும் நற்குணம் இருக்கிறது: இஸ்லாத் தின் நற்குணம் வெட்கம் கொள்வதாக இருக்கிறது," என்றும் "வெட்கம், ஈமான் இந்த இரண்டும் சேர்ந்தே இருக்கக்கூடியவை. இவற்றில் ஒன்று நீக்கப்பட்டால் மற்றொன்றும் நீங்கி விடும்!" என்று கூறியுள்ளார்கள். (ஹதீஸ்)

வெட்கத்தின் நோக்கம் தீயவற்றை விட்டும், தன்னைத் தடுத்துக் கொள்வதாகும். கண், நாவு, வயிறு, அபம் இன்னும் மற்ற உறுப்புக்களையும் தீய பார்வைகளை விட்டும், தீய பேச்சுக்களை விட்டும், ஹறாமான உணவை விட்டும், விபச்சாரம், திருட்டு மற்றும் தீய அனைத்து செயல்களை விட்டும் பாதுகாப்பதாக இருக்கும்.

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.297

### பரிசுக்குரிய கவிதை

### பழையதை நினைக்கையிலே.....

பனையடிக் குளத்தருகே
பசியோடு வந்தமர்ந்து
பழையதை
உண்ணலாமென்றால்
பாழாய்ப்போன அந்த
பழங்கதை நினைவிலாடி
பசியை மறைக்குதடி!

ஜிகே. யோகச்சந்திரன்- வாச்சிக்குடா,
அக்கரைப்பற்று-07.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### அவலம்!

அன்று-
பவளம் விளைந்த
மண்ணில்-இன்று
அவலம் நிறைந்ததாலே
கவளம் சோற்றுக்கே
கண்ணீர்!

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.

### இலவசம்

கள்ள வோட்டு
போடுபவர்களுக்கு
காலைக் கஞ்சி
இலவசம்

த. ஆனந்தன்-
எழுத்தூர், மன்னார்.

### துயரம்

கழனியில் உழைத்து
இவன் களைத்து
உண்ண
உணவெடுத்தால்
இழந்ததை நினைத்து
துயரது தொடுத்து
மனமது தடுக்கும்

ம. திருவரசுராசா-வவுனியா.

### மறத்தமிழன்

கூனுண்டுபோய்,
கூழ் குடித்து
குளத்தடியில் வாழ்ந்தாலும்,
மறத்தமிழன் என்பதை
மறக்க வில்லையடா ஒரு நாளும்!

ந. வரதராஜன் (வரதன்) - பெரியகல்லாறு-01, கல்லாறு.

### மரத்தடியில் மனக்குமுறல்

மூத்தவன் மடகஸ்கார்!
சின்னவன் சிட்னியில்!
கடைக்குட்டி கனடாவில்,
கட்டியவள் கல்லறையில்,
கடையழிந்த நான் மட்டும்,
நிவாரணத்தை நிதமுண்டு
நிம்மதிக்காய் ஏங்குகின்றேன்!?

தர்ஷிக்கா, கனகசிங்கம்-
கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

### திடம்

முதுமையிலும் வறுமை
வறுமையிலும் உறுதி!

வி. ஜெயராஜ்- கோரக்கல் மடு,
வாழைச்சேனை.

## கவிதைப் போட்டி இல.300



### அந்த நாள் ஞாபகம்

உண்பதற்கு விருந்துமில்லை
உடுப்பதற்கு பட்டுமில்லை,
மகிழ்ந்திருக்க வழியுமில்லை,
களித்திருந்த காலமெல்லாம்
கனவாகிப் போனதுதான்
நிஜமாகிப் போனதிங்கே!

ஷோபனா உமாபதிசிவம்-
ஆரையம்பதி-01.

### நிஜம்

உழைப்பின்றி
உணவில்லை!
உணவின்றி உரமில்லை!
உரமின்றி உணர்வில்லை!

எஸ். மகேந்திரன் - காகித ஆலை,
வாழைச்சேனை.

*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 20.03.1999*

**முகவரி:** கவிதைப் போட்டி இல.300
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### விடாமுயர்ச்சி

நரை விழுந்தாலென்ன...
நடை தளர்ந்தாலென்ன...
வலு உள்ளவரை
வயல் செய்துண்போம்!

எஸ். துரைசிங்கம்-
குருமண்காடு, வவுனியா.

### வெறுமை

வெறுமையைத் தவிர
வேறொன்றுமில்லை!

கு. பகீரதன்-மாங்குளம்.

### எதைச் செய்ய....?

வெட்டைக்குள்
வெடியோசை
உண்பதா?
ஓடுவதா?

எஸ்-முருகையா-
சுவிண்டன், லுணுகலை.

### நிம்மதி

முதிர்ச்சியிலும் முயற்சியுண்டு
தளர்ச்சியிலும் வலிமையுண்டு
சுயமான உடலுழைப்பால்
சுவையான உணவுமுண்டு!

செல்வி தயாளினி பரமசாமி-
கரகாம்பிட்டி, தெகிவளை.

## வாசக(ர்)சாலை

இனிய முரசே,

வாரந்தோறும் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை. அரசியல் செய்திகளை உன் மூலம் அறிந்துக்கொள்ள முடிகிறது. உன்னைச் சுவைப்பது கரும்பை நுனியில் இருந்து அடி வரை சுவைப்பது போல் சுவையாக உள்ளது. உன் சேவை என்றென்றும் தொடரப் பாராட்டுக்கள்.

நா. பாரதலெக்ஷ்மி.
கொழும்பு-15





அதிரடி அய்யாத்துரை பகுதியில் வரும் பொன்மொழிகள் பிரமாதம். காலத்துக்கு ஏற்ற அறிவுரைகளைத் தருவது தான் புதுமை. ரசிகனின் 'இலக்கிய நயம்' வர வர மிகவும் சிறப்பாக அமைகின்றது.

எஸ். சரவணேஸ்
டெமிசி,
கலவானையூா





### 'வாயார வாழ்த்துகின்றேன்'



வையகத்து நடப்புகளை வடித்தெடுத்து வந்து வாரி வழங்குவதையிட்டு 'வள்ளல்' என உனைக்கூறி வாசகர்கள் நாங்கள் வையகத்தில் வாழு மட்டும் வார முரசு நீயும்
வாடி வதங்காமல் வாழ்வாங்கு வாழவேண்டுமென்று வண்ணத் தமிழாலே வாயார வாழ்த்துகின்றேன்.

சரவணமுத்து நவேந்திரன், வெல்லாவெளி.

*முரசே!*
*நீ தரும் 'உதட்டில் ஒரு மச்சம்', 'டிசம்பர் பௌர்ணமி' ஆகிய இரு தொடரும் அசத்துகின்றன. 'இடி அமீன்' அசத்துகிறார்.*

கி. றெஜிச்சந்திரன், வத்தளை.

## பொக்கிஷத்திலிருந்து...

பெரும்பாலான வாசக நெஞ்சங்கள் முரசுகளைச் சேகரித்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்பது முரசுக்கு பெருமை. அவ்வாறு பத்திரப்படுத்திய முரசுகள் மத்தியில் தங்கள் அன்புச் செல்வங்களை புகைப்படம் எடுத்து எமக்கு அனுப்பி வைத்தவர்கள் பல நூறு பேர்.

நாம் கேட்காமலேயே-முரசில் பிரசுரமாக வேண்டும் என்றில்லாமல்-தமது பாசத்தைக் காட்டும் முகமாக அவர்கள் அனுப்பிவைத்த புகைப்படங்கள் எம்மை நெகிழ வைத்தன.

அவற்றை பொக்கிஷமாக பத்திரமாக 'முரசு' பாதுகாத்து வருகிறது. அவற்றில் மிகச் சில மட்டும் இடவசதிக்கு ஏற்ப, இந்த 300வது முரசில் இடம் பெற்றுள்ளன.

(ஆ.ர்)

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**
**தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

*உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.* -நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

## ரயிலில் வெடித்த குண்டு புலிகளின் இலக்கு எது?

(நமது நிருபர்)

புலிகள் நடத்த திட்டமிட்டிருந்த குண்டு வெடிப்பு ஒன்று இலக்கு தவறியுள்ளது.

கடந்த 02.03.99 அன்று கொழும்பு ரயில் நிலையத்தில் இருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற ரயிலில் குண்டு வெடித்ததல்லவா. மருதானை ரயில் நிலையத்தில் வெடிப்பதற்காக வைக்கப்பட்ட குண்டே அதற்கு முன்பாக உள்ள நாரஹேன்பிட்டியாவில் வெடித்துள்ளது.

இது பற்றி தெரிய வருவதாவது, கடந்த 02.03.99 அன்று புத்தளத்திலிருந்து புறக்கோட்டைக்கு 647ம் இலக்க ரயில் வந்து சேர்ந்தது.

இந்த ரயில் புறக்கோட்டையில் பயணிகளை இறக்கிய பின்னர், அன்றிரவு மருதானையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ரயிலாகும்.

அன்று அவிசாவளைக்கு செல்ல வேண்டிய ரயிலில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, 647ம் இலக்க ரயிலை அவிசாவளைக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

அதனால் அன்றிரவு மருதானை நிறுத்தற்கு பதிலாக அவிசாவளைக்கு புறப்பட்டுச் சென்றது. இரவு 10.38 மணிக்கே ரயில் புறப்பட்டுச் சென்றது. நாரஹேன்பிட்டியாவை நெருங்கும்போது குண்டு வெடித்தது.

பயணிகள் அனைவரும் இறங்கிய பின்னர் ரயில் நிறுத்தி வைக்கப்படும்போது வெடிக்கக்கூடியதாகவே குண்டு வைக்கப்பட்டது என்று சந்தேகிக்கப்படுகிறது.

புத்தளத்திலிருந்து வரும்போது ரயிலில் ஏறிய புலிகள் குண்டை தற்செயலாக விட்டுச் சென்றிருக்கலாம் என்றும் பொலிசார் சந்தேகித்துள்ளனர்.

ஆனால் குண்டை தற்செயலாக விட்டுச் செல்வது என்பது நடக்கமுடியாத காரியம். தென்பகுதியில் புலிகள் பெருந்தொகையாக குண்டுகளைக் கொண்டுவர முடியாது. ஒன்றிரண்டு குண்டுகளையே கொண்டு செல்லலாம். அவ்வாறிருக்கையில் ஒரு குண்டை மறந்தோ, கவலையீனமாகவோ விட்டுச் செல்லமாட்டார்கள்.

குறிப்பிட்ட இலக்குக்கு கொண்டுவரப்படாது மறைத்து வைக்கப்படுவதற்காகக் கொண்டு சென்ற குண்டுகளில் ஒன்றாக இருந்தால் வெடிக்கக்கூடிய நிலையில் இருந்திருக்காது.

குறிப்பிட்ட குண்டு வெடிக்கக்கூடிய நிலையில் இருந்துள்ளது. எனவே ரயிலில் வெடிப்பதற்காகவே வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு பாதிப்பில்லாத நேரம் பார்த்தே சமீபத்திய புலிகளது குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. அவிசாவளை ரயில் குண்டும் பொதுமக்கள் இல்லாத நேரம் வெடிக்கக் கூடியதாகவே வைக்கப்பட்டுள்ளது.

அக்குண்டு ஐந்து கிலோ எடையுள்ளது என்று விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

# பெரும் தாக்குதலுக்கு புலிகள் தயார்!

# முன்னரங்கில் தினசரி மோதல்கள்!

(நமது நிருபர்)

பெரும் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்னிக்கும் கிழக்குக்கும் இடையே புலிகளது படகுகள் அடிக்கடி சென்று வருகின்றன. அப் படகுகளில் பெருமளவான உறுப்பினர்கள் செல்வதாகக் கூறப்படுகிறது.

வன்னியிலா அல்லது கிழக்கிலா தாக்குதல் இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது, என்பதை அறிய முடியவில்லை.

கிழக்கு மாகாணத்தில் புலிகளது அணிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அதே சமயம் கிழக்கில் இருந்து பெருமளவான உறுப்பினர்கள் புதிய பயிற்சிக்காக வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கிழக்கில் மாணவர்கள் மத்தியிலும் புலிகள் பிரசாரக் கூட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

சமீபகாலமாக கிழக்கு மாகாணத்தில் புலிகள் தரப்பில் இழப்புக்களும் அதிகரித்துள்ளன.

விசேஷ அதிரடிப்படையினரின் தாக்குதல்களால் புலிகள் தரப்பில் பலர் பலியாகியுள்ளனர்.

இதனால் கிழக்கில் பதிலடி நடவடிக்கைக்கு புலிகள் திட்டமிடலாம் என்று கருதப்படுகிறது.

பலியான தமது உறுப்பினர்கள் சார்பாக தாக்குதல் நடத்துவது புலிகளது பாணி என்பது குறிப்பிடத்தக்கது.

### வன்னி மோதல்

வன்னியில் முன்றுமுறிப்பு பகுதியில் படையினரது முன்னரங்க நிலைகளின்மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் மூவர் பலியாகினர்.

படையினர் இரணைஇலுப்பைக்குளத்தைக் கைப்பற்றி, முன்றுமுறிப்புடன் இணைப்பை ஏற்படுத்திய 06.03.99 அன்றே இம் மோதல் நிகழ்ந்தது. படைத்தரப்பு இழப்பு தெரியவில்லை.

அதே தினத்தில் ஒட்டுசுட்டான் பகுதியிலும் முன்னரங்க நிலைப்பக்கம் சென்ற படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் மூண்டது. இதில் இரு புலிகள் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படைத் தரப்பு இழப்புப் பற்றி புலிகள் கூறியுள்ள போதும், படையினர் எதுவும் கூறவில்லை.

அதேநாள் மாங்குளம் முன்னரங்க நிலைப்பக்கம் நடைபெற்ற மோதலில் ஒரு புலி பலியானார்.

இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் படையினர் முன்னேறி கைப்பற்றியதை தடுக்காத புலிகள், முன்னரங்க சண்டை முனைகளில் இருந்தும் படையினர் முன்னேறக்கூடும் என்று விழிப்பாக இருந்துள்ளனர்.

### மணலாற்றில்

மணலாறு பகுதியிலும் அடிக்கடி மோதல்கள் நடந்து வருகின்றன. மணலாறு குஞ்சுக்குளம் பகுதியில் படையினர்மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். 07.03.99 அன்று இத் தாக்குதல் நடைபெற்றது. இம் மோதலில் சடலம் ஒன்று தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை மாங்குளம் பகுதியில் புலிகளது முகாம் ஒன்றில் 01.03.99 நடைபெற்ற வெடி விபத்தில் நான்கு புலிகளும், புலிகளது ஆதரவாளர் ஒருவரும் பலியாகினர்.

குண்டு தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே தற்செயலாக குண்டு வெடித்ததாகத் தெரிகிறது.

04.03.99 அன்று ஒட்டுசுட்டானில் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் பெண்புலி ஒருவர் பலியானதாகவும் கூறப்படுகிறது. கனகரத்தினம் கோமதி என்பவரே பலியானவராவார். வன்னியில் முன்னரங்க சண்டை முனைகளில் தினசரி சிறு மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன. ■

# குடாநாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு!

## அபிவிருத்திப் பணிகளும் நடக்கவில்லை

யாழ் குடாநாட்டில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சனைகள் பாரதூரமான முறையில் சீர் கெட்டுவிட்டதாக யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஒன்றிணைப்பு அண்மையில் வெளியிட்டுள்ள அதன், அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'தமிழ் நெட்டில்' அண்மையில் வெளியான இவ்வறிக்கையில், சட்டம் ஒழுங்குகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவர்கள், இது தொடர்பாக எதுவித அக்கறையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள மனித உரிமைகள் தொடர்பான முகவர் ஒன்றிணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையில் அமைப்பின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், செயலாளர் ஏ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பகல் வேளையிலும், இரவில் ஊரடங்கு நேரத்திலும் குற்றச் செயல் புரிவோரும், சமூக விரோதிகளும் நடமாடுகின்றனர்.

கொள்ளை, களவு, கள்ளச்சாராயம்-கசிப்பு விற்பனையும் இவ்வேளைகளில் எதுவித பயமுமின்றி நடைபெறுகின்றன.

மக்களுக்கான வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகள் கட்டுப்படுத்தபபட்டமை, தொழிலின்மை, போதுமான அளவு வருமானம் தரக்கூடிய தொழில் பற்றாக்குறை ஆகியவையே இத்தகைய குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கான காரணங்களாகும் என்ற பொதுவான அபிப்பிராயம் நிலவுகிறது.

**மக்கள் தொகை**

யாழ் குடாநாட்டில் 1998 நவம்பர் முடிவு வரை 4 இலட்சத்து 97 ஆயிரத்து 347 பேர் குடியிருக்கின்றனர் என்ற புள்ளி விபரம் யாழ் செயலகத்தில் கிடைக்கிறது.

குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளைத் தொடக்குவதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகள் அலட்சியப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். எப்பணிகளும் இதுவரை தொடக்கப்படவில்லை.

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் (UNDP) குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்குச் சென்று பணிகளைத் தொடக்கி வைக்கப் போகிறது என்று தகவல் ஊடகங்களில் செய்தி வெளியானபோதும், இதுவரை எதுவும் நடைபெற்றதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் குடாநாட்டிற்குளேயே தமது சொந்த பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் உள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நீதிபதிக்கு அச்சுறுத்தல்–காரணம் யார்?

வவுனியா மாவட்ட நீதிபதி தியாகேந்திரா தங்கியிருந்த அறைக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்தில் புளொட்மீதே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ரெலோ, புளொட் இயக்க மோதலில் புளொட் உறுப்பினர்கள் கைதாகினர்.

அவர்களுக்கு பிணை வழங்குமாறு கோரப்பட்டபோது மாவட்ட நீதிபதி பிணை வழங்க மறுத்திருந்தார்.

இதன்பின்னரே அவரது தங்குமிடம் தாக்குதலுக்கு உள்ளானது. வவுனியா நகரில் வாடி வீட்டில் 7ம் இலக்க அறையில் அவர் தங்கியிருந்தார்.

இரண்டு இளைஞர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு சென்றதை சிலர் கண்டுள்ளனராம்.

இச்சம்வவம் தொடர்பாக எவரும் கைதாகவில்லை. ■

## "நாங்கள் சிங்க வம்சம்! நீங்கள்....?"

### புண்படுத்தும் விளம்பர வாசகங்கள்

கொழும்பு உட்பட நாட்டின் பெரும்பான்மை இன சமூகத்தாரின் பகுதிகளில் கவர்ச்சியையும் கிளர்ச்சியையும் தூண்டக்கூடிய வகையில் புதுவிதமான விளம்பரம் ஒன்று காணப்படுகிறது.

மதுச்சாலைகளிலும், மற்றும் பொது இடங்களிலும் தொங்கவிடப்பட்டுள்ள இந்த விளம்பரங்களில் பெரிய சிங்கத்தின் தலை காணப்படுகிறது. அத்துடன் "அபி சிங்ஹ வங்சய ஒப...? (நாங்கள் சிங்க வம்சம்-நீங்கள்...?)" என்ற கேள்வியுடனும் ஆங்கிலத்தில் (IS THERE A LION IN YOU?) என்றும் காணப்படுகிறது. லயன் பியர் எனப்படும் குடிபான நிறுவனமே இத்தகைய விளம்பரங்களைத் தொங்க விட்டுள்ளது.

இவ்விளம்பரத்தை அவதானிக்கும் சமூக நல நோக்குள்ள நடு நிலையாளர்கள், இது சிங்கத்துடன் சம்பந்தமில்லாத ஏனைய சமூகத்தினரை இன ரீதியில் துன்புறுத்தும் வகையில் அமைந்துள்ளதா? என்று ஐயம் தெரிவிக்கிறார்கள்.

ஏனென்றால், நாங்கள் சிங்க வம்சம், உங்களில் சிங்கம் இருக்கிறதா? என சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் காணப்படும் கோஷம் இனத்துவேஷத்தைத் தூண்டுவதாக உணர முடிகிறது.

நிரந்தர அமைதிக்காக உழைக்கும் ஒரு அமைப்பினால் சமீபத்தில் கண்டியில் நடாத்தப்பட்ட ஒரு கருத்தரங்கிலும் பக்கச்சார்பற்ற ஒரு சிங்கள சமூகத்தவரால் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. சிங்களவரைத் தவிர ஏனைய சமூகத்தவரின் மனதைப் புண்படுத்தும் படியாக இவ்விளம்பரம் அமைந்திருக்கிறது என்று அவர் வேதனைப்பட்டார்.

நாளை தமிழ்ப் பிரதேசங்களில் புலியின் படத்துடன் "நாங்கள் புலி வம்சம், நீங்கள்...? உங்களுக்குள் புலி இருக்கிறதா? என்று விளம்பரங்கள் தொங்கவிடப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை!" என்றும் அவர் மேலும் சொன்னார். ■

## வன்னியிலிருந்து தொலைத்தொடர்பு

வன்னியில் சர்வதேச (செய்மதி) தொலைத் தொடர்பு சேவையினை புலிகள் நடத்தி வருகின்றனர் என்பது தெரிந்ததே.

ஏற்கனவே புதுக்குடியிருப்பில் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை இயங்கிவந்தது. தற்போது கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலும் மற்றொரு நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தொலைபேசி இலக்கம், 0087 3761932798. புதுக்குடியிருப்பு தொலைத் தொடர்பு நிலைய தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கம்: 0873761932760.

சர்வதேச தொலைத்தொடர்பு நிலைய நிர்வாக இயக்குநராக சு.சோமசுந்தரம் கடமையாற்றுகிறார். ■

## பிரிட்டிஷ் நிபுணர்கள் பாதுகாப்புப் பயிற்சி

'பயங்கரவாதத்தை' முறியடிப்பது தொடர்பான பயிற்சிகளை அளிக்கும் நோக்குடன் பிரிட்டிஷ் இராணுவ நிபுணர் குழு ஒன்று இங்கு வந்திருந்ததாக அறியப்படுகிறது.

இக் குழுவினருக்கு கொழும்பு நகரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் முப்படைகளினதும், பொலிசாரினதும் தற்போதைய நடவடிக்கைகள் பற்றியும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டதாகவும் ஆங்கில வார ஏடான 'சண்டே ரைம்ஸ்' தகவல் கூறுகிறது.

பலதரப்பட்ட நெருக்கடிகளையும் சமாளிக்கும் முறைகளைப் பற்றி பாதுகாப்புத் தரப்பினருக்கு பிரிட்டிஷ் நிபுணர்கள் குழுவினர் விளக்கம் கொடுத்ததாகத் தெரிகிறது.

வின்சன்ற் ஃபீன், ரோகர் நைற், ரின் ஒ கொண்ணர், மேஜர் ரின் கோல்ஸ் ஆகிய-பல பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளே இவர்கள். பயிற்சிகளை முடித்துக் கொண்டு இவர்கள் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். ■

## தகவலும் சுற்றிவளைப்பும்

### ஒன்பது புலிகள் பலி

அம்பாறை-கஞ்சிகுடிச்ச ஆறு, காஞ்சிரங்குடாப் பகுதிகளில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட மோதல்களின் விளைவாகக் கொல்லப்பட்ட ஒன்பது புலிகளின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகப் புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கடுமையாகக் காயப்பட்டு வீழ்ந்து கிடந்த ஒரு புலி உறுப்பினரைப் படையினர் கைது செய்துள்ளனர்.

புலிகள் காஞ்சிரங்குடாப் பகுதியில் இரகசிய ஆலோசனைக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளதாகப் படையினருக்குத் தகவல் கிடைத்தது. அதனையடுத்து படையினர் பெருந்தொகையாகத் திரண்டு அப்பகுதியைச் சுற்றி வளைத்தனர். அதிரடித் தாக்குதலும் நடத்தினர்.

இதன்போது புலி உறுப்பினர் இருவரும் T-56 ரக துப்பாக்கி 4, மகஸீன் 3, வானொலிப் பெட்டி 1, கைக்குண்டு 3 என்பனவும் வேறு பல பொருட்களும் கைப்பற்றப்பட்டதாகப் படையினர் தெரிவித்தனர். இச்சம்பவம் 02.03.99 அன்று இடம்பெற்றது. பலியானவர் களில் ஒருவர் மட்டுமே தமது உறுப்பினர். மற்றவர் ஆதரவாளர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

அம்பாறை சின்னவத்தை எனும் இடத்தில் 5.3.99 அன்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் மூண்ட மோதலில் புலிகளின் ஏழு சடலங்கள் படையினரால் கைப்பற்றப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் புலிகளிடம் கையளிக்கப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரில் ஏழு பேர் காயமடைந்தனர். கடுமையாகக் காயங்களுக்குள்ளான 4 பேர் கொழும்புக்கு விமானமூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு- வாகரையில் படையினர் பதுங்கியிருந்தபோது அவர்களது எச்சரிக்கையைக் கேளாது சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களைச் சுட்டுக் கொன்றதாகவும் அவர்கள் இருவரும் புலிகள்தான் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் 04.03.99 அன்று நடந்தது. ■

## மேயரில் ரெலோ கோபம்

### பெயர்ப்பலகை மாயம்!

மட்டக்களப்பு நகரப் பாலத்துக்கருகில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவை கடந்த 05.03.99 அன்று மாலை மாநகர முதல்வர் செழியன் ஜே.பேரின்பநாயகம் திறந்து வைத்தார்.

இந் நிகழ்ச்சியில் சுயேச்சைக்குழுவாக மாநகரசபையை ஆளும் ரெலோ மற்றும் புளொட் ஆகிய இயக்க நகர சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. முதல்வர் மட்டுமே ஆளும் கட்சி சார்பில் கலந்து கொண்டார்.

மாநகரப் பூங்கா என்று பெயர் சூட்டப்பட்டதே ரெலோவினரும், புளொட் இயக்கத்தினரும் எதிர்ப்புக் காட்டிப் பகிஷ்கரித்ததற்குக் காரணமாகும்.

இப் பூங்காவைப் பலியான இயக்க தமது உறுப்பினர்களின் நினைவாகத் 'தியாகிகள் பூங்கா' எனப் பெயரிடுமாறு ரெலோ இயக்கம் கேட்டிருந்தது. ரெலோ அதிபர் சிவாஜிலிங்கத்திடமிருந்து மாநகர முதல்வருக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. மாநகரப் பூங்கா என்று சூட்டப்பட்ட பெயரை தியாகிகள் பூங்கா என்று மாற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டபோது அதனை முற்றாக மறுத்து விட்டார் முதல்வர் செழியன் ஜே.பேரின்பநாயகம்.

அதனால் எதிர்ப்புத் தெரிவித்துத் தொடர்பைத் துண்டித்தார் சிவாஜிலிங்கம். அன்றிரவே மாநகரப் பூங்கா என்ற பெயர்ப் பலகை மாயமாய் மறைந்தது. இது குறித்து மாநகர முதல்வர் பொலிஸில் புகார் செய்துள்ளார். ●

## ரெலோவுக்கு சூடு

புளொட் ரெலோ முறுகல் நிலை தணிந்ததாக தெரியவில்லை. சில செய்திகள் வெளியே தெரியவராது உள்ளன.

24.02.99 அன்று ரெலோ உறுப்பினரான வீஜி என்பவர் சுடப்பட்டார். வவுனியா முதலியார் குளத்தில் வைத்தே அவர் சுடப்பட்டார்.

பின்னர் படையினரின் உதவியோடு சென்ற ரெலோவினர், அவரை மீட்டு வந்தனர்.

24.02.99 இரவு முழுவதும் புளொட் முகாமிலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ■

## விலகியவர் சுடப்பட்டார்

### மட்டக்களப்பில் சம்பவம்

புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியிருந்த நபர் ஒருவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.இன் ராசிக்குழுவான துணைப்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார். மறுநாள் அவர் கொம்மாதுறையில் சுடப்பட்டு அவரது சடலம் வீதியில் போடப்பட்டுக்கிடந்தது.

சுடப்பட்ட நபர் கொடுவாமடுவைச் சேர்ந்த இ.முருகமூர்த்தி (21) என்றும் பிடிக்கப்பட்டு விசாரித்தபோது, அவர் கொடுத்த தகவலில் வேறொரு இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டொன்றும் சயனைட் வில்லையொன்றும் கைப்பற்றப் பட்டதாகவும் ராசிக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. சுடப்பட்ட பின்னர் அவரது சடலத்தின் அருகே கைக்குண்டும், கழுத்திலே சயனைட் குப்பியும் காணப்பட்டன. ராசிக்குழுவினரே சயனைட், கைக்குண்டு ஆகியவற்றை ஆகியவற்றை வைத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

தமது இயக்கத்திலிருந்து விலகியவர் என்பதால் புலிகள் அவரது சடலத்தை ஏற்க மறுத்துவிட்டனர்.

பிடித்துச் செல்லப்பட்டு மறுநாள் அதிகாலையிலேயே அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். உறவினர்கள் சடலத்தைப் பொறுப்பேற்றுச் சென்றுள்ளனர்.

புலிகள் இயக்கத்தில் இருந்து விலகியிருந்த அவர் படையினரிடம் சரணடைவதற்கு எண்ணியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு-திமிலைதீவில் க.இராஜதுரை (59) எனும் வயோதிபரின் வீட்டிற்குள் 06.03.99 அன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பிந்தி கைக்குண்டொன்று எறியப்பட்டதில் காயப்பட்டு அவர் மரணமானார். இச்சம்பவம் தொடர்பாக ராசிக்குழுவான துணைப்படை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ■

## புலிகள் வந்துள்ளனர்–யாழ் தளபதி தெரிவிப்பு

யாழ் குடாநாட்டில் சுமார் 200 புலிகள் ஊடுருவி இருக்கலாம் என்று யாழ்ப்பாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லோஹன் குணவர்த்தன கூறியிருக்கிறார். ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியின்போதே அவர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் 200 பேரைத் தவிர, 150 ஆதரவாளர்களும் தகவல் தெரிவிப்போரும் இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இராணுவத் தலைமைப்பீட அதிகாரிகளில் சிலர், விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாக வெளியான வதந்திகள் எதுவித ஆதாரமுமற்றவை என்று ஜெனரல் குணவர்த்தன கூறினார்.

"அரசாங்கம் புலிகளுடன் பேசுவதாக இருந்தால், இதில் இராணுவத் தலைமைப் பீடம் கட்டாயம் பங்கெடுத்தேயாக வேண்டும்!" என்றும் அவர் வலியுறுத்தினார். ■



படிப்பகம்

www.padippakam.com

# சேது சமுத்திரத் திட்டம்

## நிதி ஒதுக்கக் கோரிக்கை

சேது சமுத்தரத் திட்டத்தை முன்னெடுக்க பாரதிய ஜனதா முன்வந்துள்ளமை தெரிந்ததே. இத்திட்டத்தை துரிதமாக முன்னெடுக்க நிதி ஒதுக்குமாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கோரியுள்ளார்.

"மத்திய வரவு செலவுத் திட்டத்தில் சேது சமுத்திரத் திட்டம் குறித்த அறிவிப்பு அரை குறையாக உள்ளது. அந்தத் திட்டத்தை முழுமையாகச் சேர்த்து, 9வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நிதி ஒதுக்க வேண்டும்!" என்று தமிழக முதல்வர் கருணாநிதி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய மத்திய அரசு வரவு செலவுத் திட்டம் சென்ற மாதம் 27ம் திகதி 11 மணிக்கு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பகல் 12.45 மணியளவில் பட்ஜெட் குறித்து சென்னையில் முதல்வர் கருணாநிதி நிருபர்களிடம் கருத்துக் கூறினார். கோட்டை அலுவலகத்தில் நிருபர்களிடம் முதல்வர் கூறியதாவது:

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் இருந்தே- 57ம் ஆண்டில் இருந்தே சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் தி.மு.க.குரல் கொடுத்து வருகிறது. இப்போது வரவு செலவுத்திட்டத்தில் அது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுகூட "இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்கப் போகிறோம்!" என்று கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு விட்டன. இனிமேல் சாத்தியக் கூறுகளைப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஐக்கிய முன்னணி அரசில், டி.ஜீ.வெங்கட்ராமன் தரைவழிப் போக்கு வரத்து அமைச்சராக இருந்தபோது, நாக்பூரில் உள்ள 'நீரி' நிறுவனத்தின் மூலம் ஆய்வு நடத்தச் சொல்லி உத்தரவிடப்பட்டு பணி நடைபெற்றது. எனவே மறுபடியும் ஆய்வு நடத்தத் தேவையில்லை.

இத்திட்டத்திற்கு நேரடியாக நிதி ஒதுக்கி, 9வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட வேண்டும், என்று தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலும் இப்போது நடைபெற்ற திட்டக் குழுக் கூட்டத்திலும் தமிழக அரச சார்பில் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். ஆனால், இப்போது மத்திய அரசின் அறிவிப்பு அரைகுறையாக உள்ளது. அந்தத் திட்டத்தை முழுமையாகச் சேர்த்து நிதி ஒதுக்க வேண்டும்! என்று கலைஞர் கருணாநிதி கோரியுள்ளார்.

சேது சமுத்திரத் திட்டம் முழுமையாக செயற்படுத்தப்பட்டால் இலங்கையின் கொழும்பு, காலி துறைமுகங்களுக்கு பெரும் வருமான இழப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு வைத்தியசாலை

## விலைபோகும் இலக்கங்கள்

மட்டக்களப்பு வைத்தியசாலையில் பல மோசடிகள் இடம்பெற்று வருவதாக பரவலான புகார் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு சிகிச்சைகளுக்காக இலக்கத் துண்டுகள் பெற்றுக்கொள்ளும் நோக்கில் வைத்தியசாலைச் சுற்று வட்டாரத்தில் இராப் பொழுதைக் கழித்து விட்டு நோயாளிகள் காலையில் நேரத்துடனேயே வைத்திய சாலைக்குச் சென்ற போதிலும் இலக்கத் துண்டுகளைப் பெறமுடிவதில்லையாம். தூர இடங்களில் இருந்து அதிகாலை வேளையிலேயே இந்த வைத்திய சாலைக்குச் சென்றாலும் அங்கே இலக்கங்கள் பெற முடிவதில்லையாம்.

காரணம் அங்கு வழங்கப்படும் நாளாந்த இலக்கத் துண்டுகளில் கூடுதலானவற்றை அங்குள்ள ஊழியர்கள் சுருட்டி வைத்துக் கொண்டு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளை ஒரு வழிபண்ணி பணம் கறந்துகொண்டு இலக்கத் துண்டுகளைக் கொடுத்து விடுகிறார்களாம்.

இவ்விதம் விற்கப்படும் இலக்கத் துண்டுகளின் விலை ரூபா 10 இல் இருந்து தகுதியைப்பொறுத்து ரூபா நூறுவரை உயருகிறதாம். வைத்தியசாலைக்கு வரும் அவசர மற்றும் அவசிய நோயாளிகளை இனம்கண்டு இலக்கத் துண்டுகளை அதிக விலைக்கு விற்பதில் அங்குள்ள ஊழியர்கள் பலே கில்லாடிகள் என்றும் கூறப்படுகிறது.

வைத்தியசாலை உயர் மட்டங்கள் கவனத்தில் எடுக்குமா?

# ஊதியம் நிறுத்தம்

(நமது நிருபர்)

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சிற்றூழியராகப் பணிபுரியும் 09 பேருக்கு வழங்கப் பட்டுவந்த சம்பளம் கடந்த ஆகஸ்ட் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த 09 பேரும் நிவாரண அடிப் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களாவர். சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளதால் இவர்கள் பலத்த சிரமங்களை மேற்கொண்டு தமது கடமைகளை நிறைவேற்றிவருகின்றனர்.

இவர்களுக்கான சம்பளத்தை கல்முனை கல்விக்காரியாலயமே வழங்கிவந்தது. புதிதாக சம்பளம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதனை வழங்குவதில் காரியாலயம் இழுத்தடிப்புச் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கலாசாலையில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பத்து மாதக் கடனும் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

# வாகனங்களுக்கு தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் வாகன அணிகள் செல்லும்போது தினந்தோறும் காலையும் மாலையும் இரு தடவைகள் பொதுப் போக்குவரத்தைப் படையினர் தடை செய்து விடுகின்றனர். இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்களின் போக்கு வரத்து முற்றாக ஸ்தம்பித்து விடுகிறது என்பது வாசகர்கள் அறிந்ததே.

முன்னரெல்லாம் படையினரின் வாகன அணிகள் சென்று முடியும் 15-20 நிமிடங்களே பொதுப் போக்குவரத்துத் தடைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது படையினரின் வாகனங்கள் சுமார் 50 மைல் தொலைவிலுள்ள மட்டக்களப்பு அல்லது பொலன்னறுவையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் போதே பொதுமக்களின் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுவிடுகிறது. இதனால் ஆயிரக்கணக்கான உள்ளூர் மற்றும் தொலை தூரப் பயணிகள் தெருவோரங்களில் மணிக்கணக்காகக் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. படையினர் விரும்பி அனுமதித்தால்தான் பயணங்களைத் தொடர முடியும்.

ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கத்திற்குத் தெருக்களைக் கடக்க முடியாதளவு போக்குவரத்து தடை செய்யப்படுவதை அனுபவித்தால் மணிக் கணக்கில் அது பெரும் கொடுமையாக உள்ளது.

உண்மையிலேயே வாகனப் போக்குவரத்தைத் தடை செய்து படையினருக்கு வழி விட நினைத்தால் 5-10 நிமிடங்கள் வரைப் போதுமானது. ஆனால் மணிக் கணக்காக வேண்டுமென்றே இவ்வாறு போக்குவரத்துத் தடை விதிக்கப்படுவதால் இதுதான் பொது மக்களின் 'விதி'யோ என்று மனம் நோக வேண்டியுள்ளது.

மக்களின் பிரதிநிதிகளான தமிழ், முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கவனத்தில் எடுப்பார்களா?


## உலகத் தமிழ் பேனாநண்பர் இதழ்

உங்கள் கைகள் எங்கள் கைகளுடன் சேர்ந்து ஒலியை எழுப்பட்டும். அது எட்டுத் திக்கும் ஒலிக்கட்டும். நீங்கள் உங்களை இணைத்துக் கொள்வதற்கும், உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

N.Suganthini
Arthur Van Schendellan-10
6711 Dc-Ede
THE NETHELANDS

## ALPHA TELE COM CARD-SWISS

சுவிஸ் நாட்டில் அல்பா தொலைபேசி அட்டைகளின் மொத்த விற்பனையாளர் V.T. சீலன்.
சுவிஸில் ஏனைய மாநிலங்களுக்கும் விற்பனை முகவர்கள் தேவை.
18 வீதம்வரை கொமிஷன் வழங்கப்படும்.

-மேலதிக விபரங்களுக்கு-
V.T. SEELAN
MOSS SRT-01
8030 - ZURICH
SWISS.

ALFA TELE COM CARD


Tel : 01-4812521
Natel : 079/ 4322158
K.KAMAL 079/3457345



கட்டுரைப் போட்டி **"பிறந்த பதியிலும் சிறந்ததொன்றில்லை"**

ஈழமண்ணின் பெருமைகளை எழுத்து வடிவில் கொண்டுவருவது இன்றைய கால கட்டத்தில் வரலாற்றுக் கடமையாகும். நீங்கள் பிறந்த ஊரின் வரலாறு, பெருமை, சிறப்பு, வாழ்ந்த பெரியார்கள் பற்றி ஒருங்கே எழுதி பரிசு பெறுங்கள்! முதல் மூன்று கட்டுரையாளர்களிற்கு தலா 100 கனடிய டொலர்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும். கட்டுரை அனுப்பும் முடிவுத் திகதி ஏப்ரல் 30ம் திகதி ஆகும். அனுப்ப வேண்டிய முகவரி:

Athavan Publications, 371 Orton Park Road Unt-120,
Scarborough, Ont - Canada-MIG3VI

## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

வேலணை மேற்கு
தோற்றம் 27.12.1927-மறைவு 14.02.1998
திதி 05.03.1999

கலண்டரில் ஆண்டொன்று அகன்றது. நிலமிசை நின் ஊனுடல் தான் இல்லை. அல்லிலும் இருட்டிலும் எம்மோடு இருக்கின்றீர். அல்லலிலும் தனிமையிலும் தலை தடவிப் பேசுகின்றீர். குலம் முழுதும் நினைச் சுமந்து செல்கின்றோம். எம் வாழ்வின் பலம் நீங்கள் தான் ஐயா.

தங்கள் நினைவோடு வாழும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள், உற்றார், உறவினர் நண்பர்கள்.

*சி.குகநாதன்*
*18/3 Dr.E.A.Cooray Mawatta,*
*Colombo-06.*
*T.P. 555926*

**அமரர் கந்தையா சிவசரணம்**
(முன்னாள் உரிமையாளர் -லங்காஸ்டோர்ஸ், தெகிவளை)



## நினைவஞ்சலி

மலர்வு 24.06.1961 உதிர்வு 11.03.1989

**செல்வி சுப்பிரமணியம் றதிகுமாரி**
தோப்பூர்-அச்சுவேலி

அன்பின் ரதி உருவே
ஆறாத்துயரில் எம்மை
மூழ்க விட்டு மீளாத்துயில்
கொண்ட தேனோ உன்
உடல்தான் அழிந்ததம்மா
உன் ஆத்மா அழிவதில்லை,
மீண்டும் உனக்கு பிறப்பில்லை
பகவான் தாமரை மலரடியில்
தீபச்சுடரொழியாய் சுடர் விடுவாய்.
இதயமதில் பதிந்துவிட்ட உன் உருவம்
உன் உறவு, எமது உயிர் உள்ள வரை வாட்டும்!
வதைக்கும்! ஆறாத்துயருடன்

*பெற்றார், அண்ணன், தங்கை, தம்பி.*
*உற்றார்-உறவினர்.*


## இலவச, சலுகை அடிப்படையில் Computer கல்வி பயில

DCS
DACA CONNECTION SYSTEMS (PRIVATE) LIMITED

**College of Computer Technology**
*(British ACP Recognized Training Centre)*

7வது முறையாக வழங்கப்படும்

1000 புலமைப்பரிசில் திட்டம் 1999/2000

1. DIPLOMA IN ELECTRONIC DATA PROCESSING (8 MONTHS)
2. DIPLOMA IN COMPUTER TECHNOLOGY (SOFTWARE) (12 MONTHS)

மேலதிக விபரங்களிற்கு

**Branches**

| |
|---|
| DCS<br>No. 399 1/1 Galle Road, Colombo-4, TP :-589899 |
| DCS<br>No. 171,Trinco Road, Batticaloa TP :- 065-23990 |
| EDMS<br>No. 156,Green Road, Trincomalee TP- 026- 21805 |
| DCS<br>M.P.C.S Sinhala Divison, Station Rd. Vavuniya |
| DCS<br>124/2 Palaly Road, Thirunelvely, Jaffna TP 021-2096 |
| DCS<br>No 89; Main Street, Kinniya - 02. |
| Very Soon at Kathankudy |

★ விண்ணப்பங்களின் அடிப்படையில் புத்தளத்திலும் எமது நிலலயம் ஆரம்பிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி
15.03.99 வரை நீடிக்கப்பட்டுள்ளது

Member of ACTOS

மட்டு நகரில் கணணிக் கண்காட்சி

* காலம் : மார்ச் 12,13,14,15
* இடம் : தேவநாயகம் மண்டபம், பார் வீதி, மட்டக்களப்பு.




## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**அமரர் உயர் திரு. சின்னத்தம்பி கனகசபை**
(உரிமையாளர் சிவாஸ்ரோர்ஸ்) ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

மலர்வு-12.06.1928 உதிர்வு- 13.02.1999

இறவாத உமக்காய் மறவாத எங்களின்
இதயம் நொந்து கொண்டிருக்கிறது.

எம் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும், அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 1999.03.15ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

துயருற்றிருக்கும்

*மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.*
*64/19' போனா விஸ்டா கட்டடத்தொகுதி, மோதரை.*
031-3315338(சுவிஸ்)-416-7424824(கனடா)-02151392981(ஜேர்மன்)-00441814221987 (லண்டன்)


## மனோதத்துவ வைத்தியம்

வவுனியா விலாசம் மாற்றப்பட்டுள்ளது

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85%, தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். தாழ்வு மனப்பான்மையை 90 நிமிடத்தில் நீக்கி, நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்**

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உடல் பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மனப்பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

**வவுனியாவில் மார்ச் 13,14,15 திகதிகளில்**

முன்கூட்டியே பதிவு செய்யவும் HOTEL VASANTHAM,
40, கண்டி வீதி, வவுனியா. T.P.024-22615, 024-22607, 024-22366

**கொழும்பில் மார்ச் 20 முதல் 25 வரை**

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL STREET, COLOMBO-13
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) T.P. 338165, 338166, 338164 FAX: 338161.
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

**கல்முனையில் ஏப்ரல் 4,5ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தெற்கில் 'தேர்தல் கோஷம்' வன்னியில் 'யுத்த கோஷம்'

வன்னியில் படைக் குவிப்பு பற்றியும், தேர்தலை முன்னிட்டு தற்காப்பு நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஈடுபட்டுள்ளது என்றும் கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம்.

பாரிய நடவடிக்கை எதனையும் வன்னியில் தற்போது மேற்கொள்ள முடியாது. எனவே பின்னரங்க நிலைகளை கெட்டிப்படுத்தி, புலிகள் ஊடுருவக்கூடிய ஓட்டைகளை அடைக்க முயற்சிக்கலாம் என்றும் கணிப்புக் கூறினோம்.

அதேபோலவே போர் முனை காட்சிகள் விரிந்துள்ளன.

மாங்குளத்திலிருந்தோ, ஒட்டிசுட்டானிலிருந்தோ படையினர் முன்னோக்கி நகரவில்லை.

வன்னிப்போர் முனையில் முன்னரங்க சண்டை முனைகள் மூன்று.

1) மாங்குளம்,
2) ஒட்டி சுட்டான்
3) பரந்தன்.

இந்த முன்னரங்க சண்டை முனைகளில் புலிகளது மறிப்புச் சண்டை அரண்களை மேவினால்தான் படையினர் தொடர்ந்து முன்னேற முடியும்.

வவுனியா, யாழ் தரைப் பாதையை திறப்பதானால் மாங்குளம் முனையிலும், பரந்தன் முனையிலும் புலிகளது மறிப்புச் சண்டைக்கான அரண்களை தகர்த்தால் மட்டுமே தொடர்ந்து முன்னேறலாம்.

ஆனால் இந்த மூன்று முனைகளிலும் படையினரது நகர்வை குறிவைத்து புலிகளது பீரங்கிப் படையணிகளும், ஏனைய அணிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள புவியியல் நிலையும் மாங்குளம் முனையில் தொடர்ந்து முன்னேறுவதற்கு தற்போதைக்கு சாதகம் அல்ல.

அதேசமயம் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகி வருகின்றனர் என்ற செய்தியும் படையினருக்கு எட்டியுள்ளது.

எந்த முனையில் குறிவைக்கிறார்கள் என்பது தெரியாது போனாலும், புலிகளின் நீண்ட அமைதி பாரிய புயலுக்குரிய முன்னறிவிப்பே.

வவுனியா-யாழ் சாலையைக் கைப்பற்றும் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின் இலக்கு இன்னமும் மாறவில்லை. பெயர் தான் வேறு.

எந்தப் பெயரில் படையினர் நடவடிக்கையை தொடர்ந்தாலும், வன்னிச் சமர் என்பதே பொதுப் பெயர். வன்னிச் சமரை முதலில் ஆரம்பித்தவர்கள் படையினரே.

அந்தச் சமரின் இராணுவ நோக்கம் புலிகளை பலவீனமாக்கி ஓரம் கட்டுவதும், வடபகுதி படை முகாம்களுக்கான தரை வழி விநியோ கப்பாதையை திறப்பதுமே.

அதேசமயம் தெற்கில் தேர்தல் வெற்றிகளைப் பெறுவதற்கு அதனை பிரசாரமாக பாவிக்கும் எண்ணமே அரசாங்கத்தின் பிரதான அரசியல் நோக்கங்களில் ஒன்றாகும்.

வன்னிச் சமரில் புலிகளை வென்றால் தமிழ் பேசும் மக்கள் தரப்பில் பலமான சக்திகள் இனி தோன்றவே முடியாது, அதன்பின்னர் தமது நோக்கங்களை நிறைவேற்றலாம் என்பதால் பேரினவாத சக்திகளும் இச் சமருக்கு பூரண ஆதரவு தெரிவித்து வருகின்றன.

அரசின் அரசியல், இராணுவ, பேரினவாத நலன்களின் உந்து சக்தியுடன் நடக்கும் சமரின் பெயர்கள் மாறலாம். நோக்கங்கள் மாறவில்லை.

எனவே, 'ஜயசிக்குறுய்' என்ற பெயரில் ஆரம்பித்து, இப்போது பல பெயர்களில் தொடரும் வன்னிச் சமர் எதிர்வரும் மே மாதம் 13ம் திகதியுடன் இரண்டு ஆண்டுகளை எட்டப்போகிறது.

இரண்டு ஆண்டுகளாக தம்மால் குறித்த இலக்கை எட்ட முடியவில்லையே என்பது கௌரவக் குறைச்சல் என்பதால் தான் பெயர் மாற்றப்பட்டது.

ஒரு யுத்தம் பல சமர்களை கொண்டது. ஒரு சமர் பல சண்டைகளைக் கொண்டது.

வன்னிச் சமரில் புலிகளும் பல சண்டைகளையும், தாக்குதல்களையும் பல்வேறு பெயர்களில் நடத்தியுள்ளனர். படையினர் தற்போது 'ரிவிபல', 'யுத்த கோஷ' என்ற பெயர்களில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வன்னிச் சமரின் பிரதான இலக்கை அடைவதற்கான சண்டைகள் என்று கூறலாம். இவை தாக்குதல், தற்காப்பு, மற்றும் அரசின் ஆதாயம் என்பவை கருதியும் தீர்மானிக்கப்படலாம்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள 'யுத்த கோஷ' சண்டையின் நோக்கம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பது.

வவுனியா-யாழ் சாலையில் படையணிகளது பின்னரங்கத்தையும், விநியோகப் பாதையையும் பாதுகாப்பது ஒரு நோக்கம். இது தற்காப்பு தந்திரோபாயம்.

முக்கியமான மற்றொரு நோக்கம்; ஐந்து மாகாண சபைத் தேர்தல்களுக்கான பிரசார ஆதாயமாக பாவிப்பது. இது பொ.ஜ.முன்னணி அரசின் அரசியல் தந்திரோபாயம். வன்னிச் சமரின் முன்னரங்க சண்டை முனைகள் ஊடாக படைகளை நகர்த்தாமல், பின்னரங்கமான வவுனியா பூவசரங்குளம் ஊடாக படைகள் நகர்த்தப்பட்டன.

வவுனியா மன்னார் சாலையில் வவுனியாவில் இருந்து மேற்காக சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பது பூவரசங்குளம். அது ஏற்கனவே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும்.

பூவரசங்குளத்தில் இருந்து வடக்கே சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதுதான் இரணை இலுப்பைக்குளம்.

இந்த பத்து கிலோ மீட்டர் தூரத்தைத்தான் மார்ச் 06ம் திகதி படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

எவ்வித தடைகளும் இன்றி வீதிகள் வழியாகவே அதிகாலையில் படைகள் நகர்ந்து சென்று இரணை இலுப்பைக் குளத்தை கைப்பற்றின.

அதற்கு முன்னர் படையினரின் வேவு அணிகள் இரவோடு இரவாக சென்று நோட்டம் பார்த்திருக்கலாம். புலிகளோ, புலிகளது காவல் அரண்கள் எதுவுமோ அங்கில்லை என்று தெரிந்த பின்னர், அதிகாலையில் நகர்வுகள் நடந்திருக்க வேண்டும்.

இப் பகுதிகளில் 24 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. எட்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர். இங்கு புலிகளது முகாம்கள் எதுவும் இருக்கவில்லை. பாஸ் வழங்கும் அலுவலகமும், வேறு சில நிர்வாக அலுவலகங்களுமே இருந்தன.

இரணை இலுப்பைக் குளத்தை கைப்பற்ற முன்னேறும்போதோ, கைப்பற்றிய பின்னரோ ஒரு தோட்டா கூட படையினரால் செலவிடப்படவில்லை. கட்டடங்களுக்கோ, பொது மக்களுக்கோ அப்பகுதியில் எவ்வித சேதமும் ஏற்படவும் இல்லை.

இரணை இலுப்பைக் குளத்தை படையினர் கைப்பற்றியிருப்பதால் புலிகளுக்கு இராணுவரீதியான பாதகம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

முன்னரங்க சண்டை முனைகளில் படையினர் முன்னேறும் போதுதான் பாதகம் ஏற்படும்.

புலிகள் தாண்டிக்குளத்தில் 1997 ஜூன் மாதத்தில் ஊடறுப்பு அழித்தொழிப்பு சமர் ஒன்றை நடத்தினர். 'ஜயசிக்குறுய்' படைகளை வவுனியா யாழ் சாலையில் முன்னேற அனுமதித்துவிட்டு, பின்னரங்கமும், படையினருக்கான விநியோக மையமுமான தாண்டிக்குளத்தில் ஊடறுப்பு நடந்தது. படைத்தரப்புக்கு பேரிழப்பு ஏற்பட்டது.

தற்போது வவுனியா-யாழ் சாலையில் மாங்குளம் வரை படையினர் நிலை கொண்டுள்ளனர். அதனால் பின்னரங்கமான தாண்டிக்குளம், ஓமந்தை போன்ற பகுதிகளுக்குள் புலிகள் மீண்டும் ஓர் ஊடறுப்பை நடத்தலாம். மாங்குளம் வரை உள்ள படைகளை ஓமந்தையில் இரண்டாக பிளந்து பாரிய அழிப்பொன்றை நடத்தலாம் என்று படைத்தரப்பு கருதியிருக்கிறது.

ஆனையிறவு முதல் கிளிநொச்சி வரை நிலைகொண்டிருந்த படையினரை பரந்தன் சந்தியில் ஊடறுத்து இரண்டாக பிளந்து, கிளிநொச்சியில் நிலை கொண்டிருந்த படையணிகளை புலிகள் முற்றுகையிட்டு தாக்கினர். ஓயாத அலைகள் 02 இல் அதுதான் நடந்தது.

அப்படியொரு ஊடறுப்பை ஓமந்தை, தாண்டிக்குளப் பகுதிகளில் புலிகள் மேற்கொள்ளாது தடுக்கவே முதற்கட்டமாக அங்கிருந்த பொலிசார் திரும்பப் பெறப்பட்டு, இராணுவத்தினர் கொண்டு சென்று நிறுத்தப்பட்டனர்.

பொலிசார் பணியாற்ற மறுத்ததால்தான் திரும்பப் பெறப்பட்டதாகவும், இராணுவம் அனுப்பப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. அது தவறான செய்தி என்று சென்றவாரம் கூறியிருந்தோமல்லவா. நமது கணிப்பு சரியாகவே இருந்திருக்கிறது.

மன்னார் சாலையில் இருந்து கொண்டு செல்லப்பட்ட படையினரில் ஒரு பகுதியினரே இரணை இலுப்பைக் குளத்தை கைப்பற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

**சந்திரிக்கா அரசின் சமாதானத்திற்கான யுத்தம்!**

**1997 பெப்ரவரி உள்ளூராட்சித் தேர்தல் 'ஒப்பரேசன் எடிபல'**

**1999 வடமேல் மாகாணசபைத் தேர்தல் 'ஒப்பரேசன் ரிவிபல'**

**1999 மார்ச். ஐந்து மாகாணசபை தேர்தல் 'ஒப்பரேசன் யுத்த கோஷ'**




ஆக, பின்னரங்க நிலையை கெட்டிப்படுத்தியதோடு, பின்னரங்க நிலையை நோக்கி மேற்குப் புறமிருந்து புலிகள் வருவதை தடுப்பதற்கான நகர்வையும் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா-யாழ் சாலையில் உள்ள படையினரை கிழக்குப் புறமிருந்து புலிகள் ஊடறுப்பதை தடுப்ப தற்காகவே ஒட்டிசுட்டான்வரை தமது நிலைகளை படையினர் நீட்டினர்.

இப்போது மேற்குப் புறமாக தமது நிலைகளை நீட்டியுள்ளனர்.

படையினர் மேற்கொண்டுள்ள இன்னொரு நடவடிக்கை அவர்களது தற்காப்பு தந்திரோபாயத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இரணை இலுப்பைக் குளம் சென்ற படையினர், மூன்று முறிப்பு பகுதியில் உள்ள படையினருடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

எனவே, தற்போது வவுனியா-யாழ் சாலையில் உள்ள கனகராயன் குளம் வரை பூவரசங்குளத்தில் இருந்து இராணுவ வேலி போல் படை நிலைகள் அமைந்துள்ளன.

கிளிநொச்சியில் இருந்தோ, மன்னார் மாவட்டத்திலிருந்தோ புலியணிகள் பாய்ந்து வந்து படையினரின் பின்னரங்க பகுதிகளுக்குள்ளும், விலாப்பகுதிகளுக்கும் ஊடுருவுவதை தடுப்பதே இதன் முக்கிய பயன்பாடாகும்.

ஆனால்,பூவரசங்குளத்திலிருந்து கனகராயன் குளம் வரையான குறுக்குத் தூரம் 37 1/2 கிலோ மீட்டர். இத்தனை தூரமும் அங்குலம் அங்குலமாக படையினர் நிலைகொள்ள முடியாது. எனவே, ஓட்டைகள் இருக்கவே செய்யும்.

இரணை இலுப்பைக் குளம், மூன்று முறிப்பு போன்றவை காடு சார்ந்த பகுதிகள். அதனால் படையினர் நிலைகொண்ட பின்னர் தமக்கு வசதியான தருணங்களில் புலிகள் தாக்குதல் நடத்த சந்தர்ப்பம் இருக்கிறது.

தற்காப்பு தந்திரோபாய அடிப்படையில் படையினருக்கு தற்போதைய நகர்வால் பயன் உண்டு.

அதேசமயம் புலிகளுக்கும் படையினரின் இத்தகைய நடவடிக்கையால் பயன் இருக்கிறது.

படையணிகள் இவ்வாறு அகலக்கால் வைப்பதால்,வவுனியா-யாழ் சாலையில் படையினரின் மூர்க்கமான ஒன்று குவிப்புக்கு ஆட்பற்றாக்குறை இருக்கும். முக்கியமான முன்னரங்க சண்டை முனைகளில் படையினரின் செறிவும் அதிகமாக இருக்காது.

வவுனியா-யாழ் சாலையில் படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திய புலிகள், படையினர் அந்தச் சாலையின் கிழக்குப் பக்கமாக உட்பாதைகளில் அகன்றும், நீண்டும் நிலைகொள்ள முயன்றபோது, தமது எதிர்ப்பை தளர்த்தி அனுமதித்தனர்.

தற்போது வவுனியா,யாழ் சாலையின் மேற்குப் புறமாக படையினர் அகன்று நீண்டு நிலை கொண்டு, தமது அணிகளை அங்கு முடக்குவதும் புலிகளுக்கு சாதகம்தான். இரணை இலுப்பைக் குளத்தை படையினர் நினைத்திருந்தால் எப்போதோ பிடித்திருக்க முடியும்.

படையினர் நகரும் திசையெல்லாம் புலிகள் தமது அணிகளை அனுப்பி சண்டை போட முடியாது.

1997 இல் வவுனியா-மன்னார் சாலையை கைப்பற்றும் 'எடிபல' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புலிகள் மறிப்புச் சண்டை எதனையும் நடத்தவில்லை. அதனால் புலிகள் பலவீனமாகிவிட்டனர் என்று நம்பியே, 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டது.

'ஜயசிக்குறுய்'க்கு எதிரான புலிகளது சமர், முன்பைவிட புலிகளின் சண்டையிடும் ஆற்றல் உயர்ந்துள்ளது என்பதையே வெளிப்படுத்தியுள்ளது.

'எடிபல' நடவடிக்கையால் இராணுவ ரீதியில் தமக்கு பாதகமில்லை என்பதால், மோதலில் ஈடுபட்டு தமது அணிகளை சேதப்படுத்த பிரபாகரன் விரும்பவில்லை.



புலிகள் தமது வியூகங்களை பிரதானமாக இரண்டு அடிப்படையில் தீர்மானிக்கிறார்கள்.

ஒன்று: தமது ஆட்பலம்.

இரண்டாவது: படையினரின் சண்டைகளது நோக்கங்களை அறிந்துகொள்வது.

வன்னிப் போர் முனையில் படையினர் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் புலியணிகள் இழுபட்டால், பிரதான முன்னரங்க சண்டை முனைகளில் புலிகள் கவனம் செலுத்த முடியாது. ஆட்பலத்தையும் இழக்க வேண்டி ஏற்படும்.

எனவே, படையினர் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் என்ன நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகிறது? தற்காப்பு நோக்கமா? திசை திருப்பலா? தாக்குதல் நோக்கமா? என்பதையும், குறிப்பிட்ட நடவடிக்கையால் தமக்குள்ள சாதக, பாதகங்களையும் கணிப்பிட்டே புலிகள் தமது வியூகங்களை வகுக்கின்றனர்.

அதன் அடிப்படையில் தவிர்க்க வேண்டிய சண்டைகளைத் தவிர்த்துக் கொள்வதும், எதிர்க்க வேண்டிய நகர்வுகளை மட்டும் எதிர்த்து சண்டையிடுவதுமே புலிகளது வழக்கமாக இருக்கிறது.

ஒட்டி சுட்டான் வரை படையினர் முன்னேறியபோதும் புலிகள் சண்டையிடுவதை தவிர்த்தனர். தற்போது இரணை இலுப்பைக் குளம் பகுதியிலும் சண்டையிடாது தவிர்த்துள்ளனர்.

இதனை வைத்து புலிகள் பலவீனமாகிவிட்டதாக வெளியாகும் கணிப்புக்களை களநிலவரம் பொய்யாக்கப் போகிறது.

ஆட்பற்றாக்குறை என்பது புலிகளுக்குள்ள நீண்ட கால பிரதான பிரச்சனை என்பது இரகசியமல்ல. அதனால் புலிகளது தாக்குதல் பலம் சரிவடைந்துவிட்டதாக கருதுவது தப்புக் கணக்காகவே இருக்கும்.

படையினர்கூட அவ்வாறு தவறாக கணிக்கவில்லை. அவ்வாறு கணித்திருந்தால் முன்னரங்க நிலைகளால் முன்னேற முயன்றிருப்பர்.

தமது தற்காப்பை பலப்படுத்துவதில் படையணிகள் காட்டும் கரிசனமும், அதற்கான நடவடிக்கைகளும் புலிகளது தாக்குதல் திறன் குறித்த படைத்தரப்பின் எச்சரிக்கை உணர்ச்சியையே காண்பித்துள்ளன.

பாரிய ஜெயசிக்குறுய் நடவடிக்கையை நிறுத்திவிட்டு சிறு நடவடிக்கைகள் மூலம் புலிகளது கட்டுப்பாட்டு பகுதிகளை கைப்பற்ற படையினர் முனைவதாக ஆங்கில விமர்சகர் ஒருவர் கூறியுள்ளார்.

அது சரியான கூற்றல்ல. 'ஜயசிக்குறுய்' நிறுத்தப்படவில்லை. பெயர்தான் மாற்றப்பட்டுள்ளது. தவிர, 'ஜயசிக்குறுய்' என்ற பெயரில் சமர் நடந்தபோதும், சிறுக சிறுக முன்னேறும் நடவடிக்கைகள் பல நடந்தன. கனகராயன் குளம், புதூர், மூன்று முறிப்பு போன்ற பகுதிகளை அவ்வாறுதான் படையினர் கைப்பற்றினர். அந்தச் சண்டைகளுக்கு தனியாகப் பெயரிடப்படவில்லை என்பது தான் வித்தியாசம்.

எனவே, வன்னிச் சமர் இலக்கை அரசும், படைகளும் கைவிடவில்லை. ஆனால் 'யுத்தகோஷ' நகர்வு அந்த இலக்கை எட்டுவதற்கான கேந்திர முக்கியத்துவமிக்க நடவடிக்கை அல்ல தற்காப்பும், தேர்தல் பிரசார ஆதாயமுமே இதன் பயன்கள்.

ஆனாலும் ஜனாதிபதி சந்திரிக்கா புத்திசாலி. ஒரே பெயரில் சமரைத் தொடராது, ஒவ்வொரு பெயரில் தொடர்வதால் 'ஒவ்வொன்றும் வெற்றி' என்று தனித்தனி நடவடிக்கை போல கருதப்படுகிறது.

'ஜயசிக்குறுய்' என்ற பெயர் இருக்கக் கூடியதாக இரணை இலுப்பைக் குளத்தை பிடித்திருந்தால், அச் செய்தியில் விறுவிறுப்பு இருந்திருக்காது. எத்தனை காலமாக பிடிக்கிறார்கள்? பிரதான பாதையை பிடித்தார்களா இல்லையா? என்றுதான் செய்தி கேட்டவர்கள் சலித்திருப்பார்கள்.

'ரிவிபல', 'யுத்த கோஷ' என்று புதிய பெயர்கள் சூட்டியதால் ஒவ்வொன்றும் தனியான நடவடிக்கைகள் போலவும், வெற்றி மேல் வெற்றி போன்றும் கருதப்பட்டு, பிரசார ஆதாயம் கிட்டுகிறது. ■

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



***மனித உரிமைகளை*** *மீறுவோருக்கு பயிற்சி அளிக்கமாட்டினமாம். அமெரிக்கா அரசு கூறியிருக்குது! முந்தி ஒரு முறை இலங்கையில் "யுத்தத்துக்கு பயிற்சியளிப்பதில்லை" என்று கூறி தலையைச் சுத்தினதும் இதே அமெரிக்காதான். இப்ப யுத்தத்துக்குப் பயிற்சி கொடுப்பது பரகசியமானதால், "மனித உரிமையை மீறுவோருக்கு பயிற்சியில்லை!" என்று கதைவிடுகினம். மனித உரிமையை மீறினால் பயிற்சி கொடுக்க மாட்டினம். பயிற்சி எடுத்துப்போட்டுப் போய்மீறலாம் என்று சொல்லுகினமோ?!*

***இலங்கையில்*** *யுத்த அரங்குகளில் மட்டும்தான் மனித உரிமை மீறல்கள் நடக்குதாம். இதனையும் அமெரிக்காவின் பிரதிநிதி ஒருவர்தான் செப்பியுள்ளார். கொழும்பு என்ன யுத்த பகுதியோ? இங்கும் என்ன பங்கர் கட்டியோ சண்டை பிடிக்கினம்?*

***செம்மணியில்*** *மண் கிண்டிய படங்களைப் பார்த்ததும் என் நண்பர் ஒருவர் கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி. "உவை உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரப் போனமாதிரி தெரியவில்லை. விவசாயம் பண்ணப்போன ஆட்கள் மாதிரியல்லோ தெரியுது. விவசாயம் பண்ணுவதற்கோ விமானத்தில் போனவை?!"*

***கொழும்பில் உள்ள*** *சங்கங்களைச் சேர்ந்த சிலர் உருப்படியான காரியம் செய்திருக்கினம். போரில் பாதிக்கப்பட்ட வன்னிச் சிறார்களுக்கும், மக்களுக்கும் ஆடைகள் சேகரித்திருக்கினம். 'தானாடா விட்டாலும் தசையாடும்!'*

***நீதி உரைக்க*** *யாழ் போனவருக்கு சீருடையினர் கடும் மரியாதையாம். போகும் போதும், வரும்போதும் அவரது கைப்பெட்டியைத் தூக்கிப் போனதும் அவர்கள்தானாம். 'உலகமே நாடக மேடை.' இதில் எத்தனை நடிகர்கள்?*

***"தேர்தல் திகதியை*** *பின்போடுமாறு போராட்டம் தேவையில்லை!" என்கிறார் அம்மையார். அதே போராட்டத்தில் அதிகாரத் தரப்பின் முக்கியமான இரண்டுபேர் கலந்து கொண்டவை. "கட்-அவுட் வைத்திருந்தால் கழற்றி எறியுங்கள்" என்கிறார் அம்மையார். அவரது கட்-அவுட்டையே பெரிசு பெரிசாக கட்டிவைத்திருக்கினம், அவரது கட்சிக்காரர்கள். தலை முடியைப் பிய்த்துக்கொள்ள வேண்டியது நாங்கள்தான்! ஒன்றுமே புரியல்ல உலகத்திலே!*

***தேர்தல் வருகுது*** *என்று தெரிந்தால், வன்னியில் குடியெழும்பத் தயாராக மூட்டை முடிச்சுக்களை கட்டிவைக்கவேணும் போல இருக்குது. எந்தத் தேர்தல் வந்தாலும் அங்குதானே ஒரு அடி அடிச்சு பலம் காட்டுகினம்!*

***வவுனியாவில் இயக்க வரி*** *நிறுத்தப்பட்டபின்னர் ஒவ்வொரு பொருளும் பத்து ரூபா முதல் 20 ரூபாவரை விலை குறைந்துள்ளது. அப்படியானால் இவ்வளவு காலமாக இவ்வளவு ரூபாயோ மேலதிக வரியாகக் கட்டி அழுதனாங்கள் என்று சனம் திகைச்சுப்போய் நிற்குதாம்.*

***வவுனியாவில்*** *தமிழ்க் கட்சி ஒன்று விற்பனை செய்த நாட்காட்டிகளை, கழக உறுப்பினர்கள் ஒருவரை வைத்தே கடைகளில் இருந்து திரும்பப் பெறவைத்தவராம் சீருடையினர். ஆனால் நாட்காட்டிக்காக பெறப்பட்ட பணத்தை மட்டும் திரும்பக் கொடுக்கச் சொல்லவில்லை. "நாட்காட்டி வேண்டாம், அதற்கான பணம் தருகிறோம்" என்று கூறிய வர்த்தகர்கள் புத்திசாலிகள்தான்!*

***இதுவும் வவுனியா*** *செய்திதான்! தமிழ்க் கட்சிகள் பொருட்களுக்கு வரி வாங்குகிறார்கள் என்று நினைப்பது தவறு. வவுனியாவில் மிக முக்கிய அரச அதிகாரி ஒருவர் கொள்ளையாக சம்பாதிக்கிறாராம். பொருட்களுக்கு கிலோவுக்கு ஒரு ரூபா என்ற கணக்கில் வாங்குகிறாராம். மேலதிக விபரங்கள் கிடைத்ததும் முழுதாகக் கூறப்படும். சனத்திற்கு எத்தனை சுமை?*

இந்த வாரப் பொன்மொழி:

**"இன்பத்தின் இரகசியம்
நீங்கள் விரும்புவதை
செய்வதில் அல்ல!
நீங்கள் செய்வதை
பிறர் விரும்புவதில்
இருக்கிறது!"**



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# புலனாய்வுக் குழுவினரின் தேடுதல் வேட்டை!

பாக்கியநாதன் வீட்டுக்கு சிறப்பு புலனாய்வுக் குழு சென்ற போது, அவர்கள் எதிர்பார்த்துச் சென்றவர்கள் எவரும் அங்கிருக்கவில்லை.

சென்னை வில்லிவாக்கத்தில் பாக்கியநாதன் வீட்டில்தான் சிவராசன், சுபா ஆகியோர் மே மாதம் 26ம் திகதிவரை தங்கியிருந்தனர்.

மே 26ம் திகதி சிவராசன், நளினி, சுபா, முருகன் ஆகியோர் சென்னையை விட்டு புறப்பட்டனர்.

அதற்கு முன்பாக சென்னையிலுள்ள உணவு விடுதி ஒன்றில் உணவு உண்டனர்.

அதன் பின்னர் தமது இன்னொரு ஆதரவாளரான ரவிச்சந்திரன் வீட்டிற்கு சென்று, அங்கிருந்து மாலையில் புறப்பட்டனர்.

பாக்கியநாதன்தான் வாடகைக் கார் ஒன்றை ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.

நேராக திருத்தணிக்குச் சென்று அங்கு ஆதரவாளர் ஒருவரது வீட்டில் சில நாட்கள் தங்கியிருப்பதே சிவராசனது திட்டமாக இருந்தது.

திருத்தணிக்குச் செல்லும்போதே தகவல் தொடர்பு சாதனங்களையும் கையோடு கொண்டு போனார் சிவராசன்.

தமிழக ஆதரவாளரான பேரறிவாளன் மூலம், சாந்தனிடம் இருந்து 75 ஆயிரம் பணம் செலவுகளுக்காகப் பெற்றிருந்தார் சிவராசன்.

சாந்தன்தான் புலிகளது தமிழகப் பொறுப்பாளர். திருச்சியில் உள்ள வீடொன்றில் சாந்தன் தங்கியிருந்தார்.

ராஜீவ் கொலை நடவடிக்கை தேவைகளுக்காக மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பேரறிவாளன் புதிதாக வாங்கிவைத்திருந்தார்.

சிவராசன், சுபா, நளினி, முருகன் ஆகியோர் திருத்தணியில் தங்கியிருந்த போதுதான், சிவராசனின் படம் பத்திரிகைகளில் வெளியானது.

சென்னை வில்லிவாக்கத்தில் பாக்கியநாதனும் கைது செய்யப்பட்டார். அவரது தாயாரான பத்மாவும் கைதானார்.

பாக்கியநாதனையும் பத்மாவையும் மல்லிகைக்கு கொண்டு சென்று கடுமையாக விசாரித்தனர்.

புலிகளது அச்சகத்தை சென்னையில் பொறுப்பேற்று நடத்துபவர் பாக்கியநாதன். ஆகவே அவருக்கு பல தகவல்கள் தெரிந்திருக்கும் என்று கிடுக்குப் பிடியாக பிடித்துக் கொண்டனர்.

புலனாய்வுக் குழுவுக்கு சென்ற ஹரிபாபுவின் உடமைகள் அடங்கிய மர்மப் பொதியும் பாக்கியநாதனை தப்பிக்கொள்ள முடியாமல் செய்திருந்தது.

படப்பிடிப்பாளர் ஹரிபாபுவுக்கு பாக்கியநாதன் எழுதிய கடிதத்தில், 'சங்கரி அக்கா வீட்டு எலெக்ரிக் பில் பணம் கட்ட முருகன் பணம் கொடுப்பான்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

சங்கரி அக்கா என்பது யார் என்று பாக்கியநாதனிடம் விசாரித்து, அவரது வீட்டையும் புலனாய்வுக்குழு முற்றுகையிட்டது.

மதுரையைச் சேர்ந்த முத்துராஜாவின் சகோதரிதான் சங்கரி அக்கா. முத்துராஜாவும் புலிகளது தமிழக ஆதரவாளர்தான்.

சங்கரி அக்காவுக்கு சென்னையில் ஒரு வீடு இருந்தது. அங்குதான் புலிகளது அரசியற் துறைப் பொறுப்பாளராக அப்போதிருந்த பேபி சுப்பிரமணியம் தங்கியிருந்தார்.

ராஜீவ் கொலைக்கு முன்னரே பேபி சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார்.

## மேலும் படங்கள்

சிவராசன், தாணு ஆகியோர் ராஜீவுக்காக காத்திருக்கும் படங்கள் மட்டுமல்லாது, பெரம்புதூர் கூட்டத்தில் மக்களோடு மக்களாக அமர்ந்திருந்த நளினியையும் ஹரிபாபு எடுத்த படங்களில் கண்டுபிடித்தது சிறப்புப் புலனாய்வுக்குழு.

நளினியின் அருகில் இருப்பவரும் இலங்கைப் பெண்தான் என்று கண்டு பிடித்தனர்.

இந்தப் புகைப்படங்களை காண்பித்த போது முதலில் மறுத்த பாக்கியநாதன், பின்னர் தமது சகோதரியையும், சுபாவையும் அடையாளம் காட்டினார்.

உடனடியாக அந்தப் புகைப்படங்களும் பத்திரிகைகளில் வெளியாகின.

நளினி, சுபா ஆகியோரும் நளினியின் கணவரான முருகனும் தேடப்படுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.



## விபரங்கள்

புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியானபோதும், சிவராசனைப் பற்றிய சரியான விபரங்கள் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கவில்லை.

பாக்கியநாதன் உட்பட கைதானவர்களுக்கும் சிவராசன் பற்றிய முழு விபரங்களும் தெரிந்திருக்கவில்லை.

ஒற்றைக் கண்ணில் காயமடைந்தவர் என்றும், ரகு அல்லது ரகுவரன் என்றுமே பெயர்கள் வெளியாகின.

எனினும் ராஜீவ் கொலைக்கு புலிகள் தான் காரணம் என்பதற்கு அடிப்படையான தகவல்களை சிறப்பு புலனாய்வுக்குழு பெற்றுவிட்டது. அதன் பின்னர் புலிகள்தான் கொலைக்கு காரணம் என்பதில் சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை.

ஆகவே, பல திசைகளில் விசாரணைகளை நகர்த்தாது, புலிகள்தான் காரணம் என்ற திசையில் தமது விசாரணைகளை ஒருமுகப்படுத்தினார்கள்.

தமிழ் நாட்டில் புலிகள் இயக்கத்தினரையும், அவர்களது ஆதரவாளர்களையும் பரவலாகக் கைது செய்ய ஆரம்பித்தனர்.

தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டால் புலிகள் சயனைட் குப்பி கடிப்பது வழக்கமாக இருக்கவில்லை.

ராஜீவ் கொலையை அடுத்து புலிகளை கைது செய்ய ஆரம்பித்தபோது, புலிகளது தமிழகப் பொறுப்பாளர் சாநதன் தமது உறுப்பினர்களுக்கு சயனைட் குப்பிகளை அவசரமாக விநியோகித்தார்.

தானே குப்பி வாங்கி சயனைட் நிரப்பி கொடுத்தனுப்பினார் சாந்தன்.

சாந்தனையும் தேடிக் கொண்டிருந்தனர். திருச்சியில் நம்பகமான வீடொன்றில் சாந்தன் தலைமறைவாக தங்கியிருந்தார்.

தமிழ் நாட்டில் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களில் இரண்டு சாந்தன்கள் இருந்தனர்.

புலிகளுக்கு தமிழ் நாட்டில் பொறுப்பாக இருந்தவர் குண்டுச் சாந்தன். சிவராசனால் புலனாய்வு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டவர் சின்ன சாந்தன்.

பத்மநாபா கொலைக்கு தகவல் பெற சிவராசனால் பயன்படுத்தப்பட்ட சின்ன சாந்தன், பின்னர் புலிகளது உறுப்பினராகவே மாறி விட்டார்.

பத்மநாபா கொலையை அடுத்து சின்ன சாந்தன் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். ராஜீவ் கொலைக்கான நடவடிக்கைகளுக்கு உதவியாக சின்ன சாந்தனை மறுபடி தமிழ் நாட்டுக்கு அழைத்து வந்தார் சிவராசன்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவினரால் கைது செய்யப்பட்டவர்களில் சின்ன சாந்தனும் ஒருவர்.

அவர் மூலம் சிவராசன் பற்றிய பல தகவல்களை புலனாய்வுக்குழு பெற்றுக் கொண்டது. சிவராசனுடன் தனிப்பட்ட முறையிலும் நீண்டகால அறிமுகம் உள்ளவர் சின்ன சாந்தன்.

சின்ன சாந்தன் கைதானதும் புலனாய்வுக்கு பெரும் உதவியாக அமைந்தது.

## பத்திரிகையாளர்

இதற்கிடையே 'இந்து' ராம் ஊடாக ஒரு முக்கிய தகவல் வெளியானது.

ராஜீவ் கொலைக்கு புலிகள் காரணமல்ல என்று அடித்துக் கூறிவந்தவர் 'இந்து' ராம்.

அவருக்கே அதிர்ச்சியளிக்கத்தக்கதாக அந்தத் தகவல் கிடைத்தது.

சிவராசன் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர். பிரபாகரன், பொட்டம்மான் ஆகியோரது நம்பிக்கைக்கு பாத்திரமானவர். உண்மையான பெயர்: பாக்கியச் சந்திரன். இராணுவ நடவடிக்கை ஒன்றில் கண்ணில் காயம் ஏற்பட்டது.

எடுத்த காரியத்தை திறம்பட நடத்தி முடிப்பதில் சிவராசன் கெட்டிக்காரர். இயக்கத்திற்கும், பிரபாகரனுக்கும் மிகவும் விசுவாசமானவர் என்ற தகவல்களே 'இந்து' ராமிடம் கூறப்பட்டன.



பல தோற்றங்களில் புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட சிவராசனின் தோற்றங்கள்

கனடாவில் இருந்தே அந்தத் தகவல் கிடைத்தது.

புலிகள் இயக்கத்தில் கிட்டுவின் நம்பகமான மெய்க்காவலராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் இருந்தவர் ரஹீம் என்னும் ஜனகரட்ணம்.

கனடாவில் ரஹீமுக்கு நெருக்கமான நண்பர் பத்திரிகையாளர் டி.பி.ஜெயராஜ். அப்போது கனடாவில் இருந்து வெளியான செந்தாமரை பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார் ஜெயராஜ்.

அதற்கு முன்னர் இலங்கையில் 'இந்து' நிருபராக இருந்தவர்தான் ஜெயராஜ். பத்திரிகைத்துறையில் நீண்டகால அனுபவம் உள்ளவர்.

ரஹீம் மூலம் சிவராசன் பற்றிய தகவல்களை ஜெயராஜ் பெற்று, அதனை 'இந்து' ராமிடம் கூறியிருக்கிறார்.

தனது '.:.புரொன்ட் லைன்' சஞ்சிகையில் சிவராசனைப் பற்றி தனக்கு கிடைத்த தகவல்களை வெளியிட்டார் 'இந்து'ராம்.

அதன் பின்னர் ''இந்து'ராம் மட்டுமன்றி, 'இந்து', '.:.புரொன்ட் லைன்' ஆகியனவும் புலிகளுக்கு எதிராக எழுத ஆரம்பித்தன.

'.:.புரொன்ட் லைன்' வெளியிட்ட தகவலும் சிறப்புப் புலனாய்வுக் குழுவினருக்கு பயன்பட்டது.

## பிரிவு

தமது படங்கள் பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்ததுமே சிவராசன் சுபா ஆகியோர் தனியாகவும், நளினி, முருகன் ஆகியோர் தனியாகவும் பிரிந்தனர்.

ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதிக்கு நளினியும், முருகனும் சென்றனர். முருகன் மொட்டை போட்டுக் கொண்டார்.

பின்னர் 'மொட்டை முருகன்' என்ற பட்டப்பெயர் ஒட்டிக்கொள்ள திருப்பதியில் போட்ட மொட்டைதான் காரணமாகியது.

சிவராசன், சுபா ஆகியோர் ஆந்திர மாநிலமான திருப்பதியிலும் சில நாட்கள் தங்கியிருந்தனர்.

ஜூன்மாத இறுதிவரை சிவராசன் யாழ்ப்பாணத்தில் இருந்த பொட்டம்மானுடன் இரகசிய வானொலித் தொடர்பு வைத்திருந்தார்.

## குறுக்கீடு

சிவராசன் யாழ்ப்பாணத்தோடு தொடர்பு கொள்ளக்கூடும் என்று கருதி இரகசிய வானொலித் தொடர்புகளை குறுக்கிட்டு அறிவதிலும் சிறப்புப் புலனாய்வுக் குழு ஈடுபட்டது.

புலிகள் பயன்படுத்தும் சங்கேத வார்த்தைகள், குறியீடுகள் பற்றி கைதான புலிகள் சிலரிடம் விபரம் அறியப்பட்டது.

அவசரமாக படகை அனுப்பிவைக்குமாறு தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட தகவலை புலனாய்வுக் குழுவினர் ஒட்டுக் கேட்டனர்.

அத் தகவலை சிவராசன் அனுப்பியிருந்தார். ஆந்திர மாநில கடற்கரை ஒன்றிலிருந்து படகு மூலம் தப்பிச்செல்வதற்கு திட்டமிட்ட சிவராசன், அங்கு படகை அனுப்புமாறு கூறியிருந்தார்.

தமது பேச்சை புலனாய்வுக் குழுவினர் ஒட்டுக் கேட்கலாம் என்று சிவராசனுக்கு சந்தேகம்.

அதனால் புலனாய்வுக் குழுவை குழப்புவதற்காக தப்பான தகவல் ஒன்றை அனுப்பினார்.

ஆந்திர மாநில கடற்கரைப்பகுதி ஒன்றை குறிப்பிட்டு, அங்குதான் தாம் தங்கியிருப்பதாக சிவராசன் கூறினார்.

புலனாய்வுக் குழுவினருக்கே புரியாதபடி, தான் கூறியது பொய்யான செய்தி என்பதை பொட்டம்மான் அறிந்துகொள்ளவும் செய்ததுதான் சிவராசனின் சாமர்த்தியம்.

சங்கேத செய்தியை துருவி ஆராய்ந்த சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் சிவராசன் கூறிய ஆந்திர கடற்கரைப் பகுதிக்கு விரைந்தனர்.

அங்குலம் அங்குலமாக சோதனை நடத்தினார்கள். அங்கு பலத்த ஏமாற்றம் காத்திருந்தது.

சிவராசன் தங்களை திட்டமிட்டு ஏமாற்றிவிட்டது அப்போதுதான் புலனாய்வுக் குழுவினருக்கு புரிந்தது.

கடற்பகுதியில் இந்திய கடற்படை ரோந்துகள் தீவிரமாக இருந்தன.

முன்னர் நினைத்தபடி ஆந்திராவில் இருந்து தப்பிச் செல்வதும் சுலபமான காரியமாக இருக்கவில்லை.

## உருமாற்றம்

சிவராசன் எந்த ரூபத்தில் தப்பிச்செல்ல நினைத்தாலும் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாக, சிவராசனை கம்பியூட்டரில் பலவிதமாக உருமாற்றம் செய்த புகைப்படங்களும் புலனாய்வுக் குழுவினரால் வெளியிடப்பட்டன.

எனவே, ஆந்திராவில் தொடர்ந்து தங்குவது பாதுகாப்பானதல்ல. பெங்களூருக்கு செல்ல வேண்டும் அல்லது இந்திய எல்லையை தரைப்பகுதியால் தாண்டிச் செல்ல வேண்டும் என்று முடிவானது.

எப்பாடுபட்டாவது சிவராசனை தப்ப வைக்க வேண்டும் என்று தீர்மானித்து, துரித ஏற்பாடுகளை பொட்டம்மான் மேற் கொண்டார்.

சிவராசனை நேபாளம் கொண்டு செல்லக்கூடிய ஏற்பாடுகளை செய்வதற்கு இரண்டு பேர் புதுடில்லிக்கு அனுப்பப் பட்டனர்.

ஒருவர் பெண்புலி ஆதிரை. இன்னொருவர் புலிகளது தீவிர ஆதரவாளரான கனகசபாபதி.

ஆனால், அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்ய இயலவில்லை.

புதுடில்லியில் வைத்து கனகசபையும், ஆதிரையும் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் அவர்களுக்கும் சிவராசன் இருக்கும் இடம் தெரியாது.

நேபாளத்தில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொள்வதுதான் தங்களுக்குரிய வேலை என்று கூறினார்கள்.

இதற்கிடையே தமிழ்நாட்டில் கோடியக் கரையில் எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்பட்டது.

(தொடர்ந்து வரும்)

## கலைஞர் அறிக்கை

ராஜீவ் கொலை சம்பவத்தை வைத்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அரசியல் ஆதாயம் தேடப்பார்க்கிறார். காங்கிரசும் அ.தி.மு.க் வும் சேர்ந்து தமிழகம் முழுவதும் அராஜகத்தை தூண்டிவிட்டுள்ளனர். அந்தியூர் தி.மு.க வேட்பாளர் வீட்டுக்குள் வைத்து பூட்டி தீ வைக் கப்பட்டுள்ளார் என்று கலைஞர் விடுத்துள்ள அறிக் கையில் கூறியுள்ளார்.

தி.மு.க தலைவர் கலைஞர் அறிக்கை வருமாறு –

இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலைக்கு ஆளானது தி.மு. கழகம் குறித்து தனது இதயபூர்வமான வேதனையை தெரிவித்திருக்கிறது. ராஜீவ் காந்தியை கொலை செய்யமுனைந்து அதற்கான சதி திட்டம் தீட்டியவர்கள் மன்னிக்கப்படமுடியாதவர்கள் என்பதில் இருவேறுகருத்துக்கு இடமேயில்லை. இக்கொடூரமான கொலை நிகழ்ச்சியில் தொடர்புடையவர்கள் யார் என்ற உண்மையை தெளிவாக அறிவதில் நாட்டம் செலுத்த வேண்டிய நேரத்தில் இந்த நிகழ்ச்சியை தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தனது கட்சிக்கும், தமது கூட்டணிக்கும் தேர்தலில் ஆதாயமாக பயன்படுத்திக்கொள்ள முனைந்து திமு.கழகத்தின் மீது மறைமுகமாக 'குற்றம் சுமத்த முற்பட்டுள்ளது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

–நன்றி விடுதலை–



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது - இராஜதந்திரி

# நடக்கவுள்ள ஆணைக்குழு கூட்டமும் நடந்து முடிந்த 'செம்மணி' நாடகமும்

செம்மணி புதைகுழிகள் தொடர்பாக மாபெரும் நாடகம் ஒன்று கடந்த வாரம் அரங்கேற்றப்பட்டிருந்தது.

சில பத்திரிகையாளர்கள் வெளியிட்ட தகவல்களும், பொறுப்பற்ற செய்தித் தொகுப்புக்களும் அந்த நாடகத்தின் உண்மை நோக்கத்தை மக்களிடம் இருந்து மறைப்பதற்கு ஏதோ ஒரு வகையில் உதவியுள்ளன.

செம்மணி புதைகுழிகளைத் தோண்ட அனுமதியில்லை என்றும், அதனால் மண் மாதிரியை ஆய்வுக்காக பெற்றுக்கொண்டு அதிகாரிகள் திரும்பியதாகவும் ஒரு பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

புதிதாக நியமிக்கப்பட்ட யாழ் மேலதிக நீதிபதி மிகக் கடுமையாக அதிகாரிகளுடன் நடந்து கொண்டு நீதிக்காக பாடுபட்டதுபோல இன்னொரு பத்திரிகையின் செய்தி அமைந்திருந்தது.

குறிப்பிட்ட பத்திரிகைகளில் குற்றம் குறை கூறுவது எமது நோக்கமல்ல. ஆனால் யாழ் சென்ற செய்தியாளர்கள் சிலர் மிகத் தவறான செய்தி திரட்டல் ஒன்றை நடத்தியுள்ளனர் என்பதையும், அதனால் மிகப் பாரிய நாடகம் ஒன்று மூடி மறைக்கப்பட ஏதுவாகிவிட்டது என்பதுமே வருந்தத்தக்கதாகும்.

அரசையும், தமிழ்க் கட்சிகளையும் செம்மணி புதை குழி விவகாரத்தில் காரசாரமாக விமர்சித்து வந்த பத்திரிகையாளர்கள், இப்போது தாமும் மூடிமறைப்புக்கு துணைபோவது போன்ற செய்திகளை தந்திருப்பது கவலைக்குரியதாகும்.

அதேவேளை செம்மணிப் புதைகுழி விவகாரம் வெளிக்கொண்டுவரப்படுவதற்கு இதே பத்திரிகையாளர்களே முன்னர் முக்கிய பங்காற்றினர் என்பதும் மறுக்கப்பட முடியாதது.

செம்மணி புதைகுழி விவகாரத்தில் அரசு காட்டிவரும் திடீர் கரிசனையை மிக உன்னிப்பாக நோக்கவேண்டியிருக்கிறது.

கிட்டத்தட்ட ஒருவருட காலமாக அரசு செம்மணிப் புதைகுழி விவகாரத்தை புறக்கணித்தே வந்திருக்கிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவை இடித்துரைத்தும்கூட அரசாங்கம் புதைகுழிகளை உடனடியாக தோண்டுவதற்கு முன்வரவில்லை.

செம்மணியில் மனிதப் புதைகுழிகள் கிடையவே கிடையாது என்பது உண்மையாக இருந்திருக்குமானால், புகார் கூறப்பட்ட மூன்று நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்திருக்க முடியும்.

தன்னை மனித உரிமைகள் மேல் அக்கறை கொண்ட அரசாங்கமாக உலகறியச் செய்யவும் அவ்வாறான துரித நடவடிக்கை அரசுக்கு உதவியிருக்கும்.

ஆனால், செம்மணியை தோண்டினால் பிணநாற்றத்தால் அப் பகுதி மட்டுமல்ல, தமது பெயரும் நாற்றமடிக்கும் என்று கருதித்தான் ஆட்சியாளர்கள் கடந்த ஒரு வருடகாலமாக இழுத்தடித்து வந்தனர்.

கிருஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளி சோமரத்ன ராஜபக்ஷா செம்மணிப் புதை குழி பற்றி கூறியதுமே, அது பற்றி தனது படை உயரதிகாரிகளை ஆட்சியாளர்கள் விசாரித்தே இருப்பார்கள்.

'புதை குழியாவது ஒன்றாவது, துணிந்து தோண்டலாம்' என்று சீருடைத்தரப்பினர் கூறியிருந்தால் ஆட்சியாளர்கள் தோண்டி முடித்திருப்பார்கள்.

எனவே, செம்மணிப் பகுதியில் மனிதப் புதை குழிகள் இருந்துள்ளன என்பதையே ஆட்சியாளரது தயக்கம் வெளிப்படுத்தியிருந்தது.

சர்வதேச நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்கே தாமதிப்பதாக நீதியமைச்சு கூறியிருந்தது. பின்னர் ராஜபக்ஷவை அழைத்து செல்ல அனுமதி பெறுவதற்கே தாமதம் ஏற்படுவதாக நீதியமைச்சு வட்டாரங்கள் கூறின.

அதன்பின்னர் நீதிமன்றங்களை யாழில் புலிகள் தடைசெய்தபோது, அதனையும் ஒரு பெரும் காரணமாக பிடித்துக் கொண்டனர். நொண்டிக் குதிரைக்கு சறுக்கிய சாக்கு என்பது போல, யாழ் நீதிமன்றம் இயங்காவிட்டால் புதைகுழிகளைத் தோண்ட முடியாது என்று சித்தரிக்க முயன்றிருந்தனர்.

புலிகள் விமான சேவைக்கு தடை விதித்தபோது, அரசுக்கு இன்னொரு பிடி கிடைத்தது. போக்குவரத்து இன்மையால் அங்கு செல்ல முடியாதுள்ளது என்று சில அதிகாரிகள் கூறினார்கள். அரசின் விமானப் படை விமானத்தில் சென்று



மண் ஆய்வு: புதைகுழிகள் எங்கிருக்கின்றன என்பது தெரியாத நிலையில், தடயங்கள் அகற்றப்பட்டதா என்று ஆராய எங்கு மண் எடுக்கிறார்கள்? கண்துடைப்பு.

வரக்கூடிய வாய்ப்பு அப்போதும் இருந்தது.

யாழ் குடாநாட்டில் மழைக்காலம் வரும்வரை எப்படியாவது புதைகுழி தோண்டுவதை இழுத்தடிக்க வேண்டும் என்ற திட்டமே இது என்று அப்போதே சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

செம்மணிப் பகுதியில் இரவு நேரத்தில் சந்தேகமான நடமாட்டங்கள் இருப்பதாகவும், நெருப்புப் புகை அங்கிருந்து எழுவதாகவும் மழைக் காலத்திற்கு முன்பாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

புதை குழிகளில் இருந்து சடலங்கள் அப்புறப்படுத்தியிருந்தாலோ, தோண்டியெடுத்து அங்கேயே எரித்திருந்தாலோ உடனடியாக ஆய்வை நடத்தினால் மட்டுமே கண்டறிய முடியும்.

கடும் மழை பொழிந்தால், வெள்ளம் பாய்ந்து தடயங்களை முற்றாக அழித்திருக்கும். எரியூட்டப்பட்ட அடையாளமும் தேங்கி நின்ற வெள்ளத்தில் காணாமல் போய்விடும். இதன் பின்னர் சர்வதேச நிபுணர்கள் வந்தால்கூட சடலங்கள் அகற்றப்பட்டதா இல்லையா என்பதை கண்டறிய முடியாது.

மழைக்காலம் வரும்வரை செம்மணி புதைகுழி விவகாரம் பற்றிய நடவடிக்கையில் ஒரு அடி கூட எடுத்து வைக்கப்படவில்லை. ஆனால் மழை நன்கு பொழிந்த பின்னர், நீதிபதியே மறுத்தாலும் தோண்டியே தீருவோம் என்று ஆட்சியாளர்கள் தற்போது ஒற்றைக் காலில் நிற்கிறார்கள் என்பதும் ஊன்றிக் கவனிக்க வேண்டியதே.

மார்ச் 5ம் திகதி புதைகுழிகள் தோண்டப்படும் என்றும், செம்மணிப்பகுதியை யாழ் நீதிபதி சென்று பார்வையிட்டதாகவும் ஒரு மாதகாலத்திற்கு முன்னர் வெளிநாட்டமைச்சு அறிக்கை வெளியிட்டமை சாதாரண விடயமல்ல.

யாழ் நீதிபதி அதனை கடுமையாக மறுத்து பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்ட பின்னரே, பிழையான தகவலை வெளியிட்டமை தனது தவறுதான் என்று வெளிநாட்டமைச்சு ஒப்புக் கொண்டிருந்தது.

ஆனால், மார்ச் 5ம் திகதி புதைகுழிகள் எவ்வாறெனினும் தோண்டப்படும் என்று மறுபடியும் அரச தரப்பில் இருந்தே பத்திரிகைகளுக்கு செய்திகள் கொடுக்கப்பட்டன.

அது மட்டுமன்றி மார்ச் ஐந்தாம் திகதி சர்வதேச நிபுணர்கள் யாழ் அழைத்துச் செல்லப்படவுள்ளதாகவும் சில பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு, அரசு ஏற்படுத்த விரும்பிய பரபரப்புக்கு தம்மையறியாமல் உதவியிருந்தன.

உண்மையில் மார்ச் ஐந்தாம் திகதி புதைகுழியை தோண்டுவது ஆட்சியாளரது நோக்கமாக இருக்கவில்லை. புதைகுழியைத் தோண்டுவதற்கு அரசு ஆர்வமாக இருக்கிறது என்று வெகு ஜன தொடர்பு சாதனங்கள் மூலம் உலகமறிய செய்வதே அரசின் நோக்கமாக இருந்துள்ளது.

மார்ச் 5ல் நடைபெற்ற சம்பவங்களை நன்கு அவதானித்தாலே மேற்கண்ட உண்மை புலனாகிவிடும்.

யாழ் மாவட்ட மேலதிக நீதிபதியாக திரு.அருள்சாஹரன் மிக இரகசியமாக நியமிக்கப்பட்டார். மார்ச் 02ம் திகதி நடைபெற்ற இந்த நியமனம் மார்ச் 05ம் திகதி வரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நியமனங்கள் வழமையாக இரகசியமாக வைக்கப்படுவதில்லை. மார்ச் 05ம் திகதிக்கு முன்னர் இடையூறு நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு இரகசியம் பேணப்பட்டுள்ளது.

மார்ச் 01ல் தம்மோடு வருமாறு உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு விசாரணைக் குழுவினர் அழைப்பும் விடுத்தனர்.

புதைகுழிகள் தோண்டப்படுவதை பார்வையிடுவதற்காக அழைத்துச் செல்வதாகவே கூறப்பட்டது. அதனால்தான் பெரும் எதிர்பார்ப்புடன் பத்திரிகையாளர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

பத்திரிகையாளர்கள் அனைவரும் 'அன்ரனோ' விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். பிறிதொரு அன்ரனோவில் மேலதிக நீதிபதியாக புதிதாக நியமனமான அருள்சாஹரனும், அரச சட்டத்தரணி மற்றும் விசாரணைக்குழுவினரும் ஒன்றாகவே சென்றனர்.

ஆனால், இந்தக் குழுவில் புதைகுழிகளை அடையாளம் காட்ட வேண்டிய ராஜபக்ஷ அழைத்துச் செல்லப்படவில்லை. ஆக, புதைகுழி தோண்டுவதில்லை என்பது முன்கூட்டியே செய்யப்பட்ட முடிவுதான் என்பதற்கு இதுவே தகுந்த சான்றாக அமைந்திருந்தது.

மணமகன் இல்லாது திருமணம் நடத்தச் சென்றதுபோன்ற வேடிக்கையே இதுவாகும்.

அதுமட்டுமல்ல, கொழும்பிலிருந்து தம்முடனேயே அழைத்துச் சென்ற, தாம் நியமித்த மேலதிக நீதிபதியிடம் அரச தரப்பு சட்டத்தரணி விடுத்த கோரிக்கையும் உண்மையை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

புதைகுழியை தோண்டுவதற்கான அனுமதியை கோராது, மண் ஆய்வு செய்வதற்கான கால அவகாசத்தையே அரச சட்டத்தரணி கோரியிருந்தார்.

புதைகுழியை தோண்டுவதற்கு நீதிமன்ற உத்தரவு கிடைக்கவில்லை என்பதால் விசாரணையாளர்கள் கொழும்பு திரும்பியதாக வெளியான செய்தி முற்றிலும் தவறானதாகும்.

எனவே, புதைகுழிகளை உடன் தோண்ட அரசு விரும்பவில்லை என்பதும், தோண்டத் தயாராக உள்ளதுபோன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தவே முழு முயற்சி காண்பித்துள்ளது என்பதும் உறுதியாகியுள்ளது.

அதுமட்டுமல்ல, நீதிபதிகளும், நீதிமன்றங்களும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

தமக்கு பிடித்தமான நீதிபதிகளை நியமித்து வழக்குகளை தம் விருப்பப்படி நடத்த விரும்புவதாக இந்திய அரசுமீது புகார்கள் கூறப்பட்டு வருவதும்கூட இங்கும் அறியப்பட்ட செய்தியேயாகும்.

புதைகுழி விவகாரத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக யாழ் மக்களுக்கும் திருப்தி காணப்படவில்லை.

அரச சட்டத்தரணியின் கோரிக்கைகளை முதலில் நீதிபதி மறுத்தார். கேள்விகளும் தொடுத்தார். பின்னர் அரச சட்டத்தரணி தன் வாதங்களை அடுக்கினார். அதன்பின்பு நீதிபதி தான் முதலில் மறுத்தவற்றுக்கு அனுமதி வழங்கினார். இது ஒரு அருமையான நீதிமன்ற காட்சியாக விளங்கியிருந்தது.

இந்த அருமையான காட்சிகள் மத்தியில், மார்ச் மாத அவசரத்தின் மர்மம் என்ன? என்ற கேள்வி எழுந்துள்ளது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது பழமொழி.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்வரும் மார்ச் 20ம் திகதி கூடுகிறது. ஜெனிவாவில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், இலங்கை தொடர்பான மனித உரிமை விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

அந்தக் கூட்டத்தில் இலங்கை அரசுமீது கண்டனம் தெரிவிக்கப்படுமானால், எதிர்வரும் மே மாதம் பாரிசில் நடைபெறவுள்ள இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளது மாநாட்டிலும் அது எதிரொலிக்கும் கடன் உதவியின் அளவு குறைக்கப்படும்.

கடனையே மலையாக நம்பியிருக்கும் ஆட்சியாளருக்கு பாரிஸ் மாநாடு பிரதானமானதாகும். எனவேதான் செம்மணி புதைகுழி விவகாரத்தில் நீதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக உலகெங்கும் செய்தி எட்டச் செய்துள்ளனர்.

புதைகுழிகளை உடன் தோண்டினாலும் சில சிக்கல்கள் உள்ளன. சடலங்கள் அகற்றப்பட்டுவிட்டன என்று பலத்த கண்டனம் எழுமானால், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் அச் சந்தேகம் ஏற்படலாம். எனவேதான் மனித உரிமை ஆணைக்குழு கூட்டம் நடப்பதற்கு முன்னர் குழிகளை தோண்டாதிருக்க தீர்மானம் செய்ததாக கருதமுடிகிறது.

அதுமட்டுமன்றி மண் ஆய்வு என்பதும் ஒரு கண்துடைப்பே. சடலங்கள் அகற்றப்பட்டதா இல்லையா? என்பதை அது பற்றிய புகார் எழுந்ததும் ஆய்வு செய்ய அரசு முன்வரவில்லை. அப்புகார் காதில் விழுந்ததாகக்கூட காட்டிக்கொள்ளவில்லை.

இப்போது ஆய்வு செய்து எப்படி கண்டுபிடிக்க முடியும்? சகதியாக இருக்கும் பகுதியில் குழிகள் தோண்டப்பட்டதா? இல்லையா? என்பதை கண்டறிவது கடினமாகும். ஒழுங்காக, நீதியாக விசாரணைகள் நடத்தப்பட்டன என்று காண்பிக்கவே இது பயன்படும்.

மார்ச் 5ல் சர்வதேச நிபுணர்கள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால் அவ்வாறு எவரும் அழைத்துச் செல்லப்படவில்லை. அதுபற்றி நிருபர் ஒருவர் கேட்டபோது, தமக்கு சமமான நிபுணர்கள் இங்கிருப்பதாக சர்வதேச நிபுணர்கள் கூறுவதாக பதிலளிக்கப்பட்டது.

இது அப்பட்டமான பொய்யாகும். புதைகுழியை தோண்டுவதற்கு உதவத் தயாராக இருப்பதாக சர்வதேச நிபுணர்கள் பலர் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தனர். சர்வதேச மன்னிப்புச் சபைகூட தாம் உதவத் தயார் என்றும், நிபுணர்களை தந்துதவ முடியும் என்றும் கூறியிருந்தது.

மொத்தத்தில் செம்மணி விவகாரத்தில் முதலில் இருந்தே ஆட்சியாளர்கள் கூறும் காரணங்களும், விளக்கங்களும் உண்மைகளோடு ஒத்துப் போகத் தவறிவருகின்றன.

மிகப் பாரிய மனித அவலத்தில் இத்தகைய நாடகம் அரங்கேற்றப்பட்டும்கூட ஒரு தமிழ்க் கட்சிகூட இதனையிட்டு அம்பலப்படுத்த முன்வரவில்லை.

ஆனால் யாழ் மக்கள் விழிப்பாகவே இருக்கின்றனர்.

"செம்மணி புதைகுழி விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதே?" என்று யாழில் காணாமல் போனோரின் உறவினரிடம் பி.பி.சி. செய்தியாளர் கேள்வி தொடுத்திருந்தார். அதற்கு பதிலளித்த அந்த உறவினர், "புதைகுழியை அடையாளம் காட்ட வேண்டியவரையே அழைத்து வரவில்லையே?" என்று கூறியிருந்தார்.

நாடகங்களை புரிந்து கொள்ளத்தக்க போதிய அனுபவமும், அறிவும் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த 51 ஆண்டுகளில் அவர்கள் பெற்ற படிப்பினைகளே அதற்கு காரணமாகும்.

செம்மணியில் நாடகத்தின் முதல் காட்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. உதவி வழங்கும் நாடுகளது மாநாட்டின் முன்னர் அடுத்த காட்சி அரங்கேற்றப்படலாம். ●

## சந்திக்கு வராத சங்கதிகள் - நக்கீரன்

யாழ் குடாநாட்டில் நீதிமன்றம் இயங்குவதற்கு புலிகள் அனுமதி கொடுத்திருந்தனர். திருட்டுக்கள், கொலை, கொள்ளைகள், உள்ளூர் தகராறுகள் என்பவற்றை கட்டுப்படுத்த நீதிமன்றம் தேவை என்று புலிகளிடம் கேட்கப்பட்டு, அது ஏற்கப்பட்டது.

செம்மணி விவகாரத்தில் யாழ் நீதிமன்றம் வழங்காத தீர்ப்பை, வழங்கியதாக வெளி விவகார அமைச்சு கூறிய பின்னர்தான், யாழ் குடாநாட்டில் நீதிமன்றங்கள் இயங்க மறுபடி தடை போடப்பட்டது.

அதுமட்டுமல்ல, வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையை மறுத்து உண்மையை தெளிவுபடுத்தி விடப்பட்ட அறிக்கைக்கு பின்னணியில் நின்றதும் புலிகள்தான் என்று தெரிகிறது.

யாழ் நீதிமன்றம். தமிழ் நீதிபதி என்ற சூழலில் செம்மணி விவகாரம் நீதியாக கையாளப்படுகிறது என்று உலகை நம்பவைப்பதே அரசின் நோக்கம் என்கிறார்கள் புலிகள். ஆகவே வெளிவிவகார அமைச்சின் அறிக்கையை மறுத்துவிட்டு, நீதிமன்றத்தை மூடுங்கள் பின்னர் நிலைமையைப் பார்த்துச் செய்யலாம் என்று புலிகள் கூறியதாக தகவல்.

அதனால்தான் யாழ்ப்பாணத்தில் செம்மணி விவகாரத்தில் நீதிபதியாக அமர எவரும் முன்வரவில்லையாம்.

அதனால்தான் கொழும்பில் இருந்தே மேலதிக நீதிபதியை நியமித்து, அழைத்துச் சென்று, கையோடு திரும்ப அதே விமானத்தில் அழைத்து வந்தனர்.

மேலதிக நீதிபதி திரு. அருள்சாஹரன். இவர் படையினர் யாழ் குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் நீதிமன்றங்கள் இயங்கத் தொடங்கியதும் நீதிபதியாக சென்றவர். பின்னர் அமெரிக்கா சென்றிருந்தார். இப்போது மீண்டும் மேலதிக நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் மறுத்திருந்தால் சிங்கள நீதிபதியைத்தான் அரசு நியமிக்க வேண்டி இருந்திருக்கும். அது அரசுக்கு பல தர்ம சங்கடங்களைக் கொடுத்திருக்கும்.

யாழ் நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்தி வைத்த புலிகள், வேறு ஒரு தமிழர் இவ்வாறு நீதிபதியாக வருவார் என்பதை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அவர்களுக்கு இது ஓர் அதிர்ச்சிதான்.

### புலிகளின் தடை

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் உறவினர்களுக்காக ஆஜரான தமிழ்ச் சட்டத்தரணிகளும் இம்முறை ஆஜராகவில்லை.

மனித கௌரவத்திற்கான மன்ற சட்டத்தரணி ஒருவர் மட்டும் ஆஜராகி, நாடகக் காட்சிகளுக்கு மௌனமாக ஒத்துழைத்துள்ளார்.

ஆஜரானவர் மண் ஆய்வு செய்வதை ஆட்சேபித்திருக்கலாம். ராஜபக்ஷ வராததைப் பற்றியும் கண்டித்திருக்கலாம். இரண்டையும் செய்யவில்லை. பின்னர் ஏன் இவர் ஆஜரானார்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பிலும் சட்டத்தரணிகள் ஆஜராகினர். அவர்கள் ஆட்சேபிக்கவில்லை என்று அரசு கூறுவதற்குத்தான் வசதி.

-*-

ஈ.பி.ஆர்.எல்.எஃப்புக்குள் வரதராஜப் பெருமாளின் கை ஓங்கி வருகிறது.

கட்சிக்குள் பிரச்சனை கிடையாது என்று சுரேஸ் அறிக்கைவிட்டார். அதே சுரேஸ்தான், "கட்சியை புனரமைக்கும் வேலையை வரதரிடம் ஒப்படைக்கவில்லை? அவர் இப்போதும் மத்திய குழு உறுப்பினராகத்தான் இருக்கிறார்" என்றும் தினகரனுக்கு கூறியிருந்தார்.

'நான்தான் இப்போதும் செயலாளர் நாயகம். வரதரல்ல' என்பதைத்தான் சுரேஸ் அவ்வாறு கூறியிருக்கிறார்.

இப்போது செயலாளர் நாயகம் யார்? என்று சுரேசுக்கே சந்தேகம் வந்துவிட்டதின் விளைவுதான் அது.

மட்டக்களப்பில் ராசிக் குழு தம்மோடு இல்லை என்றும் சுரேஸ் கூறிவந்தார். 'முரசு' மட்டும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் ராசிக்குழு என்றே குறிப்பிட்டு வந்தது.

ராசிக்தான் மட்டக்களப்பில் ஈ.பி.ஆர். எல்.எஃப். உறுப்பினர்களுக்கு செலவுகளுக்கு பணம் கொடுத்து பராமரித்தார்.

இப்போது சுரேசின் முன்னைய மறுப்புக்கள் அர்த்தமிழந்துவிட்டன. மட்டக்களப்பில் ராசிக் குழுவினரோடுதான் வரதர் தங்கியிருந்தார். வரதருக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ததும் அவர்கள்தான்.

வரதரின் பலத்தை கட்சிக்குள் தடுப்பதற்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் உதவியை சுரேஸ் நாடியுள்ளார்.

வடக்கு-கிழக்கை பிரித்து தேர்தல் நடத்த திட்டம் என்று செய்தி வெளியானதல்லவா. அதனையடுத்து ஒரு கதையை வரதரின் எதிர்வட்டாரம் கிளப்பிவிட்டுள்ளது. கிழக்குக்கு தனியாக தேர்தல் நடத்தினால் வரதர் போட்டியிடுவார் என்பதுதான் அந்தக் கதை.

வரதர் போட்டியிடுவார் என்பதில் உண்மை கிடையாது. ஆனால் அம்பாறை தொகுதியை விட்டுக் கொடுக்கலாம் என்பது வரதரின் நிலைப்பாடு.



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 52

**கடந்தவாரம்**

**உகண்டாவின் எண்டபே விமான நிலையத்தில் அதிரடித் தாக்குதல் நடத்தி பயணிகளை மீட்டுச் செல்கிறார்கள் – இஸ்ரேலிய கொமாண்டோக்கள். இடி அமீன் நாடு திரும்புகிறான். கோபத்தில் கொந்தளிக்கிறான்.**

இனி....

# இடி அமீன்

கம்பலா மருத்துவனை நோக்கி இடி அமீன் காரில் சென்று கொண்டிருந்தபோதே, அதே காரில் அவனுடன் பயணம் செய்த இராணுவ அதிகாரி நடந்த சம்பவங்கள் அனைத்தையும் விலாவாரியாக விளக்கிக் கொண்டிருந்தார்.

இடி அமீன் கருத்து எதுவும் கூறாது, வெறுமனே கேட்டுக்கொண்டிருந்தான். அவனது முகச் சாயலில் இருந்தே கோபத்தை கட்டுப்படுத்த படாதபாடு படுகிறான் என்பது பளிச்சென்று தெரிந்தது.

அவனது கோபத்தைக் காண அந்த அதிகாரிக்கே பயம் பிடித்துக் கொண்டது.

கம்பலா மருத்துவமனைக்கு முன்பாக கார் நின்றதும், படுவேகமாக இறங்கினான்.

அமீனைக் கண்டதும் மருத்துவமனை ஊழியர்கள் கதி கலங்கிப்போனார்கள்.

டாக்டர்களுக்கு தகவல் கொடுக்க அவர்கள் தலைதெறிக்க ஓடிவந்தனர். அதே நேரம் அவர்கள் மனதில் சந்தேகமும் உற்பத்தியானது.

எண்டபே விமான நிலையத்தில் இஸ்ரேலிய கொமாண்டோக்களுடன் வந்த போலி அமீன் பற்றிய செய்தியை அறிந்திருந்தார்கள். அதனால் இப்போது வருவது தங்கள் அதிபர்தானா, என்று சந்தேகப்பட்டார்கள்.

அவர்களது சந்தேகத்துக்கு காரணம் இருந்தது.

அந்த மருத்துவ மனையில்தான் பணயக்கைதிகளில் ஒருவரான வயோதிப மாது– திருமதி டோரா புளொச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அதனால் அவரை இஸ்ரேலிய கொமாண்டோக்களால் மீட்க முடியவில்லை. அவரையும் மீட்டுச் செல்லத்தான் இங்கும் வந்துவிட்டார்களோ என்று உள்ளூர அச்சம் கொண்டனர்.

ஆயினும் இடி அமீனுடன் வந்த இராணுவ அதிகாரியையும், ஏனைய மெய்ப்பாதுகாவலர்களையும் கண்டதால் சந்தேகம் பெருமளவு மறைந்தது.

ஆனால், முகத்தை வைத்தே அகத்தை அறியக்கூடிய அமீனுக்கு அவர்களது சந்தேகம் புரிந்துவிட்டது.

"என்ன சந்தேகமாக இருக்கிறதா? நான்தான் உங்கள் அதிபர்!" என்றபடியே நடந்தான்.

'இடி அமீன் திடீரென்று இங்கு விஜயம் செய்திருப்பது ஏன்?' என்று அறிய டாக்டர்கள் துடித்துக்கொண்டிருந்தனர்.

"எங்கே கிடக்கிறாள், அந்த இஸ்ரேலிய நாய்?" என்று அமீன் கேட்டபோதுதான், டாக்டர்களுக்கு காரணமும் புரிந்தது. விபரீதம் ஏதோ நடக்கப்போகிறது என்ற கலக்கமும் விரிந்தது.

திருமதி டோரா புளொச் சிகிச்சை பெற்ற பகுதிக்கு அமீனை அழைத்துச் சென்றனர்.

திருமதி டோரா புளொச் கிழவியாக இருப்பார் என்று அமீன் எதிர்பார்க்கவில்லை. வயோதிப மாதுதான் அவர் என்று தெரிந்ததும், சின்னதாய் ஒரு தயக்கம் மனதில் எழ, இஸ்ரேலியர்கள் மீதான கோபம் முந்திக்கொண்டது. அந்தக் கோபம் தயக்கத்தை விழுங்கியது.

வயோதிப மாதை இராட்சதன் போன்ற கோர கோப முகத்துடன் நெருங்கி னான் அமீன்.

தன்னை நோக்கி ஒரு இராட்சதன் போல வருவது இடி அமீன் என்று திருமதி டோரா புளொச் ஓரளவு ஊகித்துக் கொண்டார்.

பத்திரிகைகளில் அமீனது படங்களைப் பார்த்திருக்கிறார். அமீன் பற்றிய பயங்கரச் செய்திகளையும் கேள்விப்பட்டிருக்கிறார்.

இஸ்ரேலிய பெண்மணியான திருமதி டோரா; எண்டபே விமான நிலையத்தில் நடந்து முடிந்த சம்பவம் பற்றி அறிந்திருக்கவில்லை. அவருக்கு டாக்டர்களோ, தாதிகளோ அதனைப் பற்றிக் கூறவில்லை.

இஸ்ரேலியப் பெண்மணி என்பதால் மருத்துவமனையிலும் கொஞ்சம் துவேசமாகவே அவருடன் நடந்துகொண்டனர்.

ஏதோ தீங்கு நேரப்போகிறது என்பது அவரது உள் உணர்வு எச்சரித்தது.

தன்னை நோக்கி வந்த அமீனை நோக்கி, அப்பாவியான புன்னகை ஒன்று அவரது உதட்டில் உதித்தது.

மரியாதை நிமித்தம் கட்டிலில் இருந்து எழுந்து கொள்ள அவர் முயன்றார்.

ஆனால் அதற்கு வாய்ப்பே இருக்கவில்லை. அருகில் வந்துவிட்ட அமீனுக்கு அந்த வயோதிப மாதுவின் புன்னகை, இஸ்ரேலியர்களது ஏளனச் சிரிப்பாகவே தெரிந்தது.

அமீனின் கரம் இரண்டும் நீண்டன. வயோதிப மாதின் கழுத்தைச் சுற்றி அழுத்தியது.

இரும்புப்பிடி....

மரணப்பிடி....

திருமதி டோரா புளொச் மூச்சுத் திணறினார். அவர் கண்கள் உயிர்ப்பிச்சை கேட்டு மன்றாடுவது போலத் தெரிந்தன.

டாக்டர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவரை துவேசத்தோடு நடத்திய மருத்துவமனை ஊழியர்களுக்கு முதன் முதலாக அவர்மீது அனுதாபம் ஏற்பட்டது.

அமீனாக இல்லாது வேறு யாராவது அக்காரியத்தைச் செய்திருந்தால் தடுத்திருப்பார்கள்.



அமீனை தடுக்கும் துணிச்சல் எவருக்கும் வரவில்லை.

அந்த வயோதிபமாது துடிதுடித்து பலியாவதை காணச் சகியாது டாக்டர்களும், ஊழியர்களும் அங்கிருந்து அகன்றனர்.

அவர்களால் செய்ய முடிந்த மௌன எதிர்ப்பு அது மட்டும்தான்.

திருமதி டோரா புளொச் தன் இறுதி மூச்சை இழந்திருந்தார். துவண்டு கிடந்தார்.



மருத்துவமனையிலிருந்த வயோதிபமாது டோரா புளொச்

"இவளை மருத்துவமனைக்கு வெளியே கொண்டுசென்று போடுங்கள்!" என்று தன் காவலர்களுக்கு உத்தரவிட்டான்.

சம்பளத்திற்காகவும், சுக போகங்களுக்காகவும் அமீனை சுற்றியிருக்கும் அந்த காவலர்களுக்கு நியாயம், அநியாயம் பற்றி கவலையே கிடையாது.

செத்துக்கிடந்த அந்தப் பெண்மணியை கட்டிலில் இருந்து தரையில் தூக்கிப் போட்டனர்.

கால்களைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்றனர். மருத்துவமனையே அக் காட்சியைக் கண்டு கண்ணீர் விட்டழுதது.



கார்லோஸ்

இஸ்ரேலியர்கள் உகண்டா நாட்டுக்குள் அத்துமீறிப் புகுந்ததால், கோபம் கொண்ட மக்கள்தான் அந்த வயோதிபப் பெண்ணைக் கொன்றுவிட்டனர் என்று உகண்டா வானொலி கூறியது.

ஆனால், அந்தக் கோரக்காட்சியை நேரில் கண்டவர்கள் மூலம் உண்மை உகண்டா முழுக்க காட்டுத் தீயாகப் பரவியிருந்தது.

திருமதி டோரா புளொச்சைக் கொன்றது அமீனுக்கு திருப்தியாக இருந்தது.

தன் முகத்தில் கரிபூசிய இஸ்ரேலியர்களுக்குத் தகுந்த பதிலடி கொடுத்துவிட்டதாகவே எண்ணிக்கொண்டான்.

அதே சூட்டோடு தன் மாளிகையில் தங்கியிருந்த கார்லோசைச் சென்று சந்தித்தான்.

கார்லோஸ் மிகவும் சூடாக இருந்தான்.

"மன்னித்துக்கொள் கார்லோஸ். என் துருப்புக்கள் என் நம்பிக்கையை நாசம்பண்ணிவிட்டார்கள். இஸ்ரேலிய நாய்களிடம் பூனைகள் மாதிரி தோற்றுப் போனார்கள். அவர்கள் சார்பாக நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன்," என்றான்.

"நடந்தது நடந்துவிட்டது. ஆனால் இதற்கான விலையை இஸ்ரேல் தந்தாக வேண்டும். ஆம், தந்தாக வேண்டும்!" என்றான் கார்லோஸ்.

"தரவைப்போம்! கார்லோஸ்! உலகின் எந்த மூலையில் இருந்தாவது இஸ்ரேலிய விமானங்களை நீ கடத்தி வரலாம். உகண்டாவின் விமான நிலையங்கள் உனக்காகத் திறந்திருக்கும். எப்போதும் நான் உன்னோடு இருப்பேன்!" என்று உணர்ச்சிவசப்பட்டான் அமீன்.

கார்லோஸ்தான் அமீனை சமாதானப் படுத்த வேண்டியிருந்தது.

"வெற்றி தோல்வி என்பது எங்களுக்கு மாறி மாறி வரும். இஸ்ரேலியர்கள் கோழைகள் மாதிரி நடந்து கொண்டார்கள். எங்களோடு முன்பக்கமாக பேச்சு நடத்திக் கொண்டு, பின்பக்கமாக வந்து குத்திவிட்டார்கள்," என்றான் கார்லோஸ்.

கார்லோசை கட்டித்தழுவி விடை கொடுத்து அனுப்பினான் அமீன்.

"மீண்டும் சந்திப்போம்" என்றே பிரிந்தனர். ஆனால் அதன்பின்னர் அவர்கள் இருவரும் சந்திக்க சந்தர்ப்பமே கிட்டவில்லை.

எண்டபே விமான நிலைய அதிரடிக்குப் பின்னர், தனது புகழ் உள்நாட்டிலும் மங்கத் தொடங்கிவிட்டதாக அமீன் நினைத்தான்.

உள்நாட்டிலும் தனக்கு எதிரான அதிருப்திகள் வேகமாக வளர்ந்து வருவதை புலனாய்வு அறிக்கைகள் மூலம் தெரிந்து கொண்டான்.

தன் துருப்புக்கள் மீதும், தன் அதிகாரிகள் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டான்.

உகண்டாவின் ஜிஞ்சா நகர மந்திரவாதிகளின் சக்தி பற்றி அதிகாரி ஒருவர் அமீனிடம் புகழ்ந்தார்.

தன்னைச் சூழ இருப்போர் மீதே நம்பிக்கை இழந்த அமீனுக்கு, மந்திர சக்தியை நாடும் விருப்பம் ஏற்பட்டது.

தன்னம்பிக்கை இழந்தோரும், பேராசை பிடித்தவர்களுமே மந்திர தந்திரங்களை நம்புகிறார்கள். மூட நம்பிக்கைகளை பற்றிப் பிடித்துக் கொள்கிறார்கள்.

### தருவது ரசிகன்

அமீனும் தனது ஆசைகளை நிறைவேற்ற மந்திரவாதிகளை நம்ப ஆரம்பித்தான்.

மந்திரவாதிகள் பற்றி அமீனுக்கு இன்னொரு சந்தோசமான செய்தியையும் அந்த அதிகாரி கூறியிருந்தார்.

"அழகான பெண் மந்திரவாதிகளும் இருக்கின்றனர். அவர்களுக்கு உடல் இச்சைகள் அதிகம். கட்டான ஆண்களைக் கண்டால் மோகம் கொள்வார்கள்.

அவர்களது உடல் இச்சையைத் தணித்து, அவர்களுக்கு திருப்தி ஏற்படுத்தினால் போதும். அவ்வாறு திருப்தி ஏற்படுத்துபவனுக்காக மந்திர சக்தியை முழு அளவில் பயன்படுத்துவார்கள்," என்று கூறினார் அதிகாரி.

அதேபோலவே ஜிஞ்சா நகரில் உள்ள ஆண் மந்திரவாதிகளுக்கு பெண் ஆசை. தங்கள் இஷ்டப்படி நடந்து இன்பம் தரும் பெண்களுக்காக மந்திர பலத்தைப் பயன்படுத்துவார்கள் என்ற தகவலையும் அதே அதிகாரி கூறியிருந்தார்.

"நாளைக்கே ஜிஞ்சா நகருக்கு வருகிறேன். நீர் முன்பாகச் சென்று அழகான– எனக்கு தோதான பெண் மந்திரவாதியாகப் பார்த்து வையும். உம்மை நம்பித்தான் இதில் கால் வைக்கிறேன்!" என்றான் அமீன்.

மறுநாள், ஹெலிகொப்டரில் சென்று ஜிஞ்சா நகரில் இறங்கினான் அமீன்.

மந்திரவாதியின் இருப்பிடத்துக்கு சென்றபோது, அமீனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது.

(இடி தொடரும்)

# சினை முட்டை தேவை

அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் வெளியான விளம்பரம் ஒன்று பலரது புருவங்களை உயரவைத்தது.

'குழந்தை பெற முடியாத தம்பதிக்கு தரமான சினை முட்டை தேவை' என்பது தான் அந்த விளம்பரம்.



சினை முட்டையை தானம் செய்யும் பெண்ணுக்கு 20 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் நிபந்தனைதான் சற்றுக் கடினமானது. தானம் செய்யும் பெண் அழகானவளாக இருக்க வேண்டும். 5 அடி 10 அங்குலம் உயரமாகவும், விளையாட்டு வீராங்கனையாகவும் விளங்கவேண்டும்.

தானம் செய்ய முன்வந்த பெண்களுக்கு மேற்கண்ட தகுதிகள் இல்லாமையால், தொடர்ந்து விளம்பரம் வெளியாகிக் கொண்டிருக்கிறதாம்.

# ஒரே கடி

மனைவி மறுத்தும் கேளாது முத்தமிட்ட கணவருக்கு பயங்கரமான அதிர்ச்சி கொடுத்தார் மனைவி.



ஜோன்ஸ் வில்லி நகரில் வசிப்பவர் ஜெரால்டின் வோன் ஜெண்ட். அவரது கணவர் நிறைபோதையில் வந்து அவரை முத்தமிட முயன்றார்.

அதற்கு முன்னரும் கணவர் போதையில் வந்து முத்தமிடுவதை ஜெரால்ட் முகச்சுளிப்போடு எதிர்த்திருக்கிறார். பலன் கிட்டவில்லை.

அன்றும் நிறைபோதையோடு வந்த கணவர் ஜெரால்ட்டின் வாயோடு வாய்வைத்து முத்தமிட்டார். சகிக்க முடியாத மனைவி தன் கணவரின் நாக்கு நுனியை ஒரே கடியாக கடித்துவிட்டார்.

கணவர் பொலிசில் முறையிட்டார். 'நான் கடிக்கவில்லை. தனது நாக்கை தானே கடித்துக் கொண்டார்' என்று மனைவி கூறினார்.

பொலிசார் கணவரின் நாக்கை பரிசோதனை செய்தனர். அதில் உட்புறமாக துண்டிக்கப்பட்ட அடையாளம் இருந்தது.

மனைவிமீது வழக்குப் பதிவு செய்துள்ளனர் பொலிசார். கட்டாயமாக முத்தமிடும் கணவர்களே உஷார்.

# அதிரடி மோனிகா

மோனிகா லெவின்ஸ்சியின் பெயரில் புத்தகம் ஒன்று வெளியாகி விட்டது. மோனிகா எழுதியதாக கூறப்பட்டபோதும், அதனை எழுதியவர் பிரபல எழுத்தாளர் ஒருவராம்.



இந்தப் புத்தகத்திற்காக பல கோடி ரூபாய்கள் மோனிக்காவுக்கு தரப்பட்டுள்ளது. பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனமே பணம் கொடுத்திருக்கிறது.

மோனிகா தன் அனுபவங்களை கூற, அதனைச் சுவாரசியமாக எழுதித்தந்த எழுத்தாளருக்கும் கணிசமான தொகை கிடைத்துள்ளதாம்.

அமெரிக்க தொலைக்காட்சிக்காக அவரது பேட்டியை எடுத்தவர் பெண் நிருபர் பார்ப்பரா. ராஜீவ் காந்தி மரணமாவதற்கு முன்னர் அவரது பேட்டியை எடுத்தவரும் இவரே.

25 வயதான மோனிகாவின் கிளு கிளுப்பான பேட்டியை உலகெங்கும் உள்ள பத்திரிகைகள் போட்டி போட்டு வெளியிட்டன.

அமெரிக்க பத்திரிகைகளும் மோனிக்காவின் பேட்டிகளை எடுத்து வெளியிட்டன.

"கிளின்ரன் எப்போதுமே முதலில் மேல் உதட்டைத்தான் தன் உதடுகளால் பற்றிக் கொள்வார். ரசித்தும், ஈடுபாட்டோடும் அவர் முத்தமிடும்போது, எனக்குள் கிளர்ச்சி ஏற்படுவது உண்மைதான்.

கிளின்ரனை ஜனாதிபதி என்பதால் மட்டும் நான் விரும்பினேன் என்று நினைப்பது தவறு.

கிளின்ரன் கவர்ச்சியான மனிதர். காதல் லீலைகளிலும் வித்தியாசமான ரசனைகள் உள்ளவர்.

வெள்ளை மாளிகையின் அழகான, சுத்தமான குளியலறை எங்கள் படுக்கையறையாக பலதடவை பயன்பட்டது.

கிளின்ரன் என்னுடன் பழகியதால் தன் வயதில் மேலும் பல வருடங்கள் குறைந்துவிட்டதாக உணர்வதாக பல முறை, 'அந்த மாதிரியான' சந்தர்ப்பங்களில் உளறியிருக்கிறார்.

அவர் விரும்புவது போல நடந்து கொண்டால் போதும். அவர் அன்று முழுக்க குஷியாகிவிடுவார்." என்று அமெரிக்க பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளார் மோனிகா.

மோனிகாவின் அதிரடியான பேட்டிகளால் கிளின்ரன் பாடு பெரும் திண்டாட்டமாகி வருகிறது.

கிளின்ரனை தவிர தனக்கு ஆண் நண்பர்கள் பலர் இருந்ததாக மோனிகா ஒப்புக்கொண்டிருக்கிறார்.


# தொலைபேசிக் காதல்

## மலைக்கவைத்த சம்பவம்

டென்மார்க் நாட்டிலிருந்து தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள காதலியுடன் ஓர் இளம் வாலிபர் தினமும் காதல் மொழி பேசி வந்தார். ஒருநாள் பாருங்கள் இருவரும் தொடர்ச்சியாக 21 மணிநேரம் பேசினார்கள். எதைத்தான் பேசினார்களோ தெரியவில்லை. இப்போது அந்த வாலிபர் தொலைபேசிக் கட்டணத்தைக் கட்டமுடியாமல் சிறைக்குப் போக இருக்கிறார்.

இதுபற்றி தமிழக பத்திரிகை வெளியிட்ட பரபரப்பான தகவல் வருமாறு:

காதலுக்குக் கண் இல்லை என்பார்கள். உண்மைதான். முகம் பார்த்து வருவதுதானா காதல்? இனிமையான குரலைக் கொண்டு கூட காதல் வளர்கிறது. இதற்கு உதாரணமாகத் திகழ்பவர்கள்தான் டென் மார்க் காதலரும், சென்னை காதலியும்.



இவர்கள் இருவரும் கடற்கரை, பூங்கா என்று சுற்றவில்லை. திரைப்படம், நாடகம் என்று அலையவில்லை. தனிமையிலும் சந்திக்கவில்லை. காதலர் இருப்பது கடல் கடந்த டென்மார்க் நாட்டின் கோபன் ஹேகன் அருகேயுள்ள கோல்டிங் என்ற இடத்தில். காதலி சென்னையில். இருவரும் எப்படிக் காதலர்களானார்கள்?

இதற்கு ஒரு சர்வதேச ஏடு உதவியது. அதில் வெளிநாட்டினர் பெயரும், தொலைபேசி இலக்கமும் வெளியிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்து இருவரும் தொடர்பு கொள்ள.. அது 'கிளிக்' ஆகி காதலை வளர்த்து விட்டது.

டென்மார்க் காதலருக்கு தனது சென்னைக் காதலியுடன் ஒருநாள்கூட பேசாமல் இருக்க முடியவில்லை. அவள் எப்படி இருப்பாளோ என்ற ஏக்கத்தில் தினந்தோறும் காதல் குரலை கேட்டு மகிழ்ந்தார்.

ஒருநாள் இருவரும் தொடர்ந்து 21 மணிநேரம் தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டு இருந்து இருக்கிறார்கள். அப்படி என்ன பேசியிருப்பார்கள்? கண்ணே, மணியே என்று பேசினாலும் கூட 21 மணி நேரம் பேசிக் கொண்டு இருக்க முடியுமா என்று அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கிறது.

காதலருக்கு வயது 24. காதலிக்கு வயது 18. காதல் பூத்துக் குலுங்கும் வயதுதானே அது. பின்னர் கேட்கவா வேண்டும். ஆனால் இந்தக் காதல் 6 மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. ஏனென்றால் அவர் தொலைபேசிக் கட்டணம் கட்டாததுதான் அதற்குக் காரணம்.

டென்மார்க்கில் தொலைபேசி இணைப்புக் கொடுப்பது தனியார்தான். அதிலும் போட்டாபோட்டி. இதைப் பயன்படுத்திக்கொண்ட காதலர், தொலைபேசி இணைப்பு வாங்கிக் கொண்டார். காதல் மொழி பேசப்பயன்படுத்திக் கொண்டார். 6 மாதம் கழிந்ததும் தொலை பேசிக் கட்டண பில் வந்தது. கட்டணத் தொகை 65 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா.

சென்னையில் உள்ள காதலியுடன் பேசிய தொகை மட்டும் 52 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா. இந்தத் தொகையைப் பார்த்து அவர் அதிர்ச்சி அடையவில்லை. கட்டணத்தைக் கட்டாமல் தப்பிக்க முயன்றபோது பொலிஸார் பிடித்துவிட்டனர்.

அவர் சிறை செல்வது உறுதியாகிவிட்டது. இதனால் சென்னையில் உள்ள காதலி நிலை என்ன? தொலைபேசியைப் பார்த்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சு விடுவாரோ?



படிப்பகம்

www.padippakam.com





## முட்டைச் சாதனை

← சூரியன் பூமத்திய ரேகையை ஒரு வருடத்தில் இரு தடவைகள் தாண்டும். மார்ச் மாதம் 21ம் திகதியன்று தெற்கேயிருந்து வடக்கேயும், செப்டம்பர் 23ம் திகதி வடக்கேயிருந்து தெற்கேயும் செல்லும்போதே பூமத்திய ரேகையை சூரியன் கடக்கிறது.

(சூரியன் இருந்தபடியே இருக்க, பூமி தானே சுற்றிக் கொண்டு சூரியனை வலம் வருவதுதான் விஞ்ஞான உண்மை என்றாலும் சூரியன்தான் வடக்கேயும் தெற்கேயும் நகர்கிறது என்று கூறுவது வழக்கமாகிவிட்டது.

மேற்படி குறிப்பிட்ட தினங்களிலும் ஒரு சமமான மேசையில் கோழி முட்டைகளை செங்குத்தாக வைத்தால் அவை அப்படியே உருண்டு விழாமல்-நிமிர்ந்து நிற்கும் என்ற நம்பிக்கை அமெரிக்கா போன்ற நாடுகளில் உண்டு.

அமெரிக்கா-நியூயோர்க் நகரிலுள்ள சென்ட்ரல் பார்க்கில் 1997 மார்ச்சில் எட்டு வயதான மலிக் ஷாபாஸ் பிஸ்ஸாரோ என்னும் சிறுவன், பூங்காவின் பாதுகாவலனின் உதவியுடன் ஒரு சுவரில் முட்டைகளை செங்குத்தாக நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படம் காட்டுகிறது.

ஜோர்ஜியா மாநிலம் மொன்றோ நகரைச் சேர்ந்த கென்னத் எப்பர்சன் என்பவர் தனி ஒருவராக மொத்தம் 210 முட்டைகளை நிறுத்தி வைத்துச் சாதனை புரிந்திருக்கிறார். இது 1990ம் ஆண்டு மார்ச் மாதம் இடம் பெற்றதாக கின்னஸில் பதியப்பட்டுள்ளது.

கொலாறடோ மாநிலத்திலுள்ள பேஃமில்ட் பள்ளி மாணவர்கள் பலர் 1986ம் ஆண்டு மார்ச் 20ம் திகதியன்று நிலை நாட்டிய சாதனையும் வியக்க வைத்த செய்தியாகும். இவர்கள் ஒரேநேரத்தில் 467 முட்டைகளை செங்குத்தாக நிறுத்தி வெற்றி கண்டனர். இது பலர் இணைந்து படைத்த உலக சாதனை. முட்டை உடையலாம். முட்டையை வைத்து படைத்த இந்த சாதனைகளை சுலபத்தில் உடைக்க முடியாது. நீங்களும் முயற்சிக்கலாம். (முட்டைகள் உடைந்தால் பொரித்தும் உண்ணலாம்)



## ஒன்றே ஒன்று

↑ படத்தில் 4 வயதான சிறுவனைத் தன் முதுகில் சுமந்து செல்லும் கடலாமை சீஷெல்ஸ் இராட்சத ஆமை என்று அழைக்கப்படுகிறது. வேறு எத்தனையோ ஆமை ரகங்கள் ஆங்காங்கே காணப்பட்டபோதிலும் இந்தக் குறிப்பிட்ட ரக ஆமை இது ஒன்றேதான் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சீஷெல்ஸ் இராட்சத ஆமைகள் முற்று முழுதாக அழிந்துபோய்விட்டன என்று முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்திருந்தபோது 'டாவின்' என்ற பெயர் சூட்டப்பட்ட இந்த ஆமை எங்கிருந்தோ வந்து தலைகாட்டியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள பிளாக்பூல் மிருகக்காட்சிச் சாலையில் இது தனித்து வாழ்கிறது.

இதற்கு வயது 70 ஆகிறது. இதற்கு ஏற்ற சோடியைத் தேடிக்கண்டுபிடித்து வம்சவிருத்திக்கு வழிதேடலாமா என்று பெரு முயற்சி எடுத்தும் பலன் கிட்டவில்லை. இதே இனத்தைச் சேர்ந்த பெண் ஆமை ஒன்று கிடைத்து விட்டால் 'வயாகரா' மாத்திரை கொடுத்தாவது இதன் இனப்பெருக்கத்துக்கு நிபுணர்கள் ஏற்பாடு செய்து விடுவார்கள் என்று நம்பலாம். பெண் ஆமை இல்லாமை அதனால் இனப்பெருக்கத்துக்கு முடியாமை.

## பிடித்தால் அமுக்கலாம்


↓ ஜப்பான் நிறுவனம் ஒன்று தயாரித்துள்ள நவீன கமரா இது. யார் வேண்டுமானாலும் 'கிளிக்' செய்ய வசதியானது.



படம் பிடிக்க வேண்டிய காட்சியை, கமராத் திரையில் பார்த்துக் கொள்ளலாம். காட்சி சரியாக அமைந்ததும், ஒரு பொத்தனை அமுக்கினால் 'கிளிக்' காட்சி பிடிக்காவிட்டால் விட்டு விடலாம்.

இந்த கமராவை வீடுகள் மற்றும் அலுவலகங்களிலும் பொருத்திக் கண்காணிக்கலாம். அதற்கான மேலதிக வசதிகளும் உள்ளன.

இக் கமராவிற்கு 'கேம் கார்டர்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. சார்ப் கோர்பரேஷன் கம்பனி இதனை தயாரித்துள்ளது.



## காதல் கவிதை

← அன்னப் பறவைகளது இந்த நெருக்கத்தை எழுதப் படாத காதல் கவிதை என்று அழைக்கலாமா?! லாம்!

இந்த ஜோடிகள் இரண்டும் சந்திக்கும் காட்சியை மட்டும் பார்க்காமல், இரண்டுக்கும் இடையே உற்றுப் பாருங்கள். காதல் சின்னமான இதயம் தெரிகிறதல்லவா! இப்போது சொல்லுங்கள், இது ஒரு கவிதைத்தனமான காட்சிதானே.

இந்த அன்னப் பறவைச் சந்திப்பில் இன்னொரு ஆச்சரியம் யாதெனில், இக் காட்சியை காதலர் தினத்தன்றுதான் ஒரு புகைப் படப்பிடிப்பாளர் இங்கிலாந்தில் உள்ள குளம் ஒன்றில் கிளிக்கினாராம்.

## சாதனைச் சீட்டு

→ வேல்ஸ் இளவரசி டயானா தன் வாழ்நாளில் பல தர்ம காரியங்களுக்கெல்லாம் பெரும் உதவிகள் செய்தார். அவர் மறைந்த பின்னரும் அவரால் தொடக்கி வைக்கப்பட்ட பணிகள் தங்கு தடையின்றி நடைபெற்று வருகின்றன.

சிலர் ஏதாவது நற்பணியைத் தொடங்குவார்கள்; ஆனால் சம்பந்தப்பட்டவர் மறைந்ததும் அப்பணிகளும் மறைந்துவிடும். ஆனால் இளவரசி டயானாவால் தொடங்கப்பட்டவை தொடர்ந்து இயங்குகின்றன.

எய்ட்ஸ், புற்றுநோய் மற்றும் உறைவிடமற்ற ஏழைகளுக்காக டயானா ஆரம்பித்த நற்பணிகளுக்கு நிதி சேர்க்கும் பொருட்டு ஒரு அதிஷ்ட லாபச்சீட்டு விற்பனை ஆரம்பமானது.

ஒரு பவுண் (நம் நாட்டு நாணயப்படி ரு 110) பெறுமதியான இந்தச் சீட்டு வெளியிடப்பட்ட அதே தினத்தில் 2 இலட்சத்து 50 ஆயிரம் சீட்டுக்கள் விற்பனையாகி உலகசாதனை படைத்துவிட்டது.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதலாவது சீட்டுக்குரிய பரிசு 25 ஆயிரம் பவுண். (27 1/2 இலட்சம்) என்று அறிவிக்கப்பட்டது.






## திகில் சாதனை

← இலக்கம் '13'-பெரும்பாலும் அபசகுனமான எண் என்ற நம்பிக்கை எல்லோருக்குமுண்டு. ஹோட்டல்களில்கூட 13 இலக்க அறைகள் இருப்பதில்லை. 12ம் இலக்க அறைக்கு அருகில் 12 ஏ என்ற இலக்க அறைதான் இருக்கும்.

மாதத்தில் 13ம் திகதி வரும்போது அன்றைய தினத்தை அதிகமானோர் திகிலுடன்தான் வரவேற்பார்கள். 13ம் திகதியன்று வெள்ளிக்கிழமைகளில் வருமானால் சொல்லவே வேண்டாம். அதனை துரதிஷ்டமான நாளாகவே கருதுகிறார்கள்.

குறிப்பாக; அமெரிக்கர்கள் வெள்ளிக்கிழமையை அபசகுண நாளாகவே நினைக்கின்றனர். யேசு மரித்த நாள். ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கொல்லப்பட்டமை போன்ற பல துக்கமான சம்பவங்கள் வெள்ளிக்கிழமையில் நடைபெற்றதும் அதற்கு ஒரு காரணம். ஹொலிவுட் நிறுவனம் 'FRIDAY THE 13TH' (13ம் திகதி வெள்ளிக்கிழமை) என்ற ஒரு திரைப்படத்தை 1980ம் ஆண்டு வெளியிட்டது.

சீன் எஸ். கண்ணிங்ஹாம் இயக்கத்தில் வெளியான இப்படம் படுகொலைகள் நிறைந்த பயங்கர திகிலூட்டும் படமாக உலகை கலக்கியது.

இப்படம் பிரமாண்டமான வெற்றி பெற்றது.

இதேபாணியில் பல படங்கள் அதன் பின்னர் வெளிவந்துள்ளன. 1998 வரை இம் மாதிரியான படங்கள் மொத்தம் 8 வெளியாகியுள்ளன. இப்பொழுது இதே பாணியில் மற்றுமொரு படம் தயாரிக்கப்படுகிறது.


'ஏ நைற் மெயார் ஒன் எல்ம் ஸ்ரீட்' என்றொரு திரைப்படம் 1984ல் வெளியானது. இப்படத்தில் ஃபிரெடி குருகர் தோன்றும் காட்சியையே இங்கு காண்கிறீர்கள்.

இதுவரை வெளியான திகில் படங்களில் உலகை கலக்கிய பயங்கரப் படமாக '13ம் திகதி வெள்ளிக்கிழமை' படம் தான் கின்னஸில் பதியப்பட்டுள்ளது.

## உயர நடை

↓ இது உயரமான மனிதர் பற்றிய அதிசயத் தகவல் அல்ல. ஆனால் அசத்தலான காட்சி. காலில் தடி பொருத்திக்கொண்டு உயர்ந்த மனிதராக நடந்து பார்க்கிறார்.

இதில் விசேஷம் என்னவென்றால் இந்த உயரத்திற்கு தோதாக பெரிய்ய்ய ஜீன்ஸ் தைத்து போட்டுள்ளார். எவ்வளவு செலவாகியிருக்கும்! செலவைப்பற்றி நினைத்தால் இப்படி உலகெங்கும் புகைப்படம் பிரசுரமாகி இருக்குமா? பிரபல பாக்யம் கிட்டியிருக்குமா?!





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 94

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# தடுமாற்றம் இங்கு அதிகம்

## ஸ்ரீப்ரியா மனம் திறந்து கூறுகிறார்

கமல், ரஜினி, ஆகியோருடன் ஜோடியாக நடித்தவர் ஸ்ரீப்ரியா. ரசிகர்களின் கனவுக் கன்னியாக இருந்தவர் முதலில் கமலுடன்தான் நெருக்கம். கார்த்திக்கை காதலித்து ஏமாந்து போனார். தூக்க மாத்திரை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்று தப்பினார்.

பின்னர் பிரபல மூத்த நடிகர் ஒருவருடன் நெருக்கமாக இருந்தார். அந்த நடிகரது மகனுடனும் நற்பாக பழக ஆரம்பித்தார். மகனுக்கும் ஸ்ரீப்ரியாமீது பிடிப்பு ஏற்பட்டுவிட, நிலைமை சிக்கலாகியது. மகனும் நடிகர்தான்.

மூத்த நடிகரது சகோதரர் தலையிட்டு தொடர்புகளை கத்தரித்தார். இதுவெல்லாம் பழைய கதை.

தற்போது ஸ்ரீப்ரியா இரண்டு குழந்தைகளுக்கு அம்மா. கணவரும் நடிகர்தான் ராஜ்குமார். இவர் நடிகை லதாவின் தம்பி. சில படங்களில் தலைகாட்டிய ராஜ்குமார் ஸ்ரீப்ரியாவை காதலித்து மணமுடித்தார்.

சமீபத்தில் தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு ஸ்ரீப்ரியா பேட்டி அளித்திருந்தார். அதில் முக்கியமான சில விஷயங்களை கூறியிருக்கிறார்.

'இயக்குநர் கட்டிப் பிடிக்கச் சொல்லும் காட்சிகளில் எல்லாம் வெட்கப்பட்டுக்கொண்டு அரையும் குறையுமாகச் செய்வேன். விளைவு, திரும்பத் திரும்ப பத்துத் தடவை படமாக்க வேண்டியிருந்தது.

இயக்குநர் சொல்கிறபடி ஒழுங்காக கட்டிப்பிடித்திருந்தால், ஒரே தடவையில் ஓ.கே ஆகிவிடும். இல்லையானால் நிறையத் தடவை கட்டிப்பிடிக்க வேண்டியிருக்கும் என்பதை புரிந்து கொண்டேன்.

இரண்டாவது படத்திலேயே நான் சிவாஜிக்கு ஜோடி. 'பாட்டும் பரதமும்' படத்தில் இரண்டு சிவாஜிகளில் ஒருவருக்கு நானும், இன்னொரு சிவாஜிக்கு ஜெயலலிதாவும் ஜோடி.

அதற்குள் 'அவள் ஒரு தொடர்கதை' படம் வர... கிடுகிடுவென்று என் படங்கள் வரிசையாக வர ஆரம்பித்தன. ஒரே வருஷத்தில் ஒன்பது படங்கள்.

### அம்மா துணை

அம்மா என்னோடு தவறாமல் படப்பிடிப்புக்கு வருவார். சினிமா சற்றே தடுமாற்றமானவர்கள் நிறைந்த இடம். மற்றைய துறைகளிலும் இப்படி இருக்கும். என்றாலும் சினிமாவில் நெருங்கி, கட்டிப் பிடித்து உடல் உரசி நடிப்பதால் தடுமாற்றம் இன்னும் அதிகம்.

கதாநாயகியின் பக்கத்தில் அவள் அம்மா இருந்தால், தவறாக ஒரு பார்வை பார்க்கவோ, ஒரு வார்த்தை சொல்லவோ பயப்படுவார்கள்.

இருநூற்றைம்பது படங்கள் நடித்துவிட்டேன் என்று பெருமையாக இருந்தாலும், 'அவன்-அவள்-அது', 'வசந்தத்தில் ஓர் நாள்', 'அவள் அப்படித்தான்' போன்ற சில படங்களைத் தவிர, நடிப்பில் நான் பிரமாதமாக எதனையும் செய்துவிடவில்லை.

சிவாஜியுடன் 20 படங்கள் நடித்திருக்கிறேன். நடிப்பில் இமயமாக இருந்த சிவாஜியின் மோசமான படங்களில் எல்லாம் நான்தான் கதாநாயகி. 'லாரி டிரைவர் ராஜாக்கண்ணு', 'எமனுக்கு எமன்' என்ற படங்களின் பெயர்கூட உங்களுக்கு மறந்திருக்கும்.

ரஜினியுடன் அதிகமாக நடித்த கதாநாயகி நான் என்று சொல்லும்போது சந்தோசமாக இருக்கிறது...' என்று கூறிக்கொண்டே போகிறார் ஸ்ரீப்ரியா.

சென்னை அண்ணாசாலையில் ஸ்ரீப்ரியாவின் கவர்ச்சியான கட் அவுட்டை வைத்திருந்தனர். காலுக்கு மேல் கால் போட்டபடி தொடைகள் கவர்ச்சியாக தெரிய அமர்ந்திருக்கும் தோற்றம். அதனால் சாலை விபத்துக்கள் ஏற்பட்டு, கட் அவுட்டில் கால்களுக்கு மறைப்புச் செய்தனர் என்பது அவரது பேட்டியைப் படிக்கையில் நினைவுக்கு வருகிறது.

★★

### சந்தேகம்

பிரபல இயக்குநரின் ஆஸ்தான சின்னத்திரை நடிகை என்று பெயர் பெற்றவர் அந்த நடிகை. அவர் பெயர் கீதத்தோடு தொடர்புடையது.

அந்த நடிகைக்கும் இயக்குநருக்கும் இடையே அந்தரங்க உறவு உள்ளதாக இயக்குநரின் மகள் 'சந்தேகித்தார்.

அதனால் அடுத்து தயாரான சின்னத்திரை தொடர்களில் நடிகைக்கு கல்தா!

இயக்குநருக்கும் மகளை எதிர்த்துக் கேட்க துணிச்சலில்லை. அடங்கிப் போய்விட்டார்.

'கண்ணியமான அந்த இயக்குநர் என் குரு. எங்களுக்குள் வேறு எந்த உறவும் கிடையாது.' என்று கூறுகிறார் நடிகை.

அந்த நடிகைக்கு விரைவில் திருமணமும் நடக்கப்போகிறது. அந்த இயக்குநர்தான் முன்னின்று நடத்திவைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் நடிகை.

### கண்ணீர் ராஜா

நெப்போலியன் ப்ரீதா விஜயகுமார் நடிக்கும் படம் சாமி கொடுத்தவரம். இப்படத்திற்காக அம்மாவைப் பற்றிய உருக்கமான பாடல் ஒன்று வருகிறது. இசையமைத்தபோது உருகி அழுதுவிட்டாராம் இளையராஜா.

முகப்பில்
சத்யன்
படம்: இளையவன்
ப்ரீதாவிஜயகுமார்



பாபு கணேஷ்-ரஷிகா
படம்: கெஸ்ட் ஹவுஸ்

சினிவிசிட்



புதுமுகம் ஊர்வசி
படம்: காமா

"சொர்க்கம் பக்கத்தில்
நேற்று நினைத்தது
கைகளில் மலர்ந்தது
பெண்ணின் வண்ணத்தில்"

### தமிழில் மட்டும்

மணிவண்ணன், செந்தில் இருவரும் அண்ணன் தம்பியாக நடித்துள்ள படம் 'வெள்ளி நிலவே'. 'படித்தால் மட்டும் போதுமா' படத்தின் கதையை தழுவி நகைச்சுவையாக்கி மணிவண்ணன், செந்தில் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது நம்நாட்டு தொலைக்காட்சிகளிலும் இந்த நகைச்சுவை காட்சி ஒளிபரப்பாகி வருவதை காணலாம்.

வெள்ளி நிலவே' படம் தெலுங்கில் வெளியாகி தமிழுக்கு வந்த படம். தெலுங்கில் மணிவண்ணன் செந்தில் கிடையாது. தமிழில் மட்டும் இவர்களது நகைச்சுவை காட்சியை மட்டும் படமாக்கி செருகியுள்ளனர்.

படம் ஆரம்பமாகியதில் இருந்து முடியும் வரை பிரதான கதைக்கு புறம்பாக தனியாகவே நகைச்சுவை காட்சிகள் போய்க்கொண்டிருக்கும்.

'வெள்ளி நிலவே' படநாயகன் ஸ்ரீகாந்த். நாயகி சௌந்தர்யா. ஸ்ரீகாந்த் தெலுங்கில் வில்லனாக பல படங்களில் நடித்தவர். ஆனால் தமிழில் பெயர் போடும்போது அறிமுகம் ஸ்ரீகாந்த் என்று காண்பிக்கிறார்கள். தமிழில் நேரடியாக எடுக்கப்பட்ட படம் என்று ரசிகர்களை ஏமாற்றத்தான் இந்தக் கூத்துக்கள்.

### இயக்குநரிடம் கற்றவர்

'காமா' படத்தில் அறிமுகமாகியுள்ள புதுமுகம் ஊர்வசியின் அசத்தலான தோற்றத்தை முதலில் பாருங்கள். துணிச்சல் தெரிகிறதல்லவா.

இவர் இந்திய குஜராத்திப் பெண். மும்பையில் மொடலிங் செய்து கொண்டிருந்தவர். இந்திப் படத்தில் குழந்தை நட்சத்திரமாகவும் நடித்திருக்கிறார். கதாநாயகியாக நடிப்பது 'காமா' படத்திற்கு புதுமுகம் தேடியபோது தயாரிப்பாளரின் கண்ணில் பட்டாராம். இவரது தேக வசீகரத்தில் மயங்கி கொத்திக் கொண்டு வந்துவிட்டார் தயாரிப்பாளர்.

இயக்குநர் அசோக்குமார் புதிய விஷயங்கள் பலவற்றைக் கற்று தந்ததாக கூறுகிறார் ஊர்வசி. ஏற்கனவே ஒரு ஊர்வசி பிரபலமாக உள்ளதால், பெயர் குழப்பம் ஏற்படப்போகிறது.

### ஐந்து நாயகிகள்

உலக சாதனைப் படமாக எடுக்கப்படவிருந்த 'சுயம்வரம்' சோதனைப் படமாக பூஜையோடு நிற்கிறது. பன்னிரண்டு கதாநாயகர்களையும் ஒன்று சேர்ப்பது நடக்கக்கூடிய காரியமா?

ஆனால், தெலுங்கில் ஐந்து கதாநாயகிகளை வைத்து ஒரு படம் தயாரித்து முடித்து திரையிட்டு விட்டனர். அதனை 'லேடீஸ் ஸ்பெசல்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றி வெளியிடப் போகின்றனர்.

ரம்யா கிருஷ்ணன், மதுபாலா, கௌதமி, இந்திரஜா, கஸ்தூரி ஆகியோரே ஐந்து கதாநாயகிகள். இவர்களுடன் நடிக்கும் நாயகன் ஜெகபதி பாபு

### மீனா புராணம்

நடிகை ப்ரியாராமனுக்கு மீனா என்றால் கொள்ளைப் பிரியம். அழகு என்றால் அழகு, அப்படி ஒரு அழகு பார்த்துக் கொண்டே இருக்கலாம். "மீனாவை நேரில் கண்டால் பேசிக் கொண்டே இருப்போம். நேரம் போவதே தெரியாது" என்று புகழ்ந்து தள்ளுகிறார்.

நடிகையே நடிகையைப் புகழ்வது சற்று வித்தியாசம்தான்!

### காதலியின் சகோதரி

'என் இனிய காதலர்களே' படத்தில் பிரசாந்த் ஜோடியாக நடிப்பவர் ஷிவானி. இவர் கல்லூரி மாணவி. சேரனின் கண்பட்டதால் கதாநாயகியானவர். இது பழைய தகவல்தான்.

புதிய தகவல் ஒன்று இருக்கிறது. இயக்குநர் சேரனின் மனம் கவர்ந்த நடிகை ராஜேஸ்வரி. அவரது சொந்தச் சகோதரிதான் ஷிவானி.



கார்த்திக்-ரோஜா
படம்: சின்னராஜா

www.padippakam.com

## தாடு சொல்லுகிறோம்

டகரும் இயக்குநருமானவர் தன் ஊதி
சக்கமாக உயர்த்தி விட்டார். இந்திய
ில் ஒரு கோடி கேட்கிறார். அதில் ஒரு
தால்கூட உள்ளே வரவேண்டாம் என்று

பிரபலமான இரண்டெழுத்து நடிகை
தயாரித்து ஏகப்பட்ட கடனாளியானது
. இப்போது அவரது ஒரே இலட்சியம்
த்து, மேலும் பணம் சம்பாதிப்பதுதான்.
ுரமாக சகல முயற்சிகளிலும் ஈடுபட்டுள்
ப்பாளர் ஒருவர் நடிகை கேட்டதுக்கு
ஊதியம் கொடுத்தாராம். நடிகையின்
அந்தமாதிரியாம். இதனை நடிகையின்
ணி'யான இயக்குநர் கண்டும், காணாதது
றார். கடனுக்கு காரணமே அவர்தானே.
ாடிக்க முடியவில்லை.

நடிகையின் நடிப்பை விடியோ கசட்டில்
ிய துபாய் செல்வந்தர் ஒருவர், நடிகையை
று அழைத்துள்ளார். சமீபத்தில் வெளி
க்கு கவிதையான படத்தில் கஸ்தூர
ர்ச்சியை பார்த்து துபாய் செல்வந்தருக்கு
ில்லையாம். கலைச்சேவைக்கு செல்லப்
டிகை.

கலைச் சேவை செய்திதான். வெளிநாடு
சத்திரக் குழுவாக சென்றனர் நடிகர்
வர்களில் பழம்பெரும் நடிகை ஒருவரும்,
கவர்ச்சி நடிகை ஒருவரும் விமானத்
ச் சேவையை ஆரம்பித்து விட்டனராம்.
, சென்ற நாட்டிலும் அங்குள்ள கலைப்
் சேர்ந்து ஒரே கும்மாளம். திரும்பி
பெட்டி பெட்டியாக பொருட்களுடன்

ா பெயரை எண் கணித சாஸ்திரப்படி
ாராம். மண்வாசனை இயக்குநர். அதன்
மகன்தான் முன்னணி இளம் ஹீரோ
றாராம்.

## தேவா பெரும்மனம்

நம் நாட்டு அறிவிப்பாளர் உவைஸ் ஷெரீப்பின் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது தெரிந்த செய்தி.

இந் நிகழ்ச்சிக்காக இசையமைப்பாளர் தேவா வந்திருந்தார் அல்லவா. 8 இலட்சம் ரூபாவரை நிதி கிடைத்ததாம். அதில் ஒரு பகுதியை தேவாவுக்கு கொடுக்க முன்வந்தனராம். உதவியாகத்தான் செய்திருக்கிறேன். எனக்கு எதுவும் வேண்டாம்! என்று கூறிவிட்டு போய்விட்டாராம் தேவா.

## இன்னொரு சத்யராஜ்

முரசின் முகப்பில் சத்யராஜை உரித்து வைத்தது போல் காணப்படுபவர்தான் சத்யன். புது நாயகன்.

இளம் சத்யராஜ்போல தோற்றம் தரும் இவர்தான் சத்யராஜுக்கு பெயர் தந்தவர். என்ன புரியவில்லையா?

பிரபல தயாரிப்பாளர் மாதம்பட்டி சிவகுமாரின் மகன்தான் சத்யன். மாதம்பட்டி சிவகுமாரும் சத்யராஜும் உறவினர்கள்.

சத்யராஜின் உண்மையான பெயர் ரங்கராஜ். சினிமாவில் நடிக்க ஆசைப்பட்ட ரங்கராஜை மாதம்பட்டி சிவகுமார்தான் ஊக்குவித்தார். பண உதவி செய்தார். அதனால்தான் தனது பெயரில் பாதியை எடுத்துவிட்டு, மாதம்பட்டி சிவகுமாரின் மகனான சத்யன் பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்டு சத்யராஜ் ஆனார்.

புது நாயகன் சத்யனை இவர்தான் 'ஒரிஜினல் சத்யராஜ்' என்று எல்லோரிடமும் அறிமுகம் செய்து, மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளவரும் சத்யராஜ்தான்.

சத்யன் முதலில் நடிக்கும் படம் 'இளையவன்.' தந்தையாரான மாதம்பட்டி சிவகுமார் தயாரிக்கிறார். புதுமுகநாயகி ஜோடி சேர்கிறார். ரகுவரன், கரண், வையாபுரி, ராதிகா ஆகியோரும் உண்டு. இளையவனை இசையில் குளிப்பாட்ட போகிறவர் இளையராஜா.

* 'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' ஆகிய வெற்றிப்படங்களை வழங்கிய கார்த்திக்-சுந்தர் சி. கூட்டணி மறுபடி இணைந்து வழங்கும் படத்திற்கு 'நீ இல்லாமல் நானில்லை' என்று பெயரிடப் பட்டுள்ளது.
* 'பூவேலி' தெலுங்கில் தயாராகப்போகிறது. தமிழில் கதாநாயகியாக நடித்த கௌசல்யாவே தெலுங்கிலும் நாயகியாக நடிக்கிறார்.
* ஹவுஸ் ஃபுல் படத்தைத் தொடர்ந்து, 'பிளாக் டிக்கெட்', 'ரேஷன் கார்டு' ஆகிய படங்களின் பெயர்களைப் பதிவுசெய்யும் ஃபிலிம் சேம்பரில் பதிவு செய்துள்ளார் பார்த்திபன்.
* ஷங்கர் இயக்கும் 'முதல்வன்' படத்தில் கதாநாயகியாக மனிஷா கொய்ராலா நடிக்கிறார். தற்போது இப்படத்தில் ஷில்பா ஷெட்டியும், லைலாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
* 'கண்ணாத்தாள்' வெற்றிப்படத்தை இயக்கிய பாரதி கண்ணன் அடுத்து இயக்கும் 'திருநெல்வேலி' படத்தில் பிரபு கதாநாயகனாக நடிக்கிறார்.
* தமிழில் ஒரு படமும் இல்லாமல் இருக்கும் சங்கீதா, 'சபல்யம்' என்ற மலையாளப் படத்தில் நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக நடிக்கிறார் சுரேஷ் கோபி.
* 'சீவலப்பேரி பாண்டி', 'முஸ்தபா' போன்ற படங்களைத் தயாரித்த பி.ஜி. ஸ்ரீகாந்த், மகாதேவன் கணேஷ் என்பவருடன் சேர்ந்து இரண்டு இந்திப்படங்களைத் தயாரிக்கவுள்ளார்.
* ஷாலினியைத் தொடர்ந்து அவரது தங்கை ஷாமிலியும் கதாநாயகியாக அறிமுகமாகிறார். ராஜீவ் மேனன் இயக்கத்தில் மம்முட்டிக்கு மகளாக நடிக்கிறார் ஷாமிலி.
* 'கும்பகோணம் கோபாலு' படத்தில் அறிமுகமான மயூரி, மலையாளத்தில் நடித்த 'சம்மர் இன் பெத்லேகம்' பெருவெற்றிபெற்றதால், மலையாளத்தில் பிஸியாக நடிக்கிறார்.
* 'தாஜ்மஹால்' படத்தின் மூலம் மகன் மனோஜை நாயகனாக அறிமுகப்படுத்தும் பாரதிராஜா, சினிமாவுக்காக மகனின் பெயரை மனோஜ் பாரதி என்று மாற்றி வைக்கவுள்ளாராம்.



விஜயகாந்த்-மீனா
படம்: பெரியண்ணா




சினிமா விமர்சனம்

## இது ஆயிரத்தி நூறாவது

**படம்:** 'எதிரும் புதிரும்'
**இயக்கம்:** ரமணி
**நடிப்பு:** நெப்போலியன், மம்முட்டி.
நாசர், சங்கீதா, சரண்ராஜ், மனோரமா.
**ஒளிப்பதிவு:** கார்த்திக்ராஜா
**இசை:** வித்யாசாகர்

சந்தனக் கடத்தல் வீரப்பன் கதையை வைத்து வெளியாகியுள்ள ஆயிரத்தி நூறாவது படம். ஆகவே கதையில் புதுமை கிடையாது.

சந்தனக் கடத்தல் வீரய்யனாக நாசர் நடிக்கிறார். மேக்கப் கச்சிதம். ஆனால் நடிப்பதற்கு வாய்ப்பில்லை. வீரய்யனின் தம்பி அரசப்பனாக நெப்போலியன். கலெக்டராக மம்முட்டி.

அரசியல் தலைவியையும், மகளையும் (சோனியா-பிரியங்கா) கடத்தும் வீரய்யன், தனது தம்பி அரசப்பனை கலெக்டரிடம் அனுப்புகிறான். தம்பிக்கு சிகிச்சை செய்து அனுப்பினால்தான் பணயக்கைதிகளை விடுவிப்பேன் என்கிறான். கலெக்டருக்கு தெரியாமல் பொலிஸ் அதிகாரி சரண்ராஜ் பணயக்கைதிகளை மீட்கிறார். அரசப்பனை கொல்லத் திட்டம்போடுகிறார். மம்முட்டி எதிர்த்து போராடுகிறார். அப்படியும் அரசப்பனை பொலிசார் அடித்துக் கொல்கிறார்கள்.

பொலிசாரும், அரசியல்வாதிகளுமே வீரப்பன் போன்றோர் சரணடையாது இருப்பதற்கு காரணம் என்பதை துணிந்து சொல்லியுள்ளதை பாராட்டலாம். மம்முட்டியின் நடிப்பும் நேர்த்தி.

சிம்ரானும் அவரது 'நிஜக் காதலர் ராஜு சுந்தரமும் ஒரே ஒரு பாடல் காட்சியில் தோன்றி தம் நெருக்கத்தை காண்பித்து ரசிகர்களுக்கு கிளுகிளுப்பு ஊட்டியுள்ளனர். சண்டைக்காட்சி பிரியர்கள் பார்க்கலாம். சுமார் ரகம். நம் நாட்டில் விடியோவில் உலாவுகிறது.

## ரஜினியோடு ஆட்டம்

ரஜினியைத்தான் எல்லோரும் 'எப்பவரப்போறீங்க, எப்ப வரப் போறீங்க?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது அரசியலுக்கு எப்ப வரப்போறீங்க என்று கேட்கிறார்கள்.

அதே ரஜினியே ஒருவரிடம் 'எப்ப வரப்போறீங்க?' என்று கேட்டுக் கொண்டிருந்தாராம். அவர் வேறுயாருமல்ல கே.எஸ்.ரவிக்குமார்தான்.

தான் இயக்கும் படங்களில் ஒரு காட்சியிலாவது தடையைக் காட்டிவிடுவார் ரவிக்குமார். படையப்பாவில் எப்போது தடையைக் காட்டப்போகிறார் என்பதையே ரஜினி கேட்டுக்கொண்டிருந்தாராம். அதனால் பாடல் காட்சியொன்றில் ரஜினியுடன் இணைந்து ஆடியிருக்கிறார் ரவிக்குமார்.

## இரட்டை சூரியன்

'ஹவுஸ்ஃபுல்' படத்தின் பின்னர் பார்த்திபன் நடிக்கும் படம் 'பார்க்கணும் போல இருக்கு'. வித்தியாசமாக பெயர் சூட்டியுள்ளதுடன், படத்தை தயாரிப்பதும் அவர்தான்.

அர்ஜுனும், பார்த்திபனும் இணைந்து நடிக்கும் படம் ஒன்றும் பூஜை போடப்பட்டுள்ளது. அப் படத்திற்கு 'இரட்டைச் சூரியன்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இருவரும் முதன் முதலாக இணைந்து நடிக்கும் படம் இது.

இப்படங்களில் நாயகிகள் மற்றும் விடயங்கள் இன்னமும் முடிவாகவில்லை. பூஜைபோடப்பட்டு நடிகர், நடிகைகள் தேர்வு நடந்து வருகிறது.

## வானத்தைப்போல

வெற்றிப்பட இயக்குநர் விக்ரமன் இயக்கத்தில் விஜயகாந்த் முதன் முதலில் நடிப்பது நாம் முன்பே கூறிய தகவல். இப்போது படத்திற்கு பெயரும் வைத்தாயிற்று. 'வானத்தைப் போல'. அதுதான் பெயர்.

விக்ரமனின் 'சூர்யவம்சம்' மாபெரும் வெற்றிப்படம். அதில் சரத்குமார் இரட்டை வேடம். அதுபோல 'வானத்தைப் போல' படத்திலும் விஜயகாந்த்துக்கு இரண்டு வேடங்கள். அண்ணன், தம்பியாக நடிக்கிறார். அண்ணனுக்கு வயதான கெட்டப். சூப்பராக மேக்-அப் போட்டுள்ளனர். தமிழக முன்னாள் முதல்வர் காமராஜர் போன்ற தோற்றம்.

இசை: எஸ்.ஏ.ராஜ்குமார். கதாநாயகிகள் இன்னும் முடிவாகவில்லை. ஆனந்தராஜ், ரமேஷ்கண்ணா, மதன்பாப் உட்பட பலர் நடிக்கவுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

## இப்படி

அது காகம்......
அது–அப்படித்தான் இருக்கும்.
எச்சமிடும்,.....
எழுந்து போகும்......
அது காகம்.
அது–அப்படித்தான் இருக்கும்!
•••
ஆலாய்ப் பறக்காது;
அவதியாய்த் திரியாது;
வேலான சொற்களை
வீசிக் கிழிக்காது;
பாழான செயல்களை
செய்து முடிக்காது;
பாதகம் செய்யாது;
பழியேதும் கூறாது;
அது காகம்...
அது அப்படித்தான் இருக்கும்!
•••
உணவு கண்டால்
ஊர் கூட்டும்;
ஒற்றுமையை
உணர்ந்து வாழும்;
சாதியில்லை மதமில்லை
ஆதலினால் பேதமில்லை.
ஐந்தறிவு என்றாலும்
ஐக்கியத்தைக் காட்டி நிற்கும்!
•••
அது காகம்–அது
அப்படித்தான் இருக்கும்!

இவன்–
மனிதன்(?)....–இவன்
இப்படித்தான் இருப்பான்!

சௌஜன்யா.

## பேசாமலே

உன்
முகம் காணாமலே
முகவரி தேடும்
கண்கள்.....!
*
அந்தக் கண்களை
காணும் போதெல்லாம்
தைரியம் எங்கோ
தொலைந்து போகிறது.
*
விழிகள் மோதிக் கொள்ளும்..
ஏதும் பேசாத நிலையில்
நீயும் தான் நானும் தான்....
நீ பேசட்டும் என நானும்
நான் பேசட்டும் என நீயும்
நினைத்து இருக்கலாம்!
*
ஏனென்று மட்டும்
தெரியவில்லை....
ஏதோ ஒரு வித
தயக்கம்
நம்மிடையே....!

உத்திரன்- இணுவில்.

## தேர்தல் காட்சிகள்!

தேர்தல் தேதி தெரிந்ததுமே
தெருச் சண்டை தொடங்குவதும்....

தனித்தா– கூட்டா வெனவோடித்
தட்டுத் தடு மாறுவதும்....

வெட்டுக் குத்து வேலையின் பின்
வேட்புத் தாக்கல் செய்வதுவும்...

கொள்கையினைக் கொன்றுவிட்டு
ஆசனத்திற்காய் அலைவதுவும்....

விருப்பு வாக்கு வேட்டையிலே
விஷமத் தனம் காட்டுவதும்....

சூழ்ச்சிகரச் செயற்பாட்டில்
சூரத்தனம் விஞ்சுவதும்....

தன் தவறை மறைப்பதற்காய்
பிறர் பிழையைச் சுட்டுவதும்....

பக்கம் சார்ந்து பகலவனே
பக்கம் முழுக்க எழுதுவதும்....

குண்டர் படைக் கும்பலினைத்
தொண்டராகக் கூறுவதும்.....

சண்டித் தன முறைகளினால்
சாதிக்க நினைப்பதுவும்....

ஒற்றையாகச் செலுத்துவதைக்
கற்றையாகக் கொட்டுவதும்.....

மரணித்தோர் வாக்குகளை
மறந்திடாமற் போடுவதும்......

சாவடியில் இருப்போரை
சாகடித்து விரட்டுவதும்.....

அடாவடியால் ஆனதினை
அமோக வெற்றியாக்குவதும்.....

நம் நாட்டுத் தேர்தல்களில்
நடக்கும் விந்தைக் காட்சிகளோ!

ரேணுகா றிபாய்தீன்- ஏறாவூர்

## என் கல்லறை வாசகங்கள்

சிரிக்கும் வேளை
இதழ் விரிந்து
மௌனமாய் மலரும்
ஒரு தாமரை மொட்டு
உன் கன்னம்!
–0–
தாமரை இலை
தங்கிய
ஒற்றைத் தண்ணீர் முத்து
உன் கன்னக்குழி!
–0–
நான் எழுதி'
இரசித்து;
ஸ்பரிசித்த கவிதை
முற்றுப் பெறாமலேயே
போயிற்று—
நான்
உன் கல்லறையில்
மலர்க் கொத்துடன்
மண்டியிட்டு அமர்ந்தபோது.....!
–0–

ஐ.எல்.ஜலால்டீன்- செண்பகச்சோலை.

## யார் இவர்?



யார் இந்தச் சிறுவன்? முகத்தை உற்று நோக்கினால் கண்டு பிடித்துவிடலாம். வாலிபனாக மாறியபோது காதல் மன்னன் என்று புகழப்பட்ட நடிகர் இவர்.
தனது தாயாருடன் காட்சி தருகிறார். இன்றுவரை நடித்துக் கொண்டிருப்பவர். அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக் கொள்பவர். இப்போது தெரிந்துவிட்டதா?
இந்தப் படத்தைப் பார்க்கும்போது மறுபடியும் துள்ளிவிளையாட ஆசையாக இருப்பதாகவும் கூறுகிறார். அந்த துடுக்கான நடிகரை கண்டுபிடிக்க முடியாவிட்டால் 18ம் பக்கம் புரட்டுக.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கர்னர்'

**14.03.99** முதல் **20.03.99**வரை

**மேடம்:**
சனிமாற்றத்தால் மனத் தைரியம் உண்டாகும். நற்பலன்கள் ஏற்படும். உறவினர்களின் உதவி கிட்டும். எதிர் காலத்துக்கான திட்டமும் பயனுள்ள செயலும் உருவாகும். நண்பர்கள் சந்திப்புக்கும் இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 15, 18.

**இடபம்:**
சனிமாற்றம் அடைவதும் சுக்கிரன் மீனவீட்டில் பலம் பெற்றுக் காணப்படுவதும் எடுத்த கருமங்கள் வெற்றி பெறும் பயணங்கள் ஏற்படவும் வழி வகுக்கும். பணவருமானம், சகோதரர்களால் சிக்கல் நிலை.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள், எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 14, 20.

**மிதுனம்:**
உடலில் சோர்வு, எதிர் பாராத மகிழ்ச்சி, கிரக ஒழுங்கு மாற்றத்தால் பணவருவாய் ஏற்படும், பயணதாமதம், மனச் சஞ்சலம் உண்டாகலாம்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை, எண் : 6.
அதிஷ்ட திகதிகள் : 15, 19.

**கடகம்:**
வெளிநாட்டுப் பயணம். வெளி வட்டாரங்களில் இருந்து பல் வேறு பட்ட ஒத்துழைப்புக்கள். உறவினர்களால் சில பிரச் சனைகள் தோன்றும். பொதுவாக மன மகிழ்ச்சியும் சஞ்சலமும் மாறி மாறி வரும். எதிர்காலத்துக்கான அமைப்பு உருவாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : இள நீலம், எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 19, 20.

**சிம்மம்:**
அட்டமத்துச் சனிகாலம் முடி வுற்றதும் நற்பலன்கள் காணப் படும். மன மகிழ்ச்சி, புதிய முயற்சி, வெளிநாட்டுப் பிர யாணம் ஏற்படல், எதிர்பாராத பணவரவு.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 9, 18

**கன்னி:**
அட்டமத்துச்சனி தொடக்கம் பெறுவதும் கிரகசார அமைப்பு நன்றாக இல்லாததும் முயற்சி களைத் தாமதமாக்கும். மன நிம்மதி இருக்கமாட்டாது. வெளிநாட்டிலிருந்து பணம் வரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இள மஞ்சள், எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 14, 18.

**துலாம்:**
மனதிற்கு இனிய சம்பவங்கள், வெகுநாட்கள் எதிர்பார்த்த உறவு, திருப்தியாக அமையப் பெறும். சகோதரர் ஆதரவு பெருகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : றோஸ், எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 19, 15.

**விருட்சிகம்:**
கருமங்களில் இழுபறி காணப் பட்டாலும் இறுதியில் வெற்றியே. கல்வியில் வளர்ச்சி காணப்படும், தாய் வழி உதவிகிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு, எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 14, 16

**தனுசு:**
மனதில் வெறுப்பு, கல்வி முயற்சி என்பன சீராகக் காணப்படும். மூத்த சகோதரரின் உதவி கிடைக்கும். தொழில் தேடுவோருக்கு தொழில் அமைப்பு உருவாகக் கூடும் .
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மண்நிறம், எண் : 7
அதிஷ்ட திகதிகள் : 16, 20

**மகரம்:**
தொழில் பலன்: நீண்டதூரம் அல்லது வெளிநாட்டுப் பயணங் கள் ஏற்படும். தடைப்பட்ட கொடுக்கல் வாங்கல் சிக்கலைத் தீர்க்கும். பொதுவாக நன்மைகள் தரும் வாரம்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இள நிறங்கள், எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 14, 19.

**கும்பம்:**
மனதிற்கு இனிய சம்பவம் நடைபெறும். உறவினர்களுடன் வாக்குவாதம். தொழில் பண வருமானம், கல்வி என்பன சீராகக் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, புதன்.
அதிஷ்ட நிறம் : இளஞ் சிவப்பு, எண் : 6
அதிஷ்ட திகதிகள் : 15, 9

**மீனம்:**
சனியின் தாக்கம் குறைவதால் தடைப்பட்ட நல்ல கருமங்கள் நடை பெறக்கூடும். கல்வி, பண நிலை நன்றாக இருக்கும். உறவினர்களது ஒத்துழைப்புக் கிட்டும். காதலர்கள் ஒன்று சேருவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்
அதிஷ்ட நிறம் : இள நீலம், எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 15, 20.


300 வது முரசு தரும் 300 பரிசு மழை



முன்னூறு அதிஷ்ட சாலிகளுக்கு 'முரசு' தரும் பரிசுகள் காத்திருக்கின்றன.
இங்குள்ள பரிசுக்கூப்பனை கத்தரித்து, தபாலட்டையில் ஒட்டியோ, அல்லது தபாலுறையில் வைத்தோ அனுப்பலாம். பதிவுத் தபால்கள் ஏற்கப்பட மாட்டாது.

முரசின் பரிசுமழை 300

பெயர் :..............................................
தொ.பே.இல. :........................................
தொழில் :..............................................
முகவரி :..............................................
..............................................
..............................................
..............................................
கையொப்பம்


## ஹலோ டாக்டர்

**✚ நீரிழிவு நோயாளிகளுக்கு பாதம் மரத்துப் போவது ஏன்?**

பாதங்களில் மரப்பு, உணர்ச்சியற்ற சூழல் பாதங்களுக்கு ஏற்படுவது போன்று வேறு சில உறுப்புக்களுக்கும் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. இந்நிலைக்கு 'டயபட்டிக் நியூரோபதி' என்று பெயர்.

இதன் அறிகுறியாக கால்களில் உணர்ச்சி குறைந்து வருவதைக் குறிப்பிடலாம். மெத்தை மீது, கம்பளி மேல் படுப்பது போன்ற உணர்வுகளும் இவர்களுக்குத் தென்படும்.

சில சமயம் மரக்கட்டை மாதிரி ஆகிவிடுவதும் உண்டு. சில சமயம் காலணிகள் கீழே விழுவதைக் கூட இவர்களால் உணரமுடியாது.

சில சமயம் தூங்கிக் கொண்டிருக்கும்போது எலி கடித்து விட்டதைக்கூட' வலி தெரியாமல் தூங்கியிருப்பதாகச் சில நீரிழிவு நோயாளிகள் கூறுவதுண்டு.

எனவே நீரிழிவு நோயாளிகள் கூடுதல் பாத பராமரிப்பில் கவனம் எடுப்பது அவசியம். இவர்களுக்குத் தொடர்ந்து தகுந்த மருத்துவக் கண்காணிப்புத் தேவை என்பதை மறக்கக் கூடாது.



## வளர வளர

இது அமெரிக்க சஞ்சிகை ஒன்றில் வெளியான படம். இரண்டு மாதக் குழந்தையாக இருந்த போது ஜீன்ஸ்' சட்டை போட்டு புகைப்படம் எடுத்தனர். பெரிய பையன் போடக்கூடிய அந்த ஜீன்ஸ்' சட்டைக்குள் குழந்தை புகுந்து விளையாடுகிறது.

அந்தக் குழந்தை வளர வளர அந்த ஜீன்ஸ் மற்றும் சட்டையைப் போட்டு புகைப்படம் எடுத்துக் கொண்டே இருந்தனர்.

கடைசியில் 15 வயது மாணவனாக வளர்ச்சி கண்ட போதுதான் அவ்வை பொருந்தின.

இரண்டு மாதக் குழந்தைப் பருவம் முதல் 15 வயது மாணவப் பருவம் வரை ஒரே ஜீன்ஸ் சட்டை போட்டு எடுத்த புகைப்படங்கள்தான் இங்குள்ளன. வித்தியாசமான சிந்தனைதானே! ஆளும் வளரணும் ஜீன்சும் பொருந்தணும்!



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## ருசியோ ருசி



**மீ**ன் குழம்பு அதிக ருசியாக இருக்க என்ன செய்ய வேண்டும்?

- எலுமிச்சம் பழச்சாறு சேர்த்த தண்ணீரில் மீனை ஒரு மணிநேரம் போட்டு வைத்து விட்டுப் பின் பொரிந்தால், அதிக சுவை ஏற்படும்.
- ஆற்று மீன்களை உப்பு நீரில் போட்டு வைத்து விட்டுக் கழுவினால் அழுக்கு எளிதாக நீங்கும்.
- மீனை வெட்டிக் கழுவி மஞ்சள் தூள், உப்புத் தூள், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவற்றை ஒரு தேக்கரண்டி வீதம் சேர்த்து மீனில் தோய்த்து, ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் கழுவினால், மீனில் வாடை வீசாது.
- கால் தேக்கரண்டி கடுகை அரைத்து மீன் துண்டுகளில் கலந்து, குழம்பு வைத்தால் மீன் உதிர்ந்து போகாது.
- கெட்டியான துண்டு மீன்களில் காரமும் உப்பும் நன்றாகப் பிடிக்க வேண்டுமானால், மசாலாவில் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாறு சேருங்கள்.
- குளிர்சாதனப் பெட்டி உள்ளவர்கள் மீனுக்குரிய அரைப்பு மசாலாவை சிறிய பாத்திரங்களில் வைத்து அடைத்து ஃபிரீஸரில் வைத்தால் அதிக நாட்கள் கெடாமல் இருக்கும்.
- கருவாட்டில் இருக்கும் அதிக உப்புத் தன்மை போக வேண்டும் என்றால், அதனை அரைமணி நேரம் சோறு வடித்த தண்ணீரில் போட்டு வையுங்கள். ருசி கலக்கும். என்ன இப்போதே வாய் ஊறுகிறதா?

## பள்ளிக்கூடம் செல்லும்போது

**ப**ள்ளிக்கூடத்திற்குச் செல்லும் குழந்தைகளுக்குச் சாப்பிடவும் நீர் அருந்தவும் வீட்டிலிருந்தே சிற்றுண்டியும், போத்தலில் சுத்தமான நீரும் கொடுத்தனுப்புங்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று திரும்பிய பின், அந்த உடையை வெந்நீரில் நனைத்து விடுங்கள். மீண்டும் அதே உடையைப் போட வேண்டாம்.

குழந்தைகளுக்குக் கையில் காசு கொடுக்காதீர்கள். பள்ளிக்கூடத்திற்கு வெளியே விற்கும் ஐஸ்கிறீம், இனிப்புகள், பழங்கள் போன்றவற்றை வாங்குவார்கள். பெரும் பாலான தொற்றுநோய்கள் இவற்றின் மூலமே பரவுகின்றன.

பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியதும், குழந்தைகளிடம், அன்று பள்ளிக்கூடத்தில் நடந்தவற்றை விசாரித்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இதனால் குழந்தையின் மனப்பளு குறையும்.

உங்கள் குழந்தையின் படிப்புத் திறன், ஞாபக சக்தி, விளையாட்டுத் திறமை ஆகியவற்றை மற்றக் குழந்தைகளுடன் ஒப்பிடாதீர்கள். நீங்களே அவற்றை மேம்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டால் போதுமானது.



## வழுக்கை ஏன்?

**வ**யதானவர்களுக்கு மட்டுமல்ல இளவயதினருக்கும் வழுக்கை விழுகிறது. இது ஏன் ஏற்படுகிறது என்பதற்கு மருத்துவர்கள் கூறியுள்ள விளக்கத்தைப் பார்ப்போமா?

- மரபு ரீதியாக சிலருக்கு- தந்தை, பாட்டன் வழி வழியாக பரம்பரை காரணமாக வழுக்கை விழலாம்.
- சில ஹோர்மோன் குறைபாடு காரணமாகவும் சிலருக்கு வழுக்கை விழலாம்.
- உடம்பின் உஷ்ணநிலை காரணமாகவும் சிலருக்கு வழுக்கை விழலாம்.
- எண்ணெய் தொடர்ந்து பாவிக்காமை, புழு வெட்டு, பொடுகு போன்றவை காரணமாகவும் சிலருக்குத் தலைமுடி கொட்டலாம்.
- கண்ட கண்ட வாசனைத் தைலங்களும், வாசனை எண்ணெய்களும் கூட முடி உதிர்வை உண்டாக்கும்.
- அடிக்கடி ஷம்பு பயன்படுத்துவோருக்கு முடிகொட்டுகிறது. ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் முடி கொட்டுகிறது. அதற்கும் மேற் சொன்ன காரணங்களில் சில பொருந்தும்.

## அடுத்த வாரம் முதல்
## தங்கப் பரிசுப் போட்டி
## என்ன, நீங்கள் தயாரா?

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FJ

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 20-03-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்ணீரில் கரைந்த இரவுகள்

**78**

புவனா



**மொ**ஹமட் அல் ஃபாயிட் எகிப்து நாட்டைச் சேர்ந்தவர்.

அவரது முதல் மனைவி சமீரா சாதாரண குடும்பத்து பெண்ணல்ல; கரண்ஸி நோட்டுக்களால் கை துடைக்கக்கூடிய குடும்பத்துப் பெண்.

உலகின் மிகப் பெரிய பணக்காரரும், ஆயுத வியாபாரியுமான அண்டன் கஷோகியின் சகோதரிதான் சமீரா.

அல் ஃபாயிட்டுக்கும் சமீராவுக்கும் பிறந்த மூத்த ஆண் குழந்தைதான் டோடி ஃபயட்.

முகமட் அல் ஃபாயிட் எகிப்துக்கு டாட்டா காட்டிவிட்டு, பிரிட்டனில் குடியேறி 30 வருடங்கள் தாண்டிவிட்டன.


இலண்டனில் பல கோடிகளை கொட்டி ஹரோட்ஸ் என்னும் நிறுவனத்தை தொடங்கினார்.

தொழிலில் இலாபம் கொட்டியது. பிரிட்டனின் பெரும் பணக்காரர்களில் ஒருவரானார் அல் ஃபாயிட்.

ஆனால், அல் ஃபாயிட்டுக்கு குடியுரிமை வழங்க மட்டும் பிரிட்டன் மறுத்துவிட்டது.

ஆங்கிலேயர்களுக்கு முஸ்லிம் மக்கள்மீது இருக்கக்கூடிய வெறுப்பால்தான் தனக்கு

## பாசத்தைப் பொழிந்த ஃபயட்



காதலுக்காக முடிதுறந்த வின்சர் கோமகன் மனைவியோடு

மறுக்கப்பட்டதாக அல் ஃபாயிட் அதிருப்தி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

அவ்வாறு இருந்தாலும் அல் ஃபாயிட்டுக்கு ஆங்கிலேயர்களில் சிறந்த நண்பர்கள் பலரும் இருந்தனர்.

அந்த நண்பர்களில் ஒருவர்தான் டயானாவின் தந்தையான ஏர்ள்ஜொனி ஸ்பென்சர்.

டயானாவின் தந்தைக்கும், அல் ஃபாயிட்டுக்கும் இடையே வர்த்தகத் தொடர்புகளும் இருந்தன.

ஏர்ள் ஸ்பென்சரின் இரண்டாவது மனைவியான றைனி, அல் ஃபாயிட்டின் குடும்ப நண்பி. அல் ஃபாயிட்டுடனும் அவருக்கு நெருக்கம் இருந்தது.

ஏர்ள் ஸ்பென்சரை சந்திக்க அல் ஃபாயிட் வரும்போது டயானா சிறுமியாக இருந்தார்.

துருதுருவென்றிருந்த சிறுமி டயானாமீது பாசத்தைப் பொழிவார் அல் ஃபாயிட்.

தந்தையாருடன் பழகுவது போன்ற வாஞ்சையோடு அல் ஃபாயிட்டுடனும் பழகினார் டயானா.

### மகள்போல...

டயானாவுக்கு நகைச்சுவைக் கதைகள் கூறி மகிழ்ச்சியிலாத்துவார் அல் ஃபாயிட்.

டயானாவின் சிறிய தாயாரான றைனி ஒருமுறை ஃபாயிட்டிடம் "நீங்கள் இங்கு வந்தால் டயானா மகிழ்ச்சியில் திளைக்கிறாள்" என்று கூறினார். அப்படிக் கூறும்போது ஏர்ள் ஸ்பென்சரும் அங்கிருந்தார்.

அவரிடம் திரும்பி றைனி கூறினார், "ஃபாயிட் டயானாவை சிரிக்க வைக்கிறார். அவளுடைய துயரங்களை அவர் தோள் கொடுத்துத் தாங்குகிறார்."

றைனி கூறியதை ஆமோதிப்பது போல ஏர்ள் ஸ்பென்சர் புன்னகைக்க, ஃபாயிட்டும் சிரித்தபடியே "டயானாவும் எனக்கு மகள் மாதிரித்தான். அவளைப் பார்க்கும்போது எனக்கும் சந்தோசமாகவே இருக்கிறது," என்று கூறினார்.

டயானாவின் சிறிய தாயாருக்கு அல் ஃபாயிட்டின் மகனான டோடி ஃபயடடை நனகு தெரியும்.

தனது தந்தையாருடன் டோடி ஃபயட் டயானா வீட்டுக்குச் சென்றிருக்கிறார்.

அப்போது அவர்தான் தன் இறுதிப் பயணத்தில் கூட வரப்போகிறவர் என்பது தெரியாமலேயே டயானா அவருடன் கைகுலுக்கினார்.

அது சாதாரண சந்திப்புத்தான். இருவருமே ஒருவரை ஒருவர் பொருட்படுத்தவில்லை.

எகிப்தில் உள்ள அலக்ஸாண்டிரியாவில் 1956ல் டோடி ஃபயட் பிறந்தார்.

டோடி பிறந்த சில மாதங்களுக்குள் அல் ஃபாயிட்டும், அவர் மனைவி சமீராவும் பிரிந்துவிட்டனர்.

அதன் பின்னர் சமீரா தனது மைத்துனரை மணந்துகொண்டார். மோட்டார் விபத்து ஒன்றில் சமீராவின் புதிய கணவர் மரணமானார்.

அந்தச் சோகத்தோடு வாழ்ந்த சமீராவுக்கு டோடிதான் ஆறுதல்.

டோடியை அல் ஃபாயிட் வளர்த்த போதும், தாயாரை அடிக்கடி சென்று பார்த்து வருவார் டோடி.

1988ம் ஆண்டு சமீரா மூன்றாவது திருமணம் செய்து கொண்டார்.

சமீரா இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக மூன்றாவது கணவரும் அவரும் விவாகரத்து செய்து கொண்டனர்.

தாயாரின் துயரம், தாயாரும், தந்தையும் பிரிந்தமையால் ஏற்பட்ட ஏக்கம் போன்றவற்றால் டோடி சிறுவயதிலிருந்தே பாதிக்கப்பட்டார். எப்போதும் சோகம் அவரிடம் தங்கியிருந்தது.

டயானாவுக்கும்,டோடிக்கும் இடையே இருந்த ஒற்றுமை என்றும் அதனைக் கூறலாம்.

டயானாவும் தனது சிறு வயதிலிருந்தே நெஞ்சின் ஒரு மூலையில் சோகத்தை தாங்கிக்கொண்டே வளர்ந்தார்.

தனது தந்தையார் மறுமணம் செய்த போதும், சிறிய தாயாரிடம் இருந்து போதிய பாசத்தையோ, பரிவையோ டயானாவால் பெறமுடியவில்லை.

### சுதந்திரம்

டோடி வளர்ந்து வாலிபனாகியதும் தன் சோகத்தை மறக்க களியாட்டங்களை நாடிச் சென்றார்.

அல் ஃபாயிட்டுக்கு தன் மகனை கவனிக்க நேரமில்லை. பணம், மேலும், மேலும் பணம் என்ற குறியோடும் வெறியோடும் வர்த்தக உலகில் பண வேட்டை நடத்திக் கொண்டிருந்தார்.

தாயார் இறந்த சோகத்தை பங்குபோட்டுக் கொள்ளக்கூட டோடிக்கு தகுந்த துணை கிட்டவில்லை.

தனிமையில் புழுங்கினார். அழுது புலம்பினார்.

தனது தாயார் மூன்று திருமணம் செய்து கொண்டதுக்கும், அதில் இரண்டு தோல்வியில் முடிந்ததுக்கும் தாயார் பொறுப்பல்ல என்று கருதினார் டோடி.

தனது தந்தையார் உட்பட சமீராவுக்கு கிடைத்த கணவர்கள் யாருமே அவளது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை.

பணம் மட்டுமே வாழ்க்கை என்று நினைத்தனர். பணத்திலேயே சிறுவயது முதல் புரண்டு சலித்த சமீராவுக்கு உண்மையான அன்பு காட்ட ஒரு துணை தேவைப்பட்டது.

அவ்வாறான துணையை கடைசிவரை பெறமுடியாமலேயே அவளது வாழ்க்கைப் பயணம் முடிந்து போனது.

அதனை நினைத்து பலநாட்கள் கண்ணீர் விட்டார் டோடி.

கவலைகளை மறக்க ஒரே வழி களியாட்டம். நாடு நாடாக சுற்றினார். அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் டோடிக்கு பிடித்தமான இடம்.

வருடத்தில் ஒன்பது மாதங்கள் அங்குதான் இருப்பார். அவரைச் சுற்றி இளம் பெண்கள் இருப்பார்கள்.

### மாளிகை

தன் மகனுக்கு பெரும் சொத்து ஒன்றை வாங்கினார் அல் ஃபாயிட்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்குச் சொந்தமான பெரும் மாளிகை ஒன்று பாரிஸ் நகரில் இருந்தது. 'பரீசியன் வில்லா' என்பது அதன் பெயர்.

எலிஸபெத் மகாராணியின் தந்தையான ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் அண்ணரான வின்ஸர் கோமகனுக்குச் சொந்தமாக இருந்த மாளிகையே அதுவாகும்.

அந்த மாளிகையில் இருந்த ஒவ்வொரு பொருளும் மிகுந்த பெறுமதியானவை. வின்ஸர் கோமகனின் மாளிகையை வாங்கியது மூலம் பெரும் கௌரவத்தையும் பெற்றார் அல் ஃபாயிட்.

தனக்கு குடியுரிமை மறுத்த பிரிட்டன் நாட்டு அரச குடும்ப மாளிகையையே விலைக்கு



அல் ஃபயட்டுடன் டயானா

வாங்கிக் காட்டிவிட்டதாக அல் ஃபாயிட் தனக்கு நெருக்கமான நண்பர்களிடம் கூறிப் பெருமைப்பட்டார்.

1996 மார்ச்சில் அல் ஃபாயிட்டிடம் இருந்து டயானாவுக்கு அழைப்பு ஒன்று கிடைத்தது.

தனது நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒன்றுக்காக டயானாவை சிறப்பு விருந்தினராக அழைத்தார் அல் ஃபாயிட்.

**(அடுத்த வாரமும் வரும்)**

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## செங்கலடி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | செல்வி ஆர். ராகுலநாயகி, இல.20, பதுளை வீதி, செங்கலடி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com





> தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
> தடுக்க முயற்சி யுறார்!
> வாயைத் திறந்து சும்மா–கிளியே!
> வந்தே மாதர மென்பார்!
>
> –சுப்பிரமணிய பாரதியார்.

## யார் அதிகம்?

### பாப்பா முரசு சிறுகதை



அரண்மனைத் தோட்டத்தில் அக்பர் சக்கரவர்த்தியும் பீர்பாலும் உலாவிக் கொண்டிருந்தனர். அப்போது அக்பர், பீர்பாலை நோக்கி,

"நாட்டில் பார்வையற்றவர் அதிகமா? பார்வையுள்ளோர் அதிகமா?" என்று கேட்டார்.

அதற்கு பீர்பால், "பார்வையற்றவர்களே அதிகம் என்று எண்ணுகிறேன்;" என்றார்.

"ஏன் அப்படி எண்ணுகிறீர்?" என்று கேட்டார் அக்பர்.

"இதற்கு நாளை விளக்கம் கூறுகிறேன்;" என்று விட்டுப் போனார் பீர்பால்.

மறுதினம் அரண்மனை வாசலில் பீர்பால் ஒரு பிரம்புக் கூடையைக் கொண்டுவந்து பின்னத் தொடங்கினார். அருகில் ஓர் எழுத்தாணியும், ஏடும் வைத்திருந்தார்.

சிறிது நேரத்தில் அமைச்சர் பீர்பால் அரண்மனை வாசலில் பிரம்புக் கூடை பின்னும் செய்தி எங்கும் பரவியது.

அக்பர் சக்கரவர்த்தி முதலில் வந்தார்.

"பீர்பால்! என்ன செய்து கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் அக்பருடைய பெயரை ஏட்டில் எழுதினார். பிறகு சபைக்கு வந்த பலர், "என்ன செய்து கொண்டிருக்கிறீர்?" என்றே கேட்டனர். இவர்களுடைய பெயர்களை பார்வையற்றோர் பட்டியலில் எழுதினார்.

ஒரு சிலர், "கூடை பின்ன என்ன காரணம்?" என்று கேட்டனர். இவர்களுடைய பெயர்களை பார்வையுள்ளோர் பட்டியலில் எழுதினார்.

இப்படியாக, இரண்டு பட்டியல்கள் தயாரித்து முடித்தபிறகு, அக்பரிடம் கொடுத்தார் பீர்பால். பட்டியலைப் பார்த்த அக்பர் திடுக்கிட்டார். பார்வையற்றோர் பட்டியலில் அவரது பெயர் முதலில் இருந்தது.

"மன்னர் பெருமானே! நான் கூடை பின்னிக் கொண்டிருந்ததைத் தாங்கள் கண்ணால் பார்த்தும், 'பீர்பால் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?' என்று கேட்டீர்களே, உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? அதனால்தான் உங்கள் பெயர் பார்வையற்றோர் பட்டியலில் வந்தது.

மேலும் பலர் இப்படியே கேட்டார்கள். அவர்களும் கண் இருந்தும் பார்வையற்றவர்களே! அதனால்தான் அவர்களையும் பார்வையற்றோர் பட்டியலில் சேர்த்தேன்.

வேறு சிலர், 'கூடை பின்ன என்ன காரணம்?' என்று கேட்டார்கள். அவர்களுடைய பெயர்களை பார்வையுள்ளோர் பட்டியலில் சேர்த்தேன்.

இந்தப் பட்டியல்களில் பார்வையுள்ளோரை விட பார்வையற்றோரே அதிகம் உள்ளனர். அதனால்தான் நாட்டில் பார்வையுள்ளோரை விட பார்வையற்றோரே அதிகம் பேர் உள்ளனர் என்று நேற்றுத் தங்களுக்குத் தெரிவித்தேன்."

என்று ஆதாரத்தோடு கூறினார் பீர்பால்.

பீர்பால் சொன்ன கருத்தை ஒப்புக் கொண்ட அக்பர் அவரை மிகவும் பாராட்டினார்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



ஒஸ்ரியா தலைநகரான வியன்னாவில் ஒரு பண்டிகையின்போது செய்யப்பட்ட 'புடிங்' என்ற உணவுப் பதார்த்தம்தான் உலகிலேயே பெரிய 'புடிங்' பதார்த்தம். இதில் 4,500 முட்டைகள், 660 இறாத்தல் கிஸ்மிஸ், 220 இறாத்தல் பாதாம் பருப்பு, 275 இறாத்தல் சீனி, 23 இறாத்தல் வாசனைப் பொருட்கள், 10 போத்தல் சாராயம் போன்றவை சேர்க்கப்பட்டன. இதன் மொத்த நிறை 1500 இறாத்தல். இதைச் செய்து முடிக்க 10 நாட்கள் தேவைப்பட்டது.




அமெரிக்காவைச் சேர்ந்த டொன் பில்லர் என்பவரது தோட்டத்தில் தக்காளி ஒன்று விளைந்தது. அதைப் பறித்து சமையலுக்காக வெட்டும்போது, உள்ளே ஒரு ஸ்ட்ரோபெரி பழம் பழுத்திருந்தது.



'வயலெட் ஷெல்' எனப்படும் நத்தை, தன் காலில் உள்ள ஒரு பொருளை நீர்க்குமிழ்களாகச் செய்து படகுபோல் மிதக்கவிட்டு அதன் மீது ஆனந்தமாக நீந்தும்.

## அம்புலன்ஸ் சேவை



உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல அம்புலன்ஸ் வண்டி உதவுகிறது. இந்த அம்புலன்ஸ் சேவை எப்படி வந்தது என்று தெரியுமா?

அக்காலத்தில் போர்க்களத்தில் காயமடைந்த சிப்பாய்களை கனமான துணியில் தூளிபோல் கட்டி, அதில் படுக்கவைத்து மருத்துவரிடம் கொண்டு சென்றனர். இப்படிக் கொண்டு செல்வதால் காயம் பட்டவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள்.

எனவே நான்கு சக்கரம் பொருத்தப்பட்ட குதிரை வண்டிகளை 1487ம் ஆண்டு முதல் பயன்படுத்தத் தொடங்கினர். 1792 வரை இம்முறை பின்பற்றப்பட்டது. பேரண் டொமினிக் என்ற மருத்துவர் இந்தக் குதிரை வண்டி அம்புலன்ஸில் படுக்கை வசதி ஏற்படுத்தி, முதலுதவி செய்வதற்கான உபகரணங்களை வைத்து, வண்டியில் செல்லும் போதே முதலுதவி செய்யும் முறையை அறிமுகப்படுத்தினார்.

பின்னர் 1864ம் ஆண்டுதான் அம்புலன்ஸ் சேவையில் மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன. இதே காலகட்டத்தில் இராட்சத பலூன்களும் அம்புலன்ஸாகப் பயன்படுத்தப்பட்டன.

முதன் முதலில் அமெரிக்காவில், 1930ம் ஆண்டில் அம்புலன்ஸ் வாகனங்களில் ஒட்சிசன் சிலிண்டர் மற்றும் அவசரத் தேவை உபகரணங்கள், ஒரு மருத்துவர் மற்றும் ஒரு தாதி உடன் செல்லும் வழக்கமும் கொண்டுவரப்பட்டது.

இப்போது மருத்துவத்துறைக்கும் மனித உயிர்களுக்கும் அம்புலன்ஸ் சேவை மகத்தான சேவை செய்து வருகிறது. மோட்டார் வாகனங்கள் மட்டுமல்லாது படகு, ஹெலிக்கொப்டர், விமானங்கள் போன்றவையும் இப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **20.03.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **288**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 286

**பரிசுக்குரியவர்:**
கு. அருந்ததி,
மட்/கிரான் ம.வி. கிரான்–மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம். ரஞ்சன், உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை. | ஆர். சுரதிஸ், க/கலாபொக்க த.வி., மடுல்கெல. |
| ரி. துஷாந்தன், இந்து கல்லூரி, கொழும்பு–15. | கி. ஷர்மினா, கொ/சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. |
| இ. அரபாத், தி/அலிஹர் ம.வி., கிண்ணியா. | மிதுஷணன் வரேந்திரன், நம்மாதா பாடசாலை, நுவரெலியா. |
| சர்மினி லெஸ்லி ரவீந்திரன், ஸ்ரீ/சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | வி. அமுதா, மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயம், கந்தப்பளை. |
| றொஷான் குறூஸ், மத்திய கல்லூரி, வத்தேகம. | ஆர். சுரேஸ்குமார், புனித. சில்வெஸ்டர் கல்லூரி, கண்டி. |

## தூக்கம்

சில பிராணிகள் தூங்குவதைப் பற்றிய சில விந்தையான தகவல்கள் இதோ:

**புறாக்கள்:**

புறாக்கள் சில குறிப்பிட்ட இடத்தில்தான் தூங்கும். அவை நீண்ட தூரம் பறக்கும் சக்தி கொண்டபடியால், எவ்வளவு தூரம் இரை தேடிச் சென்றாலும் தூங்கும் இடத்திற்கு வந்துதான் தூங்கும்.

**உராங் உட்டான்:**

இது மரங்களின் உச்சியில்தான் தூங்கும். 50, 60 அடி உயரத்தில் கவை போன்ற கிளையைத் தேர்ந்தெடுத்து, அங்கு கிளைகளாலும், இலைகளாலும் பரண் அமைத்துத் தூங்கும்.

**துருவ வாத்து:**

துருவப் பிரதேசத்தில் வாழும் ஒருவகையான வாத்து பெரிய பனிக்கட்டியைக் குடைந்து அதில் படுத்துக் கொள்ளும்.

**நீர் யானை:**

நீர்யானைகள் மூக்கு மட்டும் வெளியே தெரியும்படி நீரில் மூழ்கியவாறு தூங்கும். இவை பக்கத்தில் இருக்கும் நீர்யானைகளின் முதுகில் தலையைச் சாய்த்துக் கொண்டு தூங்குவதும் உண்டு.

**கிவி:**

நியூஸிலாந்திலுள்ள கிவி பறவை பூமிக்கடியில் காணப்படும் வளைகளில் நுழைந்து கொண்டு பகல் நேரங்களில் தூங்கும்.

**முயல்:**

முயல்கள் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குக் குட்டித் தூக்கம் போடுகின்றன.


**தவளை வாயன்:**

பறவைகள் சின்னச் சத்தம் கேட்டாலும் விழித்துக் கொள்ளும். ஆனால் அவுஸ்திரேலியாவில் உள்ள தவளை வாயன் என்ற பறவை சரியான கும்பகர்ணன். தூங்கிக் கொண்டிருக்கும் அதைக் கையில் பிடித்து வைத்துக் கொண்டாலும் அதன் தூக்கம் கலையாது.

**வளையப்பாம்பு:**

இது ஒரு நாளில் இரண்டு மணிநேரம் மட்டுமே விழித்திருக்கும். நடுப்பகலில் விழித்திருந்து ஏதாவது இரையைப் பிடித்துத் தின்றுவிட்டு 22 மணித்தியாலங்கள் தூங்கும்.

## ஏன் தெரியுமா?



ஒருவர் எம்மிடம் நேரம் என்ன என்று கேட்டால், நேரம் 7 ஆக இருந்தால் '7 ஓ 'குளொக்' (7 o' CLOCK) என்று சொல்வோம் அல்லவா?

இதில் வரும் o'CLOCK என்றால் என்ன தெரியுமா?

7 of the clock என்பதன் சுருக்கமே 7 o' CLOCK என்றாகியது.

## 'மை' செய்திகள்



எழுதுவதற்குப் பயன்படும் மை முதலில் தாவரங்களின் சாற்றிலிருந்தே தயாரிக்கப்பட்டது. பின் கடுக்காய்ச் சாறிலிருந்து மை தயாரிக்கப்பட்டது. இதிலிருந்துதான் கறுப்புமை தயாரிக்கப்பட்டது.

எகிப்தியர்கள் 'பாபிரஸ்' என்னும் புல்லினால் ஆன காகிதங்களைப் பயன்படுத்தினார்கள். இதில் எழுதுவதற்கு கறுப்பு, சிவப்பு வர்ணங்களை நீரில் கரைத்து 'மை'யாகப் பயன்படுத்தினார்கள்.

அதன்பின் விளக்குக் கரியை எண்ணெயில் கலந்து மை தயாரிக்கப்பட்டது.

ரஷ்யாவில் புகையில் இருந்து வரும் கரித்தூளில் இருந்தும், ஆப்பிள் மற்றும் ஓக் மரத்தின், இலை, பட்டை, வேர் ஆகியவற்றின் சாறுகளில் இருந்தும் முதலில் மை தயாரித்தார்கள்.

## பேடன் பவுல் பிரபு



சாதி, மத பேதமற்ற சகோதர மனப்பான்மையுடன் நம்மை வளர்த்துக் கொள்ள 'சாரணர் இயக்கம்' வழிகாட்டுகிறது. மனித மேம்பாட்டிற்கு உறுதுணை புரியும் இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர்தான் பேடன் பவுல் பிரபு.

1857ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி- பேராசிரியர் மறைத்திரு பேடன் பவுலுக்கும் ஹென்றியட்டா அம்மையாருக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார். இலண்டன் நகரில் பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ரொபேர்ட் ஸ்டீவென்ஸன் ஸ்மித் பேடன் பவுல்.

மூன்று வயதில் தந்தையை இழந்த பேடன் பவுல், தாயாரால் வளர்க்கப்பட்டார். 1876ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். 1907ம் ஆண்டு இவரால் இங்கிலாந்தில் முதன் முதலாக சாரணியம் தோற்றுவிக்கப்பட்டது.

1912ம் ஆண்டு இவர் ஓலேஸ் ஸோம்ஸ் என்ற பெண்மணியைத் திருமணம் செய்தார். இவர் சாரணர் இயக்கத்தின் வளர்ச்சியில் பேடன் பவுலுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றி வந்தார்.

1920ம் ஆண்டு இலண்டன் நகரில் முதன் முதலாக சாரணர்களின் உலகப் பெருங் கூட்டம் நடைபெற்றது. அப்போது பேடன் பவுலுக்கு 'உலக முக்கிய சாரணர் விருது' வழங்கப்பட்டது. 1929ம் ஆண்டு இவருக்கு 'பிரபு' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

சாரணர் இயக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட 'சாரணர் தந்தை' பேடன் பவுல் பிரபு 1941ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி காலமானார்.



படிப்பகம்

www.padippakam.com

## மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர்
ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன்.
பம்பாயில் சிறையிலிருந்து
விடுதலையாகி வருபவனை
வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி
விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார்.
நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான்.
நித்தியன் சிறையில் இருந்து வந்தவன்
என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ
தெரிந்துவிட்டது.
அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய
சம்மதம் என்கின்றனர்.
நித்தியனோ சாந்தாவை
கல்யாணம் செய்ய விரும்புகிறான்.
சாந்தாவை கல்யாணம் செய்தால்,
தான் தற்கொலை செய்வேன் என்று
தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார்.
நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.
இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.

இனி......

# டிசம்பர் பௌர்ணமி

## 20

இன்ஸ்பெக்டர் குமரனின் முகபாவத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்த நித்தியன் கேட்டான்.

"ஸார்... எனிதிங் ராங்க்?"

"எஸ்! கண்ட்ரோல் ரூமிலிருந்து தகவல். ஆவடி அருகே உள்ள ஒரு எருக்கிடங்குக்குப் பக்கத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடைத்திருக்கிறது. அது சாந்தாவின் அடையாளங்களோடு ஒத்துப் போயிருக்கிறதா..."

"நோ..!" என்று வீறிட்டான் நித்தியன்.

"இன்ஸ்பெக்டர்... நிச்சயம். அது என் சாந்தாவோடதாய் இருக்க முடியாது."

"அதை உறுதி பண்ணிக்கத்தான் இப்ப கிளம்பிட்டிருக்கோம் நித்தியன். பாடியை நீங்கதான் வந்து அடையாளம் காட்டணும். மிஸ்டர் முகுந்தன் ஃபாரன்ஸிக் ஆபீஸர்களுக்காக இங்கேயே இருக்கட்டும்."

இன்ஸ்பெக்டர் குமரன் வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட நித்தியன் கலவர முகத்தோடு அவரைத் தொடர்ந்தான்.

மனசுக்குள் ஓயாத மழை மாதிரி ஒரே வாக்கியம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'கடவுளே! அது சாந்தாவாய் இருக்கக்கூடாது. கடவுளே! அது சாந்தாவாய் இருக்கக் கூடாது!'

இன்ஸ்பெக்டர் குமரனும் நித்தியனும் ஜீப்புக்குள் ஏறி உட்கார அது புறப்பட்டது.

நித்தியனின் கண்களில் நீர் கட்டிக் கொண்டு, கன்னங்களில் உருள தருணம் பார்த்தது.

இன்ஸ்பெக்டர் அவனுடைய தோளைத் தட்டிக் கொடுத்தார்.

"நித்தியன் இப்போ நாம பார்க்கப் போகிற பெண்ணோட பாடி சாந்தாவின் அடையாளங்களோடு ஒத்துப் போறதா கண்ட்ரோல் ரூமுக்கு தகவல் கிடைச்சிருக்கு. ஒருவேளை அது சாந்தாவா இருந்துட்டா நீங்க உங்க ஃபீலிங்க்ஸை கண்ட்ரோல் பண்ணிக்கிட்டு கொலையாளி யாருன்னு கண்டுபிடிக்க உதவணும்."

"ஸ...ஸார்."

குரல் தழுதழுத்தான் நித்தியன்.

"சொல்லுங்க!"

"இப்ப நாம பார்க்கப் போறது சாந்தாவாய் இருக்காது. என்னோட சாந்தா செத்திருக்க மாட்டா!"

"உங்க சாந்தா உயிரோட இருக்கணும். அதுதான் என்னோட ஆசையும் கூட! பட் நிலைமை வேறு விதமாயிருந்தா நீங்க பொலிஸுக்கு முழு அளவில் ஒத்துழைப்புத் தரணும்."

"எஸ்... ஸார்..." கண்ணீரோடு தலையசைத்தான் நித்தியன்.

அரை மணி நேரப்பயணம்.

ஆவடி எல்லைக்குள் நுழைந்தது ஜீப். இன்ஸ்பெக்டர் குமரன் டிரைவரின் தோளைத் தொட்டுச் சொன்னார்.

"எருக்கிடங்கு எங்கேன்னு அந்த பேக்கரியில் விசாரி."

டிரைவர் இறங்கிப் போய் விசாரித்து விட்டு வந்து ஜீப்பை எடுத்தார்.

"எங்கே?"

"பைபாஸ் ரோட்டுக்குப் போற வழியில் கார்னர் கட்டிலேயே இருக்கு ஸார்."

"போ...."

ஜீப் போயிற்று. ஐந்து நிமிஷ ஜீப் ஓட்டத் தில் பைபாஸ் ரோட்டின் வளைவில் ஆஸ் பெட்டாஸ் கூரைகளோடு பிரம்மாண்டமாய் பரவியிருந்த எருக்கிடங்கு கட்டடம் நாசிக்குப் பிடிக்காத வாசனையோடு வந்தது.

டிரைவர் எருக்கிடங்கு கட்டடத்துக்கு முன்பாய் இருந்த மரத்துக்குக் கீழே ஜீப்பை மௌனமாக்கினார்.

இன்ஸ்பெக்டர் குமரன் கீழே குதித்தார். எல்லா பக்கமும் நிசப்தம்.

ஆச்சரியப்பட்டார்.

"இங்கே ஒரு கொலை நடந்ததுக்கான அறிகுறியோ பரபரப்போ தெரியலையே?"

நித்தியன் ஜீப்பினின்றும் இறங்கிக் கொண்டே கேட்டான்.

"இந்த இடம்தானா... இல்லை வேற ஏதாவது இடமா? கண்ட்ரோல் ரூமிலிருந்து உங்களுக்குக் கிடைத்த அந்த மேஸேஜை கொஞ்சம் ரீகால் பண்ணிப் பாருங்க ஸார்."

குமரன் தன் தாடையைத் தடவிப் பார்வையை ஆகாயத்துக்குக் கொண்டு போனார்.

"ஆவடி எருக்கிடங்குக்குப் பக்கத்துல ஒரு பெண்ணோட உடல் கிடைச்சிருக்குன்னு தான் கண்ட்ரோல் ரூம்ல சொன்னாங்க.... அப்படியிருந்தா அந்த பீட் பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர் வந்து ஃபார்மல் என்கொயரியை ஆரம்பிச்சிருப்பாரே?"

"எதுக்கும் கண்ட்ரோல் ரூமை மறுபடியும் காண்டாக்ட் பண்ணிப் பார்த்துருங்க ஸார்."

நித்தியன் சொல்ல இன்ஸ்பெக்டர் குமரன் ஜீப்பில் இருந்த வயர்லஸ்ஸை உசுப்பி கண்ட்ரோல் ரூமைக் கூப்பிட்டார்.

"கண்ட்ரோல் ரூம்"

"எஸ்"

"இன்ஸ்பெக்டர் குமரன் ஸ்பீக்கிங்"

"சொல்லுங்க ஸார்... எனி மேஸேஜ்?"

"அரை மணி நேரத்துக்கு முன்னால் கண்ட்ரோல் ரூமிலிருந்து எனக்கு ஒரு தகவல் கொடுத்தீர்கள். ஆவடியில் உள்ள எருக்கிடங்குக்குப் பக்கத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடப்பதாகவும் அது காணாமல் போன சாந்தாவின் அடையாளங்களோடு உள்ளது என்றும் சொன்னீர்கள். நீங்கள் சொன்னபடி இங்கே வந்து பார்த்தால் அப்படியொரு சம்பவம் நடந்ததுக்கான அறிகுறியே இங்கு தென்படவில்லை. சரியான தகவல் என்ன என்பதை சொல்ல முடியுமா?"

கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசிய நபர் இப்போது பதற்றமானார்.

"ஸார் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்... இங்கே இந்த கண்ட்ரோல் ரூமிலிருந்து அப்படியொரு தகவல் உங்களுக்கு கொடுக்கப்படவில்லையே!"

"என்னது? தகவல் கொடுக்கப்படவில்லையா?"

"ஆமாம் ஸார்! கடந்த இரண்டு மணி நேரமாக கண்ட்ரோல் ரூமில் மெஸேஜ் டெல்லராக நான்தான் இருக்கிறேன். உங்களுக்கு அப்படியொரு தகவலை நான் தெரியப்படுத்தவேயில்லையே."

குமரன் லேசாய் கோபப்பட்டார்.

"மை குட்னஸ்! யாரோ விளையாடியிருக்கிறார்கள்."

"ஸார்! டெலிஃபோனில் பேசிய அந்தக் குரலை மறுபடியும் கேட்டால் உங்களால் அடையாளம் புரிந்துகொள்ள முடியுமா?"

"முடியும்."

"காணாமல் போன சாந்தாவுக்கு நெருக்கமான நபர்கள் யார் யார் என்பதை லிஸ்ட் எடுத்து அவர்களோடு பேசிப் பார்த்து குரலை இனம் கண்டுகொள்ள முடிகிறதா என்று பாருங்கள் சார்... சந்தேகப்படுகிற நபரை மட்டும் க்ளோஸ் ஃபாலோ அப் செய்தால் உண்மை தெரிந்துவிடும்."


"இனி அப்படித்தான் செய்ய வேண்டும்."

சொன்ன குமரன் வயர்லஸ்ஸை அணைத்துவிட்டு வியர்வை ஒழுகும் முகமாய் நின்றிருந்த நித்தியனை ஏறிட்டார்.

"நித்தியன்."

"ஸார்."

"சாந்தாவைக் கொண்டு போனவங்க பொலிஸ் டிபார்ட்மெண்டையும் உங்களையும் அலைக்கழிக்க வைக்கிறதுக்காக கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசற மாதிரி பொய்யான தகவலைக் கொடுத்திருக்காங்க."



"எதுக்காக ஸார் இப்படியொரு அலைக்கழிப்பு?"

"இந்த கேஸிலிருந்து பொலிஸை டைவர்ட் பண்ணத்தான்! நித்தியன் எனக்கு ஒரு லிஸ்ட் வேணும். சாந்தா கூட ஃப்ரண்ட்லியா பழகறவங்க யார் யாருங்கற விபரம் வேணும்."

"ஸார்! அந்த விபரமெல்லாம் எனக்குத் தெரியாது... அவ தங்கியிருந்த ஹாஸ்டல்ல கேட்டா விபரம் தெரியலாம்."

"கிளம்புங்க! ஹாஸ்டலுக்கு!"

குமரன் ஜீப்பில் தாவினார்.

❖○

இராத்திரி ஒன்பது மணி.

விஜயராகவன் மாடியிலிருந்து இறங்கிக் கொண்டே தன் மனைவியைக் கூப்பிட்டார்.

"புவனேஸ்வரி."

சமையலறையில் வேலைக்காரிக்கு ஏதோ இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்துக் கொண்டிருந்த புவனேஸ்வரி சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

"என்னங்க?"

"படப்பையில் இருக்கிற பண்ணை வீட்டுக்கு போய்ட்டு வந்துடறேன்."

"இந்த இராத்திரி நேரத்துல எதுக்குங்க அவ்வளவு தூரம்?"

"ஆடிட்டரை வரச் சொல்லியிருக்கிறேன். கொஞ்சம் வரவு செலவு பார்க்கணும். தனியா பேசி சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கு. இராத்திரி அங்கேயே தங்கிட மாட்டேன். எவ்வளவு நேரமானாலும் வந்துடுவேன்."

"சீக்கிரமா வந்துடுங்க."

"ம்... எங்கே விசாலி?"

"ஒரு டம்ளர் பால் மட்டும் சாப்பிட்டுட்டு அவ ரூமுக்கு படுக்கப் போயிட்டா. தூங்கியிருக்கமாட்டா. போய்ப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிருங்க."

விஜயராகவன் ஹாலைக் கடந்து கார்னரில் இருந்த விசாலியின் ரூமை நோக்கிப் போனார். அறை வெறுமனே சாத்தப்பட்டிருக்க- விசாலி கட்டிலுக்கு கண்மூடி சாய்ந்திருக்க- பக்கத்தில் இருந்த டேப் ரிக்கார்டரில் மீரா பஜன் ஒலித்துக் கொண்டிருந்தது. எம்.எஸ். வாய்ஸ்.

"விசாலி!"

விஜயராகவன் குரல் கொடுத்துக் கொண்டே அறைக்குள் வர விசாலி மூடியிருந்த இமைகளைப் பிரித்தாள். எழுந்து ரிக்கார்டரைத் தட்டினாள். மீரா பஜன் நின்றது.

விசாலியின் பக்கத்தில் வந்து நின்ற விஜயராகவன் அவளுடைய தலையை பரிவோடு தொட்டார்.

"நீ எதுக்கும் கவலைப்படாதேம்மா... அந்த ஜெயில் ரிட்டர்ன் நித்தியனை உன்னோட மனசிலிருந்து சுத்தமா துடைச்சிட்டு உனக்கு வேற ஒரு நல்ல மாப்பிள்ளையா பார்த்து கல்யாணம் பண்ணி வைக்க நானாச்சு."

"நான் கவலைப்படலேப்பா... இப்போதைய என்னோட கவலை சாந்தாவைப் பத்தித்தான். சாந்தாவுக்கு யாரால என்ன ஆபத்து ஏற்பட்டிருக்குமோன்னு தெரியலை."

"நீ ஏம்மா அவளைப் பத்தி கவலைப்பட்டு உன்னோட உடம்பைக் கெடுத்துக்கறே... அவ ஒரு டெலிஃபோன் க்ளீனிங் கேர்ள். பல வீடுகளுக்கும் போய்ட்டு வர்றவ... ஆபத்து எந்த உருவத்திலும் வந்திருக்கலாம்."

"மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்குப்பா."

"அதுக்கு நாமென்ன செய்ய முடியும்மா... அந்த நித்தியன் உன்னை ஏமாத்தினான். அதுக்காக அவனுக்கு ஆண்டவன் கொடுத்த தண்டனைதான் சாந்தா காணாம போயிருக்கிறது."

### கிரைம் சக்கரவர்த்தி
### ராஜேஸ்குமார்

"சாந்தா கிடைச்சுடுவாளாப்பா?"

"அதைப் பத்தி கவலைப்பட எனக்கு நேரம் இல்லேம்மா... இப்பக்கூட நான் படப்பையில் இருக்கிற நம்ம பண்ணை வீட்டுக்கு போயிட்டிருக்கேன். இன்கம் டாக்ஸ் பிரச்சனையைப் பத்தி ஆடிட்டர் கிட்டே கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. நீ கவலைப்படாமே படுத்து தூங்கம்மா... ரெண்டு நாள்ல எல்லாம் சரியாயிடும் குட்நைட்."

விசாலி குட்நைட் சொல்லி எந்திரமாய் தலையசைக்க, விஜயராகவன் வெளியே வந்தார். போர்டிகோவில் காத்திருந்த சியலோ காரில் திணித்துக் கொண்டு படப்பையை நோக்கி வேகமாய் விரட்டினார்.

(பௌர்ணமி தொடரும்)

---

## அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை



**ராஜையா**

# சதாம் உசேன்

## 32

அமெரிக்காவின் யுத்த விருப்பத்தை தலைவணங்கி ஏற்றுக் கொண்ட ஐ.நா.சபை, "1990 ஜனவரி 15ந் தேதிக்குள் குவைத்திலிருந்து ஈராக் இராணுவம் வெளியேறவேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் யுத்தத்தைத் தொடங்கலாம்!" என்று தீர்மானம் நிறைவேற்றியது. இதை சதாம் கடுமையாக எதிர்த்தார்.

"பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்து அதை தன் ஆதிக்கத்தின்கீழ் சுமார் அரை நூற்றாண்டுகளாக வைத்திருக்கும் இஸ்ரேலுக்கு எதிராக இப்படியொரு போர் தொடுக்க ஏன் அமெரிக்கா முன்வரவில்லை? அப்படியொரு போருக்கு அனுமதி கொடுத்து ஐ.நா.சபை ஏன் தீர்மானம் நிறைவேற்றவில்லை? இஸ்ரேல் அமெரிக்காவின் ஆப்த நண்பன் என்பதாலா?" என்று அமெரிக்காவின் 'ஆக்கிரமிப்பு எதிர்ப்பு' முகமூடியை சதாம் கிழித்தெறிந்தார்.

"பேச்சுவார்த்தை நடத்தி பாலஸ்தீனப் பிரச்சனைக்கும், குவைத் பிரச்சனைக்கும் ஒரு சேர தீர்வு காண ஈராக் தயாராக இருக்கிறது. இதை ஏற்க மறுத்தால் குவைத்திலிருந்து ஈராக் இராணுவத்தை வாபஸ் பெற முடியாது!" என்று அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

இதனால் பாலஸ்தீனப் பிரச்சனை சடுதியில் பிரதான விவகாரம் ஆனது. அரேபியர்கள் மத்தியிலும் உலக முஸ்லிம்களின் மத்தியிலும் ஹீரோ ஆனார் சதாம். இங்கெல்லாம் புதிதாய் பிறக்கும் குழந்தைகளுக்கு 'சதாம்' பெயர் சூட்டப்பட்டன...

"என்ன ஹாலா..! ஏன் அப்படிப் பார்க்குறே..?" என்று புன்னகையுடன் கேட்டார் சதாம்.

"ம்.. உங்களுக்கென்ன...? உலக ஹீரோ...!"

சதாம் சிரித்தார்.

"இன்னிக்கி உலகத்துல பெரிய வில்லன் அமெரிக்கா. அதனால நானுன்னு இல்ல.. அமெரிக்காவை- அதன் ஆதிக்கத்தை- சுரண்டலை எதிர்க்கிற எவனும் ஹீரோதான்!"

ஹாலாவின் கன்னத்தில் மிருதுவாய் முத்தமிட்டு விட்டு சோபாவில் உட்கார்ந்தார் சதாம்.

"ஒரு முக்கியமான விஷயம் பேசணும்!"

குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பார்த்தார் சதாம்...

சதாமுக்குப் பக்கத்தில் கடைக்குட்டி ஹாலா.

ஹாலாவுக்கு அருகில் சாஜிதா- இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் சதாமின் கைப்பிடித்தவர். ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டிருப்பவர். திருமணம் நடக்கும்போது அவர் தொடக்கப்பள்ளி ஆசிரியை. அதன்பிறகு அதே பள்ளியில் தலைமை ஆசிரியை.

சதாமுக்கு இந்தப்புறம் மூத்த மகன் உதய். வயது 27 ஆகிறது. பிஸினஸ்மேன். அப்பாவுக்கு ரொம்பப் பிரியமான மகன். அப்படியிருந்தும் ஒருமுறை பயங்கரக் குற்றம் செய்து அப்பாவின் கடுங்கோபத்துக்கு ஆளானவன்.

மூன்றாண்டுகளுக்கு முன் வீட்டு வேலைக்காரன் ஒருவனை ஆத்திரத்தில் அடித்துக் கொன்றுவிட்டான் உதய். இதனால் கோபமடைந்த சதாம். மகனென்றும் பாராமல் மரண தண்டனை விதித்துவிட்டார். பிறகு அரபு நாடுகளின் தலைவர்களெல்லாம் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதால் அந்த மரண தண்டனையை சதாம் ரத்து செய்தார்..

உதய்க்குப் பக்கத்தில் சதாமின் இளைய மகன் கெய்சி. வயது 25. 'இந்தக் கழுதைக்கு இன்னும் பொறுப்பு வர மாட்டேங்குது' என்பது சாஜிதாவின் கவலை.

சதாமுக்கு எதிரே, மூத்தமகள் ரசாத். வயது 24. திருமணமாகிவிட்டது. பக்கத்திலுள்ள அவள் கணவர் ஈராக் மந்திரியாக இருக்கிறார்.

அடுத்து சதாமின் இரண்டாவது மகள் நானா. வயது 19. இவளுக்கும் திருமணமாகிவிட்டது. இராணுவ கேப்டனான அவள் கணவர்- பக்கத்தில் இருக்கிறார்.

எல்லோருக்கும் இளையவளான ஹாலா, எல்லாரையும் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் சதாமிடம் மெல்லக் கேட்டாள்...

"என்னப்பா முக்கியமான விஷயம்?"

சதாம் அர்த்தபுஷ்டியோடு உதய்யைப் பார்த்துவிட்டு சொன்னார்: "என் இராணுவத்துக்கு உதய் வேணும்! அவனை போர் முனைக்கு அனுப்பப்போறேன்...!"

எல்லோருமே திடுக்கிட்டுப் போனார்கள். பெத்தமகனையே போருக்கு அனுப்பப் போறாரா, இவர்?

"அமெரிக்கக் கூட்டு இராணுவத்தை எதிர்த்தடிக்கணும். ஈராக்- பனாமா நாடு அல்ல என்கிறத அமெரிக்கா தலையில ஓங்கி அடிச்சி புரிய வைக்கணும்...

"முந்தி பனாமாவுக்குள் நுழைந்த அமெரிக்க இராணுவம், அந்தக் குட்டி நாட்டு ஜனாதிபதியை ரெண்டே நாளில் அரெஸ்ட் பண்ணி அமெரிக்காவுக்கு இழுத்துட்டுப் போச்சு..!"

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# உதட்டில் ஒரு மிச்சம்

## 21

### இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ்குப்தாவுடன் பைலட்டாக ஒடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.

அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.

பொலிஸ் சுடுகிறது. சீனு இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.

நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.

இனி...

தேவேந்திரன் பின் தலையை வலுவாக அசைத்தான்.

"இல்லை ஷிவா... தொழிற்சாலைகள் நம் நாட்டிற்குத் தேவையானவை. பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக் கூடியவை. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடியவை. தொழிற்சாலைகளுக்கு நாம் எதிரிகள் அல்ல. தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, காரியத்தைச் சாதித்து, ஒடக்கரை மக்களின் உணர்வுகளை மதிக்கத் தவறிவிட்ட பிரகாஷ் குப்தாவின்மீது தான் நம் கோபம். அவருக்கு எதிரானதுதான் நம் திட்டம். ஹெலிகாப்டர் மலைகளின் மீது மோதுவதுதான் சரியானது. நீ அப்படி மோதும் போது அதை வேடிக்கை பார்க்க நான் ஒடக்கரையில் காத்திருப்பேன்."

"தேவ்... நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இன்னொரு முறை மோகனனிடம் மாட்டினால், தப்பிப்பது கஷ்டம்."

"கவலைப்படாதே ஷிவா... நம் திட்டம் துல்லியமாக நடந்து முடியும்வரை எனக்கு எந்த ஆபத்தும் வராது!" என்று நம்பிக்கையுடன் சிரித்தான்.

வெள்ளிக்கிழமை பூஜை முடித்து நெற்றி நிறைய குங்குமம் வைத்திருந்தார் பிரகாஷ் குப்தா. அரவிந்தைக் கூப்பிட்டு அவன் முகத்தைத் திருப்பிப் பார்த்து, "யூ ஆர் இம்ப்ரூவிங்!" என்று சென்றமுறை சொன்னவர், இப்போது தொலைவிலிருந்து ஒரு புன்னகை புரிந்ததோடு சரி. காரணம் அரவிந்திற்குத் தெரிந்திருந்தது.

விமானத்தில் மொத்தம் பதினெட்டுப் பேர். அமைச்சரின் மனைவி, அவளுடைய தங்கை, சில நெருங்கிய நண்பர்கள் என்று அவருடைய குழுவே பன்னிரெண்டு பேர். பர்ஸனல் செக்ரட்டரி ஹேம்நாத், செக்யூரிட்டி ஆட்கள் ஐந்து பேர். அவர்களின் மத்தியில் அவர்.

அரவிந்த் அவனுடைய கோ-பைலட் ராகேஷ். விமானம் அற்புதமாக டேக் ஆஃப் செய்தது.

"மோகனன் மதுரையில் செக்யூரிட்டி ஏற்பாடுகள் செய்து வைத்து நமக்காகக் காத்திருப்பார்," என்றார் ஹேம்நாத். "ஹெலிகொப்டரில் இத்தனை பேரும் போவதென்பது முடியாது. எட்டுபேர் தான் உட்கார முடியும். மதுரை போனதும் மற்றவர்களைக் காரில் அனுப்பி விடலாமா சார்?"

"மதுரையிலிருந்து ஒடக்கரைக்கு எத்தனை நேரம் ட்ரைவிங்?"

"கார் நன்றாக இருந்தால் இரண்டு மணி நேரங்கள்."

"கோயிலுக்குப் போய் விட்டு நாம் வருவதற்குள் இவர்கள் போய் விடலாம்...." என்றார், அமைச்சர் பிரகாஷ்குப்தா. அவர் மனைவி, மோகனன், ஹேம்நாத், நான்கு செக்யூரிட்டி ஆட்கள் மட்டும் ஹெலிகொப்டரில் போவது என்று திட்டமிடப் பட்டது.

விமானம் குறிப்பிட்ட நேரத்தில் மதுரையில் வெண்ணெய் போல் தரையிறங்கியது.

★★

ஷிவா ஜன்னல் திரையை சற்றே விலக்கிப் பார்த்தான். அரசாங்கக் காரிலிருந்து இறங்கி ஹோட்டலுக்குள் நடந்து வரும் அரவிந்த்தைப் பார்த்தபோது, அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. அரவிந்திற்கும், அவனுக்கும் இவ்வளவு ஒற்றுமைகளா? நடையின் நேரத்தில் மட்டும் கவனமாய் இருந்தால் போதும்.

தேவின் திட்டம் அபாரமானது. அமைச்சரின் குழு கோவில் போயிருக்கும் நேரம் பைலட் ஓய்வெடுக்க எந்த ஹோட்டலில் ரூம் போடப்பட்டது என்று தெரிந்துகொண்டு அதே ஹோட்டலில் காலையிலேயே வேறொரு பெயரில் ரூம் எடுத்துவிட்டான்.



அந்த ரூமில் ஷிவா இப்போது காத்திருக்கிறான். இன்னும் சற்று நேரத்தில் அரவிந்த் அவன் ரூமில் மடக்கப்படுவான். அவனுக்குப் பதிலாக அதே உடைகளில் ஷிவா ஹோட்டலிருந்து வெளிப்படுவான். அவனை அரவிந்த் என்று நம்பி அரசாங்கக் கார் ஏற்றிக்கொள்ளும். ஹெலிகொப்டர் தளத்திற்கும் கூட்டிப் போகும்.

ஷிவாவின் இரத்தம் திடீரென்று வேகமெடுத்தது. இதயம் தும்பியின் சிறகு போல வெகு வேகமாகத் துடித்தது. பல வாரங்களாகச் செய்த ஒத்திகைகளின் அரங்கேற்ற நாள் வந்துவிட்டது.

கண்களை மூடி அம்மாவை மனதில் கொண்டு வந்தான். அவள் கால் நகங்களில் நெற்றி பதிய மானசீகமாக நமஸ்கரித்தான்.

கண்மூடி நர்மதாவை மனத்திரையில் கொண்டுவந்தான். அவளை இறுக அணைத்து முத்தமிட்டு உற்சாகமானான். இதயம் விரிவடைந்து கொண்டே போனது கூட பயமாயிருந்தது.

கண்ணாடிக்குத் திரும்பி தன் உடைகளைச் சரிபார்த் துக்கொள்ள ஆரம்பித்தான்.

●●●

அரவிந்த் ஷவரிலிருந்து வெளிப்பட்டான். உடம்பு குளிர்நீரால் இதமடைந்திருந்தது.

'ச்சே, மதுரை என்ன இவ்வளவு சூடாக இருக்கிறது? எஸ்.டி.டி.போட்டு ஜ்யோதியோடு பேசியாயிற்று.

ஏஸியைப் போட்டுக்கொண்டு சற்று நேரம் மியூஸிக் ஆஃப் தி மவுண்டன்ஸ் இசையை வாக்மேனில் இரசித்து விட்டுப் புறப்பட்டால் சரியாக இருக்கும்.

கிட்டத்தட்ட இன்னும் முக்கால் மணி நேரத்திற்கு மேல் இருக்கிறது.'

ரூம் மணி அடித்தது. 'கோ-பைலட் கடைவீதிக்குப் போவதாகச் சொல்லிப் போனானே! ஆர்டர் பண்ணியிருந்த ஐஸ் லஸ்ஸி வந்து விட்டது போலிருக்கிறது.' பைஜாமாவில் நுழைந்து கதவைத் திறந்தான். உடன், வயிற்றில் குத்தப்பட்டான். புரியுமுன் மூன்று பேர் நுழைந்து விட்டார்கள்.

"வாட்...வாட் இஸ் திஸ்...?" என்பதற்குள் வாயை மூடி ஒரு பிளாஸ்டர் ஒட்டப்பட்டு விட்டது. கைகளைப் பின்புறம் முறுக்கி ஒருவன் கயிற்றால் கட்டினான். இன்னொருத்தன் கால்களைக் கட்டினான். "விக்ரமைப் பகைத்துக்கொண்டு யாரும் நிம்மதியாக இருந்ததில்லை!" என்று ஒருத்தன் கரகரத்தான்.

அரவிந்தைக் கட்டிலுக்கடியில் உருட்டினார்கள். "டேய் நீ மட்டும் இங்கேயே காவல் இரு. இவனிடமிருந்து எந்த அசைவும் இருக்கக்கூடாது!" என்று ஒருத்தனை அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு, இண்டர்காமில் வேறொரு நம்பர் டயல் செய்து, "காரியம் சக்ஸஸ், ஷிவா..." என்று அரவிந்திற்குக் கேட்டது... ஆனால் புரியவில்லை.

விக்ரம் பற்றி ஜ்யோதி படித்துப் படித்து எச்சரித்தது நினைவுக்கு வந்தது.

'விக்ரம் என்ன இது முட்டாள் தனம்! ஏன் நண்பனே இப்படி அறிவீனமாய் நடந்து கொள்கிறாய்?' அரவிந்திற்கு நெஞ்சை அடைத்தது.

இண்டர்காம் ரிஸீவரை வைத்தான் ஷிவா.

காரியம் சக்ஸஸ்! இப்போது அவன் ஷிவா இல்லை அரவிந்த். நடையை ஒருமுறை மனதில் ஒத்திகை பார்த்தான். தலையை இலேசாக சுற்றியது. நோ, இப்போது அதிக உணர்ச்சிவசப்பட்டு காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது.

அரவிந்தின் குரலையும் மனதில் சொல்லிப் பார்த்து கடிகாரம் பார்த்தான். நேரம் நெருங்கிவிட்டது. அம்மாவை மனதில் நினைத்துப் புறப்பட்டான்.

♦♦♦

ஹெலிகொப்டர் தயாராகக் காத்திருந்தது.

மோகனன் ஹெலிகொப்டரிலிருந்து இறங்கினார். "பூராவும் செக் பண்ணிவிட்டேன். ஹெலிகொப்டர் இஸ் ஓ.கே!" என்றார் அங்கே நின்றிருந்த ஹேம்நாத்திடம்.

ஹேம்நாத் கடிகாரத்தைப் பார்த்தார். "கோவிலில் தரிசனம் முடிந்து அமைச்சர் புறப்பட்டு விட்டார் என்று தகவல் வந்து விட்டது. இன்னமும் அரவிந்தைக் காணோமே?"

"நான்கரை மணிக்கு ஹெலிகொப்டர் எடுக்க வேண்டும் என்று அவனுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பத்து நிமிடம் இருக்கிறது. வந்து விடுவான்!" என்றார் மோகனன். "ஒடக்கரையில் எல்லா ஏற்பாடுகளையும் சரி பார்த்து விட்டு வந்தேன். என் கவலையெல்லாம் ஒரே ஒரு ஆள்மீதுதான், ஹேம்நாத் சார்."

"யாரது?"

"தேவேந்திரன். அவன் இன்றுவரை மாட்டவில்லை. அவனிடம் ஒரு டெலஸ்கோபில் துப்பாக்கி இருந்தது. அதனாலேயே அவனைக் கவனிக்கச் சொல்லி பொலிஸ்காரர்களிடம் ஸ்பெஷலாகச் சொல்லியிருக்கிறேன். அதோ கார் வந்து விட்டது. அரவிந்த் வந்துவிட்டான்."

அம்பாஸிடர் கார் வேக மாக வந்து நின்றது. இருநூறு மீட்டர் இடைவெளியில் அமைச்சரின் காரும், பந்தோ பஸ்து வாகனங்களும் கூக் குரலிட்டுக் கொண்டு வந்தன.

"அரவிந்த்... யூ ஆர் லேட்" என்று உறுமினார் ஹேம்நாத். "நோ... எதுவும் விளக்கம் கொடுக்காதே. பார் தலையெல்லாம் கலைந்து மோசமாய் வந்திருக்கிறாய். அமைச்சர் வருவதற்குள் போய் இன்ஜினை ஸ்டார்ட் பண்ணு!" என்று அவனை உந்தித் தள்ளினார்.

அவன் உள்ளே ஏறி தன் இருக்கையில் அமர்ந்து இன்ஜினைத் துவக்கும் போது மோகனன் பார்த்தார். 'ஏன் அரவிந்த் இவ்வளவு டென்ஷனாக இருக்கிறான்?'

அதற்குள் அமைச்சரின் கார் வந்து நிற்க, மோகனன் அவசரமாக அங்கே ஓடினார்.

அமைச்சரிடம் வந்த மதுரைப் பிரமுகர்களிடம் அவர் வணக்கம் சொல்லி,

**சுபா**

மாலைகளை வாங்கிக்கொண்டு கையெடுக்காமல் கும்பிடு போட்டுவிட்டு, செக்யூரிட்டி துப்பாக்கிகள் புடைசூழ ஹெலிகொப்டருக்குள் மனைவியுடன் நுழைந்த போது, ஹெலிகாப்டரின் விசிறி முழு வேகத்துடன் சுற்றத் துவங்கியிருந்தது.

அவர்கள் இருக்கைகளில் அமர்ந்ததும், ஹேம்நாத் ஏறி அமைச்சரின் பக்கத்து இருக்கையில் அமர்ந்து கட்டை விரலை உயர்த்தி, "போகலாம்" என்றார். "அரவிந்த் நீ பதற்றமாகத் தெரிகிறாய்! நிதானமாக ஓட்டு."

ஹெலிகாப்டர் ஜிவ்வென்று வானத்தில் ஏறியது.

(○—வரும்—○)

---

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 02**

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கவியரசு கண்ணதாசன்~

உலகிலேயே இரண்டாம் கடற்கரையான அழகிய 'மெரினா பீச்' இந்தச் சென்னையில் தான் இருக்கிறது.

ஊரை அரித்துக் கொண்டிருக்கும் ராயபுரம் கடலும் இந்த நகரில்தான் இருக்கிறது.

உயர்ந்த எல்.ஐ.சி. கட்டடமும் இங்குதான் இருக்கிறது.

தாழ்ந்த குடிசைகளும் இங்குதான் இருக்கின்றன.

அகண்ட சாலைகளும், குறுகிய சந்துகளும் இங்கே உண்டு.

இதோ, ஏதோ ஒரு மணிக்கூண்டில் இரவு எட்டு மணி அடிக்கிறது.

அடையார்-காந்தி நகரில் ஒரு அழகான பங்களா.

மறவாதீர்கள்.

அந்த நகரின் பெயர் காந்தி நகர்.

அதற்கு மரியாதை வேண்டாமா?

கண்ணாடிக் கிண்ணங்கள் கடை விரிப்பது போல் ஒரு மேஜையின் மீது பரப்பப்படுகின்றன.

சில விஸ்கி பாட்டில்கள், பிராந்தி பாட்டில்கள் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன.

கலகலப்பும், சிரிப்பும், கொச்சைப் பேச்சுகளும் ஆரம்பமாகின்றன.

சில இளம் பெண்களும், சில பெரிய மனிதர்களும் சோபாக்களில் சாய்ந்திருக்கிறார்கள்.

இன்னும் வேடிக்கை விளையாட்டுகள் ஆரம்பமாகவில்லை.

"எங்கே அவர் இன்னும் காணோம்?"

தேடுகிறார்கள்.

நான் உள்ளே நுழைகிறேன்.

இப்போது நான் நடந்ததாகக் கதையைச் சொல்கிறேன்.

என்னைக் கண்டதும், அந்த அசெம்பிளியில் ஒரு ஆரவாரம்... பரபரப்பு.

"ஹலோ, ஹலோ" என்ற சத்தம்.

எழுந்து வந்து கட்டிப்பிடித்து வரவேற்றார் ஒருவர். ஏனென்றால், 'மாபெரிய தத்துவம்' ஒன்றை நிறைவேற்றப் போகிறோம் அல்லவா?

வரவேற்றவர் ஒரு தொழிற்சாலை மானேஜிங் டைரக்டர். பெயர்- நாராயணசாமி. வயது முப்பது தானிருக்கும். திருமணமானவர்.

வருஷத்தில் ஆறு மாதம் ஜப்பான், தாய்லாந்து, ஜெர்மன் என்று சுற்றிக் கொண்டிருப்பார்.

ஆரோக்கியம் இருக்கும்போது என்ன வேண்டுமானாலும் செய்யலாமே?

இரவுப் பொழுதை இனிமையாகக் கழிப்பதில் அவருக்கு நாட்டம் அதிகம்.

அடுத்தாற்போல் எனக்கு கைகொடுத்தவர் ஒரு உயர்தர பொலிஸ் அதிகாரி.

பெயர் கமலநாதன்!

அவரைப்போல் ஒரு நல்ல நண்பரை எங்கும் பார்க்க முடியாது.

அழகான பெண்ணை அவர் விபசாரக் குற்றத்திற்காகக் கைது செய்கிறார் என்றால், அது அன்றிரவு எங்கள் அசெம்பிளிக்கு வரப் போகிறது என்று அர்த்தம்!

காரைத் துரத்திச் சென்று பிராந்தி பாட்டில்களைக் கைப்பற்றுவதில் அவருக்கு நிகர் அவரே!

அப்படி அவர் கைப்பற்றாவிட்டால், விலை உயர்ந்த மது எங்களுக்கு எப்படிக் கிடைக்கும்?



"நீங்கள் வந்த பிறகுதான், பாட்டில்களை ஒப்பன் பண்ணுவதாக இருந்தோம்...!" என்றார் கமலநாதன்.

"சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் சொல்லுவதெல்லாம் உண்மை. இது உண்மையான விஸ்கி; போலியல்ல என்று சொல்லிக்கொண்டே ஒரு பாட்டிலைத் திறந்தார்" வக்கீல் வரதராஜன்.

**கவியரசு கண்ணதாசன்**

பத்துக் கண்ணாடிக் கிண்ணங்கள் நிரப்பப்பட்டன.

கிண்ணங்களை நிரப்பும்போது, இரண்டு பெண்கள் மட்டுமே இருந்த இடத்தில், நிரப்பி முடியும்போது நாலு பெண்கள் கூட வந்துவிட்டார்கள்.

அவர்கள் பெயர் முறையே- மகாலட்சுமி, சரஸ்வதி, ஜானகி, நளாயினி, வனஜா, ராதா.

மொத்தம் ஆறுபேர்.

கற்பகாம்பாளுக்கே ஆறு வடிவம் அல்லவா? அதனால்! என்ன, தேவிகளின் பெயர் வைத்துக்கொண்டு இந்த சீர்கெட்ட வேலை என்கிறீர்களா?

பிறக்கும்போது அவர்கள் தேவிகளாகத்தான் பிறந்தார்கள்.

இந்தியப் பொருளாதாரம் உழுத உழவில், விதைத்த விதையில், விளைந்த விளைச்சலில் அவர்கள் பாவிகளாகி விட்டார்கள்!

வழக்கிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அதிகாரிகள் சொன்னபடி அவர்கள் அடையாறுக்கு வந்திருக்கிறார்கள்; அவ்வளவுதான்!

ஒரு கிளாஸ்தான் உள்ளே இறங்கிற்று. மருதாசலம் என்ற நண்பர் பாட்டுப் பாடவே ஆரம்பித்துவிட்டார்.

அதுவும் தமிழ் பாட்டல்ல, ஆங்கிலப் பாட்டு!

"ஆங்கில விஸ்கி சாப்பிட்டால் ஆங்கிலப் பாட்டு வரும்! நாட்டுச் சரக்குச் சாப்பிட்டால் கிராமியப் பாட்டு வரும்!"

திடீரென்று ஒரு ஜோக் அடித்தார் வக்கீல் வரதராஜன்.

அவர் தமிழிலே ஜோக் அடிப்பதைக் கேட்டுக் கொண்டே இருந்தார், வங்காளத்தைச் சேர்ந்த ராய்.

"நீங்கள் ஆங்கிலத்தில் ஜோக் அடித்தால் நானும் ரசிக்கலாமே?" என்றார்.

உடனே வரதராஜன், "கொஞ்சம் பொறுங்கள்! இரண்டு கிளாசுக்கு அப்புறம் நான் ஆங்கிலம் மட்டுமே பேசுவேன்" என்றார்.

"இந்த மதுவும் மாதுவும் இல்லையென்றால் உலகம் எவ்வளவு சீர் கெட்டுப் போயிருக்கும்?" என்றார் நாராயணசாமி.

"காங்கிரஸ்காரர்கள் செய்த தவறுகளிலெல்லாம் பெரிய தவறு, மது விலக்குத்தான்!" என்றார் வரதராஜன்.

"டில்லியில் மதுவிலக்கு இல்லையே..." என்றார் அதிகாரி கமலநாதன்.

"ஆனால் மாதவிலக்கு இருக்கிறதே!" என்றார் வரதராஜன்.

"அதென்ன மாதவிலக்கு?" என்று கேட்டார் கமலநாதன்.

"அதாவது- மாதத்தில் சில நாட்கள் அங்கு மது வாங்க முடியாது!" என்றார் வரதராஜன்.

(அந்தரங்கம் வரும்)

www.padippakam.com

# கடவுள் மாதிரி



நீதவானின் தீர்ப்பைக் கேட்டதும் அதிர்ச்சியினால் பிரமித்துப்போனார்.

"அடப்பாவி ஏமாற்றிப் போட்டானே..?"

ஆத்திர மேலீட்டினால் நம்பியிருந்தவனை திட்டித் தீர்த்துக் கொண்டார். நீதிமன்றம் முழுவதும் வரைக்கும் அடக்கிக் கொண்டிருந்த அழுகையினைப் பின்னர் மணிக்கு 100 மைல் வேகத்தில் வீசும் புயலாக்கிக் கொள்ள, அங்கிருந்தவர்கள் பார்வை அனைத்தும் அவர் மனைவி பக்கமே திரும்பியது. ஆங்காங்கே நின்றிருந்தவர்கள் முதலில் பதறிப் போனார்கள்.

"ஐயா! அம்மாவை அழவேண்டாமென்று சொல்லுங்கோ...!"

மூத்தவர் ஆதங்கம் நியாயமாகப் பட்டாலும், பெற்றவள் மனதைப் பூரணமாகப் புரிந்து கொண்டமையினால் சற்று மௌனமாகி -பின்னர் அருகே சென்று ஆறுதலாக தலையைத் தடவிக் கொண்டே,

"அழாதப்பா. நாம நல்லா ஏமாந்துட்டோம்."

"அவன் ஏன் வரவில்லை..?"

"..............................."

"என்னங்க! அடிக்கடி கடவுள் மாதிரி, கடவுள் மாதிரி என்று கூறிக்கொண்டிருப்பீர்களே..! கடைசியில கைவிட்டுப் போட்டானே..?" அவர்கள் மகனின் வழக்கின் அன்றைய தீர்ப்பைப் பலரும் கேட்டிருந்தும், பெற்றவர்களின் பரிதாப நிலைமை கண்டதன் பின்னரே அதன் மீதொரு இரக்கம் மேலிட்டது. நீதவானின் தீர்ப்பிற்கு அவர்கள் மகன் பொறுத்த பாடாகயில்லை என்ற உண்மைகளை யாரிடம் இனி முறையிடுவது? நாட்டின் சூழ்நிலை அப்படி!

"ச்சே! அவனை நம்பி புறொக்டரையும் வைத்துக் கொள்ளாது போனது எவ்வளவு மடத்தனமாய்ப் போச்சு. நம்பவச்சல்லவா கழுத்தறுத்துப் போட்டான்." சற்று கடுமையாகவே சபித்துக்கொண்டவர் பார்வையில், எதிரே கையில் விலங்குடன் மகன். 14 நாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்கும்படியான தீர்ப்பின் பிரகாரம் வாகனத்தில் ஏற்றுவதற்காக அழைத்துக் கொண்டு சென்றனர்.

அவருக்குத் தெரியும்- இனிமேல் ஆக வேண்டியது ஏதுமில்லையென்று. இருந்தும் உடன் அவ்விடத்தைவிட்டு அகல மனம் இடமளிக்காமையினால் நீதிமன்றப் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டார். எல்லோரும் சென்றதன் பின்னர் வந்ததொரு அமைதி நிலையில் அவர் அருகே சென்ற பியோன்,

"ஐயா! ஏன் இப்படி இருந்தீங்கோ...?"

"இப்படியென்றால்...!"

"கையில் காசில்லாவிட்டாலும் பரவாயில்லை. வசதி குறைந்தவர்களுக்கென்று வாதாட நாதன் புறொக்டர் இருந்தாரே அவர்கிட்ட சொல்லியிருந்தா உங்க மகனுக்காக வாதாடி நல்ல முடிவா எடுத்துத் தந்திருப்பார்!"

"புறொக்டர் வைச்சிருந்தா சரிவந்திருக்குமா...?"

"உங்க மகன் சார்பான நியாயத்தை பேச யாருமில்லாத படியால்தான் தீர்ப்பு இப்படியாகியிருக்கு." அவன் பேசிக் கொண்டே போனான். அவர் கண்களில் தொடராகக் கண்ணீர்க் கோடுகள்.

"அண்ணே! நாங்க மோசம் போயிட்டோம். எங்க அண்ணனை சந்தேகத்துல தான் பிடிச்சிருக்காங்க. அது பெரிய கேஸல்ல என்றும், பிடிச்ச பொலிஸ்காரங்க சந்தேகம் இல்லை என்று கோட்டில சொல்லிட்டா ஆளை விட்டுடுவாங்க என்றும் சொல்லிட்டு ஒருத்தர் வந்தார். அவர்தான் வீணே புறொக்டர் எல்லாம் பிடித்து காசைக் கரியாக்க வேண்டாம் என்று சொல்லி எங்களைத் தடுத்துப் போட்டார். ஐயா அவரையே கடவுள் மாதிரி நம்பிக்கொண்டிருந்ததால எல்லாம் நாசமாப்போச்சுது."

பியோனுக்குப் பரிதாபமாகியது. 'என்னே அசட்டுத் தனங்கள்! பாவம் சனங்கள் எப்படி எல்லாம் ஏமாறிப்படுகுதுகள்.'

"காசு ஏதும் கொடுத்தனீங்களோ..?"

"முழுசா ஆயிரத்தை வாங்கிட்டான். அது அட்வான்ஸாம்."

"அடப்பாவமே! ஆளைத் தெரியுமோ...?"

"கொஞ்சம் பழக்கம் தான். மொத்தமாக கட்டையாய் ஒரு கண் முடின மாதிரி இருப்பான்."

சட்டென்று அவனுக்குப் புரிந்துவிட்டது.

"ஐயோ அவனா...! எத்தனை சனம் இங்கே அவனைத் திட்டிக் கொண்டிருக்குது.

**தி.இளையவன்**

**பிடிச்ச பொலிஸ்காரர்கள் சந்தேகமில்லை என்று சொன்னால்.....**

ஏதோ பொலிஸூல சில பெரியவங்களைப் பழக்கம் வைச்சுக் கொண்டு அப்பாவிங்க வாழ்க்கையோட விளையாடுவதே அவன் பொழைப்பாப் போச்சு- முதல்ல அவனுக்கு எதிரா முறையிடுங்க." தன் சக்திக்கு உட்பட்ட வார்த்தைகளைக் கொட்டி விட்டு பியோன் அகன்றதும் எவ்விதமான சக்திகளுமற்ற நிலையில் அவர் தூரே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அங்கே தூரத்தில் அவரது மகனை ஜீப்பில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ■

# .....கணவன் அமைவதெல்லாம்.......

இரவு மணி பத்தைத் தாண்டிவிட்டது. அன்னம்மா குசினி வேலையை முடித்துக் கொண்டு முந்தானையால் முகத்தைத் துடைத்தபடி மண்டபத்துக்கு வந்தாள்.

அவள் கணவர் குமாரசாமி சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்து, கன்னத்தில் கைவைத்து முகட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். கவலையின் கோடுகள் அவர் முகத்தில் துல்லியமாய்த் தெரிந்தன.

"என்னப்பா.. எந்தக் கோட்டையைப் பிடிக்கிற யோசனை?"

பதில் மௌனமாகிப் போனதை அறிந்த அன்னம்மா கணவனருகில் வந்து கன்னத்திலிருந்த கையை எடுத்துவிட்டு, "என்ன யோசனை?" என்றாள்.



"நம் சாரதாவைப் பற்றித்தான் கவலையாக்கிடக்கு..." கண்ணாடியைக் கழற்றி கண்களைப் புறங்கையால் துடைத்தார் குமாரசாமி.

"பிள்ளைகளைக் கலியாணங் கட்டிக் குடுத்தாப் பாரம் குறையும்- நிம்மதி எண்டு தான் நினைச்சம். சொல்லி விட்டுப் பெருமுச்சுவிட்டார்.

**ரூபராணி**

குமாரசாமிக்கும் அன்னம்மாவுக்கும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்த ஒரே பெண் சாரதா. செல்வத்திலும் செழிப்பிலும் வளர்ந்த சாரதா, அழகிலும் குணத்திலும் பெற்றவர்களை ஒத்திருந்தாள். மகளைப் படிப்பித்து ஆளாக்கிவிட வேண்டுமென்பதில் விடாப்பிடியாய் இருந்து வெற்றியுங் கண்டவர் குமாரசாமி. சாரதா பெற்ற பட்டங்களை எண்ணி உள்ளூரப் பெருமைப்பட்டுக் கொள்வார்.

எத்தனை, பட்டங்களைப் பெற்றாலும் சாரதாவின் அடக்கமும் பணிவும் பழகுவோர்களைக் காந்தமாய் இழுக்கும்.

கிளிநொச்சியில் நடந்த பெருஞ் சமரில் குமாரசாமி குடும்பத்தின் வீடு வாசல் தரைமட்டமாகிவிட்டது. அங்கிருந்து இடம் பெயர்ந்து திருகோணமலைக்கு வந்தபோது குமாரசாமி யிடம் வேலை பார்த்த கிளாக் ராகுலனின் உதவியால் அவர்கள் வீட்டின் ஒரு பகுதியில் தங்க இடம் கிடைத்தது.

குமாரசாமி குடும்பத்துக்குத் தேவையான உதவிகளையும் ராகுலன் செய்து கொடுத்தான். ஒரு பிரபல கம்பெனியில் பொறுப்புள்ள பதவியில் நியமனம் பெற்றாள் சாரதா.

நாட்கள் வருடங்களாக உருண்டன. சாரதாவுக்குத் தகுதியான வரனைத் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டார் குமாரசாமி. அவர் நினைத்தபடி வரன் கிடைக்கவில்லை என்று ராகுலனிடம் தன் கவலையைப் பகிர்ந்து கொண்டார் குமாரசாமி.

"ஐயா உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால், சாரதாவைக் கட்டிக்க எனக்கு முழுச்சம்மதம்!" ராகுலனின் வாயிலிருந்து வெளி வந்த வார்த்தைகளைக் கேட்ட குமாரசாமி அதிர்ச்சியையும் மீறிப் புன்னகைத்தார்.

சாரதாவுக்கு ஏற்ற கணவனைத் தேடுவதில் பலசிரமங்களைச் சந்தித்தார் குமாரசாமி. "ஏனப்பா ராகுலன் தெரிஞ்ச பெடியன். படிப்பு உத்தியோகம் குறைச்சலெண்டாலும், மகளைக் கண் கலங்காமவச்சி வீட்டோட மாப்பிளையா இருப்பானே!" அன்னம்மாவின் ஆலோசனைப்படி சாரதா ராகுலனின் திருமணம் நடந்தேறியது.

இரண்டு ஆண்டுகளில் வசதியும் செல்வாக்கும் போட்டி போட்டுக் கொண்டு சாரதாவைத் தேடி வந்தன. மனைவியின் வளர்ச்சியில் ராகுலுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பொறாமை கோலமிட்டது. அற்ப விஷயங்களுக்கெல்லாம் சாரதாமீது எரிந்து விழத் தொடங்கிவிட்டான்.

அவள் எது சொன்னாலும்- "நீ பெரிய அதிகாரி என்ற நெனப்போ? அதெல்லாம் ஆபீஸ்ல வச்சுக்க, இது சாதாரண கிளாக்கிட வீடு!" என்பான்.

அன்னம்மாவும் குமாரசாமியும் தமது ஒரே பெண் மணம் முடித்த நாளில் இருந்து படும் சித்தரவதைகளை எண்ணிக் கண்ணீர்விட்டனர்.

கொன்பிறன்ஸ் முடிந்து ஆபீஸ் வாகனத்தில் சாரதா வீடு திரும்பியபோது இரவு மணி எட்டு. படபடக்கும் இதயத்துடன் உள்ளே நுழைந்தவளை வழமைக்கு மாறான அன்புடன் வரவேற்றான் ராகுலன். ஆச்சரியம் அவளைக் கௌவியது.

இரவு உணவை முடித்துக்கொண்டு படுக்கச் சென்றபோது, "சாரு குட்நியூஸ் உனக்குப் புறொமோஷனாமே?" ராகுலனின் வார்த்தைகளில் தேன் சொட்டியது.

"உங்களுக்கெப்படித் தெரியும்?" சாரதாவின் வாய் ஆவலில் விரிந்தது.

"எப்பிடியோ தெரிந்தது!" கணவனின் மாறுதலைக் கண்டு சாரதாவின் மனதில் சந்தோஷம் கரைபுரண்டது.

"சாரு நீ என்னை விரும்பிறியா?" ராகுலன் கேட்டான். அவள் குழந்தையைப் போல் கலகலவென்று சிரித்த இரு

**அப்போது சாரதா இரண்டு முடிவுகளை எடுத்தாள்.**

கைகளையும் அகல விரித்து "இவ்வளவு என்றாள். "அப்போ கவனமாக் கேட்டுக்க. உனக்கு நான் வேணும்னா வேலைய விட்டிடு. வேலை முக்கியம்னா என்னை விட்டிடு. நீயே முடிவெடு!" சொல்லிய வேகத்தில் கட்டிலில் விழுந்து படுத்துவிட்டான் ராகுலன். சாரதாவின் மனதில் சடுதியாக வந்த சந்தோஷம் கணப்பொழுதில் வடிந்துவிட்டது.


சாரதா கட்டிலில் இருந்தபடி சிந்தித்தாள். எவ்வளவுதான் ஒரு பெண்படித்தாலும், பதவியில் இருந்தாலும் அவள் கணவன் முன் ஊமையாகி நிற்க வேண்டும். அதற்குப் பெயர்தான் பொறுமை. அவள் கரையை மட்டும் தொட்டுத் திரும்பும் அலையாக இருப்பது கட்டாயம். அதை மீறிச் செல்லும் போது சமுகம் அவளைக் குற்றவாளியாக்குகிறது. சமயத்தில் கைகொடுத்து உதவுவது, தான் கற்ற கல்வியும் பார்க்கும் தொழிலுந்தான்.

நினைவுகளில் மிதந்த எண்ணங்களைத் தட்டியடக்கி சாரதா இரண்டு முடிவுகளை எடுத்தாள். தனக்குக் கிடைத்த பதவி உயர்வை ஏற்றுக் கொள்வது, தன் பெற்றோருடன் மீண்டும் இடம் பெயர்வது, இப்போது அவள் நிம்மதியாகத் தூங்குகிறாள். ■

படுக்கை அறை மேசை மேல் சிகரெட் துண்டொன்று முழித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் சுந்தரத்துக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. போன கிழமையும் இப்படித்தான் ஒரு சிகரெட் துண்டைக் கண்டெடுத்திருந்தான். தகப்பனைப் போலவே அவருடைய புண்ணியத்தால் அவனுக்கு எந்தவிதக் கெட்டபழக்கமும் இல்லை.

'யார் தான் வந்திருப்பார்கள்? யாராவது வந்திருந்தால் மேகலா சொல்லியிருப்பாளே?

# சந்தேகம்



**பிரசன்னா — கனடா**

பலவாறு சிந்தனை தொடர்ந்தது-

மேகலா சுந்தரத்தின் மனைவி. பள்ளியில் படிக்கும்போது கைகள் தொடாமல் கண்கள் தொட்டு வளர்ந்த காதல். மேகலாவின் அப்பா பொலிசாக இருந்ததாலோ என்னவோ காதலையும் திருட்டுப் பொருளாகவே பார்த்தார். காதலில் இனிமை மட்டும் தான் இருக்குமென நினைத்த சுந்தரத்துக்கு பொலிஸ் அடியும் உதையும் பல நாட்கள் தூக்கத்தைக் கலைத்தன. இனித் தாங்காது என்று இருவரும் இரகசியமாக மாலை மாற்றிக் கொண்டு தனியே இருந்தனர்.

அதன் பிறகு மேகலாவின் தாய் தந்தையருடன் எதுவித தொடர்பும் இருக்கக்கூடாதென சுந்தரம் கட்டளை போட்டான். இருவரும் மிகவும் சந்தோஷமாகவே இருந்தார்கள். அதற்கிடையில்.....

மேகலாவிடம் நேரடியாகக் கேட்க வேண்டியதுதான். தலை வெடித்துவிடும் போலிருந்தது-கண்ணை இறுக மூடிக் கொண்டு கட்டிலில் சரிந்தான். எப்படித் திரும்பிப் படுத்தாலும் நித்திரை வருவதாக இல்லை. பதிலுக்கு சித்திரவதையாக இருந்தது.

விடிந்ததும் "நான் வெளியிலை போறன்!" என்று கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் சைக்கிள் பெடலை அழுத்தினான். அவள் மனதையும் தான்....... எந்த முகத்தைப் பார்த்துக் காதலித்தானோ அதைப் பார்ப்பதற்கு இப்போ அருவருப்பாக இருந்தது. "சாப்பிடாமல் போறியளே..." என்று மேகலாவின் குரல் தூரத்தே தேய்ந்தது. சுந்தரம் காதில் எதையும் வாங்காமல் போய்விட்டான்.

**வீட்டுக்கு வந்தவன், சிகரெட் துண்டுக்கு பதிலாக பீடிக்கட்டு இருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனான்.**

மேகலாவுக்கு முகம் கறுத்து விட்டது. "திரும்பி வரட்டும். கேக்கிறன்!" என்று முணுமுணுத்தாள்.

இருள் மூடி வெகுநேரமான பின்னரே சுந்தரம் களைத்துவிழுந்து வந்தான்.

"உங்களுக்கு என்ன ஆச்சு? பிரமை பிடிச்சது போலை இருக்கிறியள். நான் எத்தினை தரம் கூப்பிட ஏன் பேசாமல் போனனீங்கள்? வேலை இடத்திலை ஏதும் பிரச்சனையோ?" கணவனைச் சமாதானப்படுத்த முயன்றாள் மேகலா.

"அதொண்டுமில்லை. நீ போய்ப் படு?" பட்டும் படாமலும் இரண்டொரு வார்த்தை சொல்லி விட்டுப் படுத்து விட்டான் சுந்தரம்

பகலவனின் பயணம் ஆரம்பித்தவுடன் இரவு வானம் முழுவதும் வியாபித்திருந்த விண்மீன்கள் ஓடி ஒளிந்துகொண்டன. மனைவியுடன் பேச்சைக் குறைத்துக் கொண்டு காலை அலுவல்களை முடித்துவிட்டு வேலை செய்யும் இடத்திற்கு வந்து சேர்ந்தான் சுந்தரம். மண்டை பிளப்பது போல் வலித்தது.

"சுந்தரம் வேலை செய்யிறதெண்டால் ஒழுங்காச் செய்- இல்லாட்டில் வேலையை விட்டிடு. ரைப் அடிச்சதிலை இவ்வளவு பிழை விட்டால்..." முதலாளியின் குரல் கூரையைப் பிரித்தது.

"சார், எனக்கு மனசு சரியில்லை. இண்டைக்கு எனக்கு அரை நாள் லீவு தாங்கோ. நாளைக்கு வெள்ளணவா வந்து எல்லாத்தையும் முடிச்சுத் தாறன். பிளீஸ் சார்!" மரியாதையுடன் கூறினான் சுந்தரம்.

"சரி. சரி.. லீவ் லெட்டரைத் தந்திட்டுப் போம்" மனமிரங்கினார் முதலாளி.

வீட்டுக்கு வந்தவன், சிகரெட் துண்டுக்குப் பதிலாக ஒரு பீடிக்கட்டே இருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனான். ஆத்திரம் தலைக்கேறியது.

"ஏண்டி, யார் வந்தவன் இங்கை? உனக்கு எத்தினை நாளா இந்தப் பீடி குடிக்கிற பழக்கம்?" கை மேகலாவின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

"இல்லை. அப்பிடியொண்டும் இல்லை... சத்தியமா..." மன்றாட்டத்துடன் அழுதாள் மேகலா.

"அப்ப எப்பிடி இந்தப் பீடிக்கட்டு வந்தது? கால் முளைச்சு நடந்து வந்ததா? என்னடி காதிலை பூவா சுத்துறாய்?"

அடி தாங்காமலோ என்னவோ ரெலிஃபோன் மணி அலறியது. "ஹலோ" என்று மேகலா கூறுமுன் பாய்ந்து பறித்துக் காதில் திணித்தான்.

"அம்மா, மேகலா! நான் அப்பா பேசறேம்மா. வர்ற அவசரத்திலை பீடிக்கட்டை மேசையிலை வைச்சிட்டு வந்திட்டன். சுந்தரம் பழசுகளை மறக்காமல் இருக்கிறார். நான் வந்திட்டுப் போறது தெரிஞ்சால் பிறகு உன்னோடை பாய்வார். அதை வெளியிலை எறிஞ்சு போடு. மருமகன் வாற நேரம், நான் வைக்கிறனம்மா."

சுந்தரம் ஆயிரம் வோல்ட் மின்சாரம் தாக்கியவன் போல விறைத்து நின்றவன், மேகலாவின் காலை நோக்கிக் குனிந்தான். ■

இன்றோடு தம்பி கனடாவிலை இருந்து வந்து ஒருவாரம் முடிந்துவிட்டது. இந்த ஒருவாரத்திலை அம்மா எவ்வளவுதான் மாறிவிட்டார். முகத்திலை என்ன ஒரு சந்தோசம். தம்பியினுடைய பிள்ளைகளோடுதான் என்ன ஒரு புதுப்பாசம். இத்தனைக்கும் அம்மாவுக்கு தினமும் பாக்கு இடித்து கொடுப்பதுகூட என்ரை கடைக்குட்டிதான்.

# தாயுள்ளம்



**இனுவையூர்- உத்திரன்**

வயதான காலத்திலை எந்தவித குறையும் இல்லாமல் அம்மாவை கவனிக்க வேணும், என்ற எண்ணத்திலை வருசம் பூராகவும் அவவின்ரை பாடு பயன் எல்லாம் பார்க்கிறது நான்தான். என்ரை மனைவிகூட மாமி மாதிரி இல்லாமல், தாயாக அனுசரிச்சு நடப்பதுதான் உண்மை. இப்ப 15 வருடங்களுக்கு பிறகு ஊருக்கு வந்த தம்பி கார் பிடித்து கோயில் குளம் கடைத்தெரு என்றெல்லாம் கூட்டிக்கொண்டு போனான். நகை, சீலை, காசு என்று எல்லாத்தாலையும் அபிஷேகமே பண்ணினான். அம்மாவின்ரை மனமும் குளிர்ந்துபோனது போலை. எனக்கு முன்னாலையே தம்பியை மட்டும் புகழ்ந்து தள்ளுகிறா! இவ்வளவு காலமும் எந்தக்குறையுமே இல்லாமல் நானும் வைச்சுப் பார்க்கிறன் தானே! நாளைக்கு நோய் நொடி என்று படுக்கையிலை விழுந்தால்கூட சாப்பாடு- மருந்து என்று ஊட்டி விடுவதற்குக்கூட நான் தானே வேணும். பணத்தை வைச்சு என்ன செய்யிறது? என் மனைவியே இதைச் சுட்டிகாட்டியபோது எனக்கு வேதனையாக இருந்தது.

இரண்டு கிழமை லீவு முடிந்து தம்பி குடும்பம் கனடாவுக்குப் போய்விட்டது. மறுபடியும் அம்மா பாக்குரலோடு. என் மனதை குடைந்ததை நேரடியாகவே கேட்டுவிட்டன்.

அம்மாவின் கண்கள் கலங்கியது. "தம்பி அவன் நிற்கப் போவது இரண்டு கிழமை தானே! அதுக்குள்ளை தன்ரை காசை எல்லாம் கொட்டி என்னைச் சந்தோசப் படுத்தலாம் என்று நினைச்சான். பாவம். அவன்ரை சந்தோசத்தை ஏன் கெடுப்பான்? அவன்ரை மனமும் நோகக்கூடாது. அதாலை தான் சந்தோசமாக நானும் நடந்து கொண்டன். எனக்குத் தெரியும். நான் செத்தால்கூட எனக்கு கொள்ளிபோட கனடாவிலை இருந்து அவன் வரவே போறான்? எல்லாம் நீதானே!" என்று அம்மா கூறியபோது,

மனதுக்குள் மன்னிப்பு கேட்டுக்கொண்டேன். 'தன்ரை பிள்ளைகளின்ரை மனம்கூட நோகக் கூடாது என்று நினைக்கிறதுதான் தாயுள்ளம்.' என மீண்டும் ஒரு தடவை தெரிந்துகொண்டேன். ■


படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

# போதும் வருகிறேன்!



அவன் கூறினான்:
"என் கண்களுக்கு
நன்றி!"

"ஏன்?" என்று
கேட்க அவள் இல்லை
அவன் அருகில்!

அவளுக்காகவும்
அவனே கேட்டான்:
கண்களுக்கு
எதற்கு நன்றி?"

"உன்னை
காணவைத்தவையல்லவா!"
என்றான் மனதில்
குந்திமிருந்த அவளிடம்!

கண்கள்
இல்லையானால்
காதலுக்கு
இத்தனை மரியாதை
எங்கிருந்தும் கிடைத்திருக்காது!

கண்கள் இல்லையானால்
காதலும் இல்லை!
காதல் இல்லையானால்
கண்ணீரும் இல்லை!

நாம் காதலிக்கும்
ஒவ்வொன்றும்
நம்மிடமிருந்து
நழுவிப் போகும்போதுதானே
கண்ணீர் கரை தாண்டுகிறது!

மண்மேல் காதல்
பொருள் மேல் காதல்
பொன் மேல் காதல்

ஊர்மேல் காதல்
உறவுமேல் காதல்
வீடுமேல் காதல்
நாடு மேல் காதல்!

காற்று நம்மை
காதலிக்கிறது!
அதுதான் ஓயாமல்
வீசிக்கொண்டிருக்கிறது!

நாம் காற்றை
காதலிக்கிறோம்!
அதனால்தான் ஓயாமல்
சுவாசித்துக்
கொண்டிருக்கிறோம்!

உயிர் உடலை
காதலிக்கிறது!
அதுதான் உடலோடு
ஒன்றியிருக்கிறது!

நாம் உயிரைக்
காதலிக்கிறோம்!
அதனால்தான்
உயிர்வாழ
ஆசைப்படுகிறோம்!

பூமி சூரியனை
காதலிக்கிறது!

அதுதான் அதனையே
சுற்றிக் கொண்டிருக்கிறது!
அவளும்
அவனையே
சுற்றி சுற்றி
வந்து கொண்டிருந்தாள்!

திடீரென்று ஒருநாள்
காணாமல் போனாள்!

ஆரியப்படைகள்
சோழ மண்டலத்திற்குள்
புகுந்த மூன்றாம் நாள்
அவளைக் காணவில்லை!

'பெண்களை மேய்ந்து
தீயில் எறிகிறார்களாம்!
கர்ப்பிணிகளைக்கூட
காம வேட்டையாடுகிறார்களாம்!'

ஊரெங்கும் அச்சம்
மயான அமைதி!

தேடினான் அவளை
ஊரெல்லாம் தேடினான்!

தீ அவளை தின்றுவிட்டதா?
புதைகுழி அவளை
மூடிக்கொண்டதா?

சோகம் அவனை
துவள வைத்தது!
பிரிவு அவனை
பிழிந்து போட்டது!

இடறி விழுகிறேன்
உன் நினைவில்!
உளறி வருகிறேன்
உன் பெயரை!

சோகம் என்னை
தாலாட்டுகிறது!

சோகம் என்னை
தத்தெடுத்துள்ளது!

உன் நினைவுகளோடு
உறங்கிப் போகிறேன்
உன் நினைவுகளுடனே
கிறங்கியும் போகிறேன்!

அவன் சோகத்தோடு
குடித்தனம் நடத்தினான்!
கூண்டுப் பறவையாய்
அவளை மனக் கூண்டில்
சமந்து திரிந்தான்!

அன்றுதான் அந்த
அதிசயம் நிகழ்ந்தது!

காணாமல் போனவள்
அவன் கண்முன்பே
தோன்றினாள்!

நம்ப முடியாமல்
கண்மூடித் திறந்து
பார்த்தான்!

அவனையறியாமல்
அவன் விழிகள்
அவள் கால்களுக்கு
தாவிப் போயின!

கலகலவென்று
அவள் சிரித்தாள்!

"பெண் என்றால்
பேயும் இரங்கும்
என்றுதான் கூறுவார்கள்!
பெண்ணையே
பேயாக நினைக்கலாம்
என்று கூறவில்லையே!"

அவள் தான்!
அவளே தான்!

"நீயா? நீயா?
இத்தனை நாள்
எங்கிருந்தாய்?"

முதல் வினாவிலேயே
சந்தேக விதை

"சோழர் படையில்
பெண் உளவாளிகள்
உள்ளனராம்!
என்னையும் உளவாளி
என்று நினைத்து
ஆரியப்படை
பிடித்துப்போனது!"

அவள் கூற
அவன் முகம் இருண்டது!

அவன் தடுமாறினான்.
தவித்துப் போனான்.
அவனுக்கு வியர்த்தது!

எப்படிக் கேட்பது
என்று தவித்தான்!
இறுதியில்
கேட்டே விட்டான்!

"அவர்கள்
உன்னை...உன்னை
கற்பழித்தார்களா?"

அவள் நெஞ்சில்
தீ மூண்டது!

"நான் கற்போடுதான்
இருக்கிறேன்!
கற்பை யாராலும்
அழிக்க முடியாது!"
உறுதியான தொனி.

"உன்னைக் கெடுத்தார்களா?
அதனைக் கூறு?"
மறுபடி வேறு விதமாக
அதே கேள்வி!

"எப்படி என்னை
கெடுக்க முடியும்?
நான் நானாகவே
இருக்கிறேன்!"

அவள் தன்னை மறந்து
அவனை அறைந்தாள்!

அவன் எதிர்பார்க்கவில்லை.
கன்னத்தை தடவிக்கொண்டே
அவனது கண்களை
நேராகப் பார்த்தான்.

"ஒரு கன்னத்தில்
அறைந்துவிட்டாய்!
மறு கன்னத்தை
காட்டுவேன் என்று
நினைக்காதே!

காதலித்த குற்றத்திற்காக
உன் பேதலித்த
கேள்விகளுக்கு
பதில் சொன்னேன்!

முட்டாளே!
கற்பு என்பது
உறுப்பு சம்பந்தப்பட்டதல்ல,
ஒழுக்கம்
சம்பந்தப்பட்டது!

கற்பு
உனக்கும் உண்டு
எனக்கும் உண்டு!

"எங்கள் பெண்களை
காம வேட்டையாடும்
ஆரியப் படைகளைவிட
எங்கள் கற்பு
போய்விட்டதாக
கதையளக்கும்
நீங்கள்தானடா
மோசமானவர்கள்!"

மரியாதை தொலைந்தது.
அவள் கோபம்
அவனை அதிரவைத்தது!

"நான் காணாமல் போனதற்காக
கண்ணீர் விட்டாயே
இதுவா காதல்?
இதன் பெயர் கோழைத்தனம்!

காணாமல் போனதற்கு
காரணம் யார் என்று
கண்டுபிடிக்க

நீ கிளம்பியிருந்தால்
அதுதான் காதல்!

உன் காதல்
அழுகுணிக் காதல்!

இது வீரம் விளைந்த
பூமி!
இங்கு காதலும்
வீரத்தோடு கலந்துதான்
விளைய வேண்டும்!"

அவள்
நிமிர்ந்து
அவனைக் கடந்தாள்!

கேடு வருவதும்
நன்மைக்கே!
நண்பரின் இயல்புகளை
அளந்து பார்க்கும்
அளவு கோல்
அப்போதுதான் கிடைக்கிறது!
காதலனுக்கும்
அது பொருந்தும்!

அவள் மனம்
நினைத்ததும் அதுதான்!

**"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்"**

*அதிகாரம் 80 குறள்:796*

துருவன் ரசிகன்

---

## சிந்தியா பதில்கள்

**★ தேர்தல் திகதி ஏப்ரல் முதலாம் திகதி என்று அறிவிக்கப்பட்டதற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு கிடையாதா?**

க.ரவீந்திரன், மன்னார்.

மாகாணசபைத் தேர்தல்களை யுத்த வெற்றி வரும் என்று ஒத்திவைத்தது பொ.ஐ.மு. அரசு. அதனால்தான் தேர்தலை நடத்த நீதிமன்றம் ஆணையிடவேண்டி ஏற்பட்டது. குறுகிய காலத்தில் திகதியை நிர்ணயிக்கும் அவசியமும் தேர்தல் ஆணையாளருக்கு வந்து சேர்ந்தது. அரசுடன் கொஞ்சம்கூட கலந்தாலோசிக்காது தேர்தல் ஆணையாளர் திகதியை அறிவித்திருப்பார் என்பது நம்புவதற்குக் கடினமானது.

◆ ❖

**★ ஐ.தே.கட்சி புலிகளுடன் பேசுவதை விரும்புகிறதா?**

சி.ரகு, வவுனியா.

எதிர்க்கட்சியில் இருக்கும்போது பொ.ஐ. முன்னணியும் புலிகளுடன் பேசுவதைத் தானே விரும்பியது? அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா வன்னிக்காட்டுக்கே போய் புலிகளிடம் ஆதரவு கேட்டாரே!

◆ ❖

**★ எந்தவொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பாள். ஆணின் தோல்விக்கு பின்னால்?**

க.சக்திவேல், வத்தளை.

பல பெண்கள் இருப்பார்கள். அதுசரி, வெற்றிக்கு பின்னால்தான் இருக்க வேண்டுமா: முன்னால் இருந்தால் ஆகாதா?

◆ ❖

**★ சிந்தியா! எப்படித்தான் கண்டித்தாலும் சிலருக்கு புத்தியே வருவதில்லையே?**

கா.விஸ்வநாதன், புத்தளம்.

சின்னப் புத்தியாக இருக்கலாம்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த பெண், பணியாளனை அழைத்து, "உனக்கு நாகரிகமே தெரியாதா? சொல்லாமல் கொள்ளாமல் திடீர் திடீரென்று அறைக்குள் வருகிறாயே! நீ வரும்போது நான் உடை மாற்றிக் கொண்டும் இருக்கலாமல்லவா?" என்று கேட்டாள்.

அதற்கு அந்தப் பணியாள இளைஞன் கூறினான்: "அதைத்தானே நான் ஒவ்வொரு தடவையும் எதிர்பார்க்கிறேன்!"

**★ சிந்தியா! விதியை நம்பலாமா?**

இ.அற்புதநாதன், மட்டக்களப்பு.

மதியை நம்புங்கள்! விதி பற்றி தமிழக எழுத்தாளர் 'சாவி' கூறிய ஒரு தமாஷ்:

1940 இல் மூதறிஞர் ராஜாஜி உட்பட பல அரசியல் தலைவர்கள் சிறையில் இருந்தனர்.

தினமும் எல்லோரும் கூடி ராஜாஜி முன்பாக கம்பராமாயணம் பற்றி விவாதிப்பார்கள்.

ஒருநாள்- விவாதத்துக்கிடையில்- "சீதையை இராவணன் அபகரித்தது இராவணனுடைய தலை விதி!" என்றார் ஒருவர்.

உடனே ராஜாஜி அவரைத் திருத்தினார்: "தலைகளின் விதி என்று சொல்லுங்கள்!"

◆ ❖

**★ செம்மணிப் புதைகுழி விசாரணை பற்றி உமது அபிப்பிராயம் என்ன?**

எம்.திரவியம், கொழும்பு-06.

காதுகள் பத்திரம்!

◆ ❖



மீனா

**★ சிந்தியா! உமக்கு கவிதை பிடிக்குமா? கதை பிடிக்குமா?**

செல்வி கு.இந்திராணி, கொழும்பு-11.

கவிதையான கவிதை, கதையான கதை இரண்டும் பிடிக்கும். கதை போல் இருக்கும் கவிதை. கவிதை போல் இருக்கும் கதை இரண்டும் பிடிக்காது. சமீபத்தில் இரசித்த ஹைக்கூ:

'முளைக்காத விதையை
புதைக்க இத்தனை
பேரா?
இறுதி ஊர்வலம்!'

◆ ❖



'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் மம்முட்டி, மணிவண்ணன், அப்பாஸ்,தபு, ஐஸ்வர்யா ராய்.

**★ பதவி ஆசை எதுவரை இருக்கும்?**

மு.சோதிநாதன், கண்டி.

சுடுகாடுவரை!

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் தன் முதிய வயதில் 'ஆன்டனி ஈடன்' என்னும் இளைஞரை பிரதமராக்கிவிட்டு ஓய்வு பெற்றுவிட்டார்.

சில ஆண்டுகள் சென்றன. சர்ச்சிலை சந்தித்த நிருபர் ஒருவர்: "நீங்கள் நலமா?" என்று கேட்டார்.

படு கிழவரான சர்ச்சில் நிருபரிடம்; "மிகவும் நலம், நான் நலமாக இருந்தாக வேண்டியுள்ளது. ஏனென்றால் இப்போது எனக்குப் பதிலாக பொறுப்பேற்றிருக்கும் 'ஆன்டனி ஈடன்' கிழவனாகி வருகிறாரே!" என்றாராம்.

◆ ❖

**★ நடிகை மீனா சொந்தக் குரலில் தானே பேசுகிறார்?**

சி.ரஞ்சித், மாத்தளை.

ஆம்! ஒரு சில படங்களில் மட்டும் குரல் கடன் வாங்கியிருக்கிறார். உதாரணம், 'ஒரு ஊரிலே ஒரு ராஜகுமாரி' படத்தில். கடன் கொடுத்தவர் சரிதா.

◆ ❖

**★ சிந்தியா! புதிய நடிகைகள் வரவால் தமிழ்ப் பட உலகில் புரட்சி ஏற்படுமா?**

எம்.அல்பேர்ட், மட்டக்குளி.

படும்! தசைப்புரட்சி!

◆ ❖

**★ சிந்தியா! எதனையும் பொறுமையாகக் கேட்காமல் ஒரு பக்கச் சார்பாக சட்டுப்புட்டென்று முடிவுக்கு வருபவர்களுக்கு ஒரு புத்திமதி கூறும்?**

சி.வேணி, மன்னார்.

அதென்ன புத்திமதி? இரண்டும் ஒரே அர்த்தம்தானே! நீரும் ஆராய்ந்து பார்க்காமல் கேள்வி எழுதிவிட்டீரே!

"நமது செவிகள் ஒன்றையொன்று நோக்காது எதிர்த் திசையில் அமைந்திருப்பது ஏன் தெரியுமா? இரு பக்கங்களையும் கேள் என்பதற்காகவே!"

◆ ❖

**★ அப்பாஸ் மறுபடி அசத்த வாய்ப்பிருக்குமா?**

என்.லட்சுமி, கொழும்பு-08.

இருக்கும்! சினிமாவில் எதுவும் நிரந்தரமில்லை.

◆ ❖

**★ கொஞ்சம் சிரிப்பு, கொஞ்சம் வெட்கப்படுவது போல ஒரு கதை சொல்லுங்கள்?**

ஜெ.ரிஸ்வி, காலி.

அமெரிக்காவில் திருமதிகள் சிலர் ஒன்று கூடி விழா ஒன்று எடுத்தனர். அந்த விழாவில் எப்படி ஆடை தரித்து வருவது என்பது தொடர்பாக யோசனை செய்தனர்.

'நம் ஒவ்வொருவரதும் கணவர்களது தலைமுடிக்கு பொருத்தமான நிறத்தில் உடை அணிந்து வருவோம் என்று ஒருமனதாக தீர்மானித்தனர்.

"என் கணவருக்கு கறுப்பு முடி; நான் கறுப்பு நிறத்தில் உடை அணிந்து வருவேன்!" என்றார் ஒரு பெண்.

"என் கணவருக்கு இளம் சிவப்பு நிற முடி. அந்த நிறத்தில் எடுப்பாக உடை அணிந்து வருவேன்!" என்றார் இன்னொரு பெண்.

"என் கணவருக்கு வெள்ளை முடி. நான் வெண்மையாக ஆடை அணிந்து வருவேன்!" என்றார் மூன்றாமவர்.

நான்காவது பெண்மணி மிகவும் சோகத்துடன், "என்னால் விழாவுக்கு நிர்வாணமாக வரமுடியாது!" என்றார்.

"ஏன்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டனர் அனைவரும். அதற்கு அந்தப் பெண் கூறினார்: "என் கணவருக்குத்தான் வழுக்கையாச்சே!"

◆ ❖

**★ 'உன்னைத்தேடி' படத்தில் அஜித் நடிப்பு எப்படி?**

வி.உவைஸ், கொழும்பு-09.

இளம் துடிப்பு! படம் சற்று மெதுவாகப் போனாலும் இரசிக்கக்கூடியதாகவும் இருக்கிறது!

◆ ❖

---

### ஸ்போர்ட்ஸ்

## இறுதி மோதல்

ஆசிய டெஸ்ட் சாம்பியன் கோப்பை இறுதிப் போட்டியில் இலங்கையும் பாகிஸ்தானும் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் மோதுகின்றன. இப்போட்டி மார்ச் 12ம் திகதி முதல் 16ம் திகதிவரை நடைபெறுகிறது.

பாகிஸ்தானுக்கு எதிராக நடந்து முடிந்த போட்டியில் இலங்கை அணியில் முக்கிய வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை. ஹஷான் திலகரட்ன தலைமையிலேயே இலங்கை அணி விளையாடியது.

இறுதிப் போட்டியில் விளையாடும் இலங்கை அணிக்கு அரவிந்த டி சில்வா தலைமை தாங்குகிறார். வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறார். அர்ஜுன ரணதுங்க தொடர்ந்தும் ஓய்வில் இருக்கிறார்.

டாக்காவில் கலந்து கொள்ளும் இலங்கை அணியின் விவரம் வருமாறு:

அரவிந்த டி சில்வா (தலைவர்), ஹஷான் திலகரட்ன (உப தலைவர்), ரஸல் அர்னோல்ட், அவிஷ்க குணவர்த்தன, மார்வன் அத்தபத்து, மகேல ஜெயவர்த்தன, சந்திக்க ஹத்துருசிங்க, ரொமேஷ் களுவித்தாரன, உபுல் சந்தன, ருவான் கல்பகே, பிரமோதய விக்ரமசிங்க, சுரேஷ் பெரேரா, சமிந்த வாஸ், ருச்சிர பெரேரா.

## பாகிஸ்தான் பட்டியல்



மே மாதம் தொடங்கவுள்ள உலகக்கோப்பைப் போட்டியில் பங்கு பற்றும் 19 பேர் அடங்கிய வீரர்களின் பட்டியலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அண்மையில் வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் முன்னாள் அணித் தலைவர் அமீர் சொஹைல் மற்றும் சிரேஷ்ட வீரர் சலீம் மாலிக் ஆகியோரது பெயர்கள் இடம்பெறவில்லை. பாகிஸ்தானில் நடைபெற்ற அவுஸ்திரேலியா-ஸிம்பாப்வே அணிகளுக்கெதிரான போட்டிகளில் ஏற்பட்ட தொடர் தோல்விகளால் அணித்தலைவர் பதவியை இழந்த அமீர் சொஹைல் பின்னர் அணியில் இடம்பெறவில்லை.

உலகக் கிண்ணப் போட்டிகளில் தன்னைச் சேர்த்துக் கொள்ளாததற்கு பாகிஸ்தான் தேர்வுக்குழு மீது குற்றஞ்சாட்டியுள்ளார் அமீர் சொஹைல். அண்மையில் பாகிஸ்தானில் நடந்த உள்ளூர்ப் போட்டியொன்றில் 180 ஓட்டங்களை எடுத்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அமீர் சொஹைல், சலீம் மாலிக் ஆகிய இருவரும் நீக்கப்பட்டதற்கு, அண்மைய போட்டிகளில் அவர்கள் சர்வர பிரகாசிக்காததே காரணம்" என்று பாகிஸ்தானின் பிரதம கிரிக்கெட் தேர்வாளர் வஸீம் பாரி கூறியுள்ளார்.

அணியிலிருந்து நீக்கப்பட்ட இன்னொரு வீரரான சலீம் மாலிக் 103 டெஸ்ட் மற்றும் 276 ஒருநாள் போட்டிகளிலும் பங்குபற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று நாடுகள் மோதல்

சென்ற வருடம் முதல் ஷார்ஜாவில் ஏப்ரல் மாதத்தில் மூன்று நாடுகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் தற்போதைய ஷார்ஜா சாம்பியனான இங்கிலாந்து, மற்றும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் கலந்துகொள்ளும் ஒருநாள் போட்டிகள் வருகின்ற ஏப்ரல் மாதம் 7ம் திகதி துவங்கவுள்ளது.

இந்த மூன்று அணிகளுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையில் நடக்கின்றன. இதன்படி ஒவ்வொரு அணியும், ஏனைய அணிகளுடன் 2 முறை மோதும்: லீக் சுற்றில் வெற்றி பெறும் அணிக்கு 3 புள்ளிகள் வழங்கப்படும்.

முடிவில் அதிக புள்ளிகளை எடுத்த 2 அணிகள் இறுதிப்போட்டியில் மோதும். இத்தொடர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு முன்னோடி ஆட்டமாக அமையும்.

இப்போட்டித் தொடர் பற்றிய விபரங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல்-07 | இங்கிலாந்து | எதிர் | பாகிஸ்தான் |
| ஏப்ரல்-08 | இந்தியா | எதிர் | பாகிஸ்தான். |
| ஏப்ரல்-09 | இங்கிலாந்து | எதிர் | இந்தியா. |
| ஏப்ரல்-11 | இங்கிலாந்து | எதிர் | இந்தியா. |
| ஏப்ரல்-12 | இங்கிலாந்து | எதிர் | பாகிஸ்தான். |
| ஏப்ரல்-13 | இந்தியா | எதிர் | பாகிஸ்தான். |
| ஏப்ரல்-16 | இறுதிப்போட்டி. | | |

### இவர் தான் அவர்



ஜெமினி கணேசன்



படிப்பகம்

# திருமறை தரும் பொது நெறி 52

ஆண்டவர், பாபிலோன் மன்னரான நெபுகத்நேசருக்கு எப்போதும் துணை நின்றார். ஆண்டவருடைய சித்தத்தின்படியே யூதா நட்டை நெபுகத்நேசர் கைப்பற்றினார். அம்மன்னர் மூலமே, இஸ்ரயேல் மக்கள் செய்த பாபச் செயல்களுக்கெல்லாம், கடவுள் தண்டனை வழங்கினார். ஆண்டவரின் கருத்துக் கேற்பவே தானியேலும் அவர்தம் தோழர்கள் மூவரும் நெபுகத்நேசரின் ஆட்சி நிர்வாக முறைகளில் பெரும் பங்கு கொண்டிருந்தனர்.

தானியேலுக்கு மன்னர் 'பெல்தசாச்சர்' என்று பெயர் சூட்டினார் என்பதை முன்னரே கூறியிருந்தோம். அவருடைய தோழர்களான அனனியாவுக்கு 'சாத்ராக்கு' என்றும், மீசாவேலுக்கு 'மேசாக்கு' என்றும் அசரியாவுக்கு 'ஆபேத்நெகோ' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

யூதா இனத்தவரான தானியேலும் தோழர்களும் அரசரிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருப்பதால் பாபிலோனிய அரண்மனை மந்திரவாதிகளும் மாயவித்தைக்காரர்களும் மனம் வெதும்பினர். தானியேலின் தொடர்பினால் மன்னர் பாபிலோனியர்களுடைய தெய்வங்களை மறந்து, அவற்றைப் புறக்கணித்து விடுவாரோ என்று பயந்தனர்.

தானியேலும் அவர்தம் தோழர்களும் இஸ்ரயேல் மக்களின் கடவுளை ஒருபோதும் மறக்கவில்லை. அவரையே தொழுது வந்தனர். பாபிலோனிலுள்ள எந்த ஆலயத்துக்கும் போவதில்லை. அங்கு இடம்பெறும் மதச்சடங்குகளிலும் அவர்கள் பங்கேற்பதில்லை. தானியேல் தனது இல்லத்தின் மாடியில் யெருசலேம் கோவில் இருக்கும் திக்கை நோக்கி ஒரு சாளரத்தை அமைத்திருந்தார். அதனைத் திறந்து வைத்துக்கொண்டே, ஆண்டவரைத் தொழுவார். இவற்றை மந்திரவாதிகள் சிலர் கண்டிருந்தனர். தானியேலின் தோழர்களும் இதே முறையைப் பின்பற்றி இஸ்ரயேலின் ஆண்டவரையே தொழுகின்றனா என்பதனையும் தெரிந்து வைத்திருந்தனர்.

## பொன்னாலான ஒருருவம்

மாயாவிகளும் மந்திரவாதிகளும் மன்னர் நெபுகத்நேசரை அணுகி, பொன்னாலான ஒரு பெரிய சிலை ஒன்றை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்தனர். அந்நாட்டிலுள்ள தூரா என்ற இடத்தில் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமும் கொண்ட பொற்சிலை ஒன்று நிறுவப்பட்டது. இச்சிலைக்கான முதற் பூசைக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இத்தருணத்தைப் பயன்படுத்தி தானியேலையும் தோழர்களையும் பழிவாங்குவதற்கு மந்திரவாதிகளும் மாயவித்தைக்காரர்களும் திட்டம் தீட்டினர்.

பொற்சிலைக்குரிய அர்ப்பணிப்பும் முதற்பூசையும் நடைபெறும்போது, மக்கள் அனைவரும் அரச அதிகாரிகளும் ஆளுநர், பிரதேசப் பொறுப்பாளர்கள் மற்றுமுள்ள சகல பிரமுகர்களும் சமுகமளிக்க வேண்டும் என்று அரச ஆணை பிறப்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட தினத்தன்று சகலரும் வந்து திரண்டிருந்தனர். இந்த வேளையில் கட்டியக்காரன் ஒரு அறிவித்தலை விடுத்தான். முதல் பூசை நடைபெறும் போது யாழ், எக்காளம், நாதசுரம், கின்னரம், வீணை, குழல் முதலான வாத்தியக் கருவிகள் ஒன்றாக இணைந்து முழங்கும் என்றும் அதேவேளையில் சகலரும் தாழப் பணிந்து சிலையை வணங்க வேண்டும் என்றும் கூறி முரசறைந்தான். அவ்வாறு பணிய மறுப்பவர்கள் தீச்சூளையில் தூக்கி எறியப்படுவார்கள் என்றும் கட்டியக்காரன் கூறி, "இது மாமன்னர் நெபுகட்நேசரின் ஆணை!" என்றும் எச்சரித்தான்.

குறிப்பிட்ட நேரத்தில் வாத்தியங்கள் எல்லாம் இணைந்து ஒலித்தன. திரண்டு நின்ற அனைவரும் தாழப்பணிந்து சிலைக்கு வணக்கம் செலுத்தினர். ஆனால் அக்கூட்டத்தில் முன்னணியில் நின்ற மூவர் மட்டும் அசையாமல் நின்றபடி இருந்தனர். அவர்கள் வேறு யாருமல்ல- இஸ்ரயேலர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடவுளைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளாத யூதா இனத்தவர்களும் தானியேலின் தோழர்களுமான சாத்ராக்கு, மேசாக்கு மற்றும் ஆபேத்நேகோ ஆகியோரே அவர்களாவர். பெல்தசாச்சர் என்ற பெயர் சூட்டப்பட்ட தானியேல், பாபிலோன் ஆட்சி அதிகாரத்தில் மிக முக்கியமான பதவியிலிருந்த போதும், அவர் ஏனோ இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

பாபிலோனிய மந்திரவாதிகளில் சிலர், யூதா நாட்டவர்கள்- குறிப்பாக தானியேலின் தோழர்கள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பதனை அவதானிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தனர். அம்மூவரும் அரச ஆணைக்குப் பணியாமல்- சிலைக்கு வணக்கம் செலுத்தாமல் நின்றபடியே காணப்பட்டனர். இதனை மந்திரவாதிகள் உடனடியாகவே அரச அதிகாரிகளுக்கும் அறிவித்துவிட்டனர்.

அர்ப்பணிப்பு வைபவம் முடிந்தும் முடியாமலிருக்கும் போதே மன்னர் நெபுகத்நேசர் முன்பாக சாத்ராக்கு, மேசாக்கு மற்றும் ஆபேத்நேகோ ஆகிய மூவரும் நிறுத்தப்பட்டனர். அரச ஆணைப்படி சிலை அர்ப்பணிப்பின்போது தாழப்பணிந்து தொழ மறுத்துவிட்டனர் என்று மந்திரவாதிகள் குற்றச்சாட்டைக் கூறினர். அத்தகைய குற்றத்துக்கு- ஏற்கனவே அறிவித்தபடி- அம் மூவரும் தீக்குள் தூக்கி எறியப்பட வேண்டியவர்கள் என்றும் அரசரிடம் கூறினார்கள். மறுப்பெதுவும் கூற முடியாத மன்னர், யூதர்கள் மூவரையும் தீச்சூளைக்குள் தூக்கி எறிந்துவிடும்படி கட்டளையிட்டார்.

## மன்னரளித்த தண்டனை

# தீ தீண்டாத தூயவர்கள்

முன்பை விட தீச்சூளைக்குள் அதிகமான விறகுகள் போடப்பட்டன. எண்ணெயும் ஊற்றப்பட்டது. மூவரின் கைகளையும் பின்புறமாகக் கட்டியதுடன் கால்களையும் கட்டிய



ஏவலாளர்கள் அவர்களைத் தூககி தீயினுள் வீசி எறிந்தனர். ஆனால் அம்மூவரும் தீச்சூளைக்குள் எத்தகைய தீக் காயங்களும் இல்லாமல் மக்களைப் பார்த்துக் கையசைத்த வண்ணம் நின்றிருந்தனர். சற்று நேரத்தின் பின்னர் அம்மூவரும் மலர்ந்த முகத்துடன் தீச்சூளை யிலிருந்து வெளியே வந்தனர்.

மன்னர் நெபுகத்நேசரும் அவருடைய மந்திரிப் பிரதானிகளும் கூடி நின்ற அனைவருமே இக்காட்சியை வியப்புடன் பார்த்தனர். சாத்ராக்கு, மேசாக்கு மற்றும் ஆபேத்நெகோ ஆகிய மூவரையும் தீச்சூளைக்குள் கொண்டு போய்ப்போட்ட ஏவலாளர்கள் அனைவரும் அதே தீச்சூளைக்குள் வீழ்ந்து எரிந்து சாம்பரானதையும் அனைவரும் கண்டார்கள்.

மன்னர் நெபுகத்நேசர் அம்மூவரையும் பணிவுடன் வரவேற்றார். முன்பிருந்ததைவிட மேன்மையான பதவிகளையும் வெகுமதிகளையும் வழங்கினார். இஸ்ரயேல் மக்கள் தொழும் ஆண்டவர் உண்மையானவர் என்பதை அனைவருக்கும் அறிவித்ததுடன் அக்கடவுளை எவரும் தூஷிக்கலாகாது என்றும் கட்டளையிட்டார்.

மன்னர் நெபுகத்நேசர் மற்றுமொரு கனவு கண்டார். அதற்கான அர்த்தத்தையும் அறிந்து கொள்ள அரண்மனை மந்திரவாதிகளையும் மாயவித்தைக்காரர்களையும் அழைத்து வினவினார். அவர்களால் அக்கனவுக்கான விளக்கம் தரமுடியவில்லை. பெல்தசாச்சர் என்ற பெயர் பூண்ட தானியேலே இதற்கான விடையையும் கூறினார்.

அக்கனவு மன்னர் நெபுகத்நேசருக்கு எதிர்காலத்தில் நேரவிருந்த கதி பற்றியதாகவிருந்தது. மன்னர்- நானெனும் மமதை கொண்டவராகவிருந்தார். மனம்போன போக்கில் பல கொடுமைகளைப் புரிந்தார். இதனால் அரசரைத் தண்டிக்க ஆண்டவர் தீர்மானித்தார். அத்தீர்மானத்தின் பிரதிபலிப்பாகவே மன்னரின் கனவு அமைந்தது.

நெபுகத்நேசர் அரசு பறிக்கப்பட்டது. வனத்துக்கு விரட்டப்பட்டார். மிருகங்களோடு மிருகமாக அலைந்தார். ஏழாண்டுகள் இவ்வாறு துயருற்ற அவர், சாபம் நீங்கியவராக வெளிப்பட்டார்.

மன்னர் நெபுகத்நேசரைத் தொடர்ந்து வேறு பல மன்னர்களும் பாபிலோன் நாட்டை ஆண்டனர். அவர்களைத் தொடர்ந்து சிரிய நாட்டு மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டது. இவ்வாறு மன்னர்கள் எவர் ஆட்சி பீடமேறினாலும், தானியேலுக்கு மதிப்பும் மரியாதையும் அளித்து உயர் பதவி தந்து கௌரவித்து வந்தனர்.

## சுவரில் எழுத்துக்கள்

நெபுகத்நேசரின் மகனான பெல்சாட்சர் என்ற பெயர் கொண்ட அரசன் முடிசூடி ஆட்சி செய்தார். அக்காலத்தில் நாட்டின் முக்கியஸ்தர்கள் ஆயிரம்பேரை அழைத்து

இராஜகுமாரன்

பெருவிருந்தொன்றை நடத்தினார். இந்த விருந்து வைபவத்தின்போது, எருசலேம் ஆலயத்திலிருந்து கொள்ளையிடப்பட்டுக் கொண்டு வரப்பட்ட பொன்னாலான பாத்திரங்களைக் கொண்டுவருமாறு அதிகாரிகளுக்குப் பணித்தார். அப்பாத்திரங்களில் தனது மனைவிமார், வைப்பாட்டிமார், அவர்களுடைய பிள்ளைகள் மற்றும் பிரமுகர்களுக்கு மதுபானமும் இறைச்சி உணவும் பரிமாறினான்.

இவ்வாறு உணவுண்டு மதுபோதையில் சகலரும் இருக்கும்போது ஓர் அதிசயம் அங்கு நிகழ்ந்தது. அந்த விருந்து மண்டபத்தின சுவர் ஒன்றில் ஒரு கை- நிழல் போல் தோன்றியது. இதனைக் கண்ட மன்னரும் அங்கிருந்த விருந்தினரும் அச்சமுற்றனர். சுவரருகே சென்ற அக்கையின் விரல்கள் சுவரில் சில சொற்களை எழுதிவிட்டு மறைந்துகொண்டது. அச்சொற்களின் பொருளை எவராலும் அறிந்து கொள்ள முடியவில்லை.

அரண்மனை மாந்திரீகர்களும் மாயாஜாலக் காரர்களும் அழைத்து வரப்பட்டனர். சுவரில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்களை வாசித்து விளக்கம் கூறுமாறு மன்னர் பணித்தார். திரு திருவென்று அவர்கள் விழித்தார்களே தவிர அவ்வெழுத்துக்களைப் படிக்கவோ அர்த்தம் கூறவோ அவர்களால் முடியவில்லை. மன்னரின் பயம் மென்மேலும் அதிகரித்தது.

அங்கிருந்த பிரமுகர்கள் சிலர், மன்னரை அணுகினர், அரசரின் தந்தையான மன்னர் நெபுகத்நேசரால் யூதாவிலிருந்து தருவிக்கப் பட்டவரான தானியேலைப் பற்றிக் கூறினர். "நெபுகத்நேசர் கண்ட இருகனவுகளின் உட்பொருளைக் கண்டறிந்து மிகத்துல்லியமாக அவர் கூறிய விளக்கங்கள் நிச்சயமாக நடைபெற்றன. ஆகவே அவரை அழைத்துக் கேட்டால் உட்பொருளை அவர் அறிந்துரைப்பார்." இவ்வாறு மன்னரிடம் கூறினர். மன்னரும் தானியேலை மண்டபத்துக்குத் தருவித்தார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 50 விடை** → எவில் மெரதாக்கு

**பரிசு பெறுவோர்:**

1. ஜே.எஸ். மேரி கெலன்,
கோயில் வீதி, மூதூர்-03.
2. ஏ. ஜீவா,
ஜெயந்திபுரம், பத்தரமுல்லை.
3. எஸ். வசந்தமோகன்,
279/5 நீர்கொழும்பு வீதி, வத்தளை.
4. ஜே. தேவாசீர்வாதம்,
ஏஞ்சல் இல்லம், குடாகம, அட்டன்.
5. செ. யூசை, தன்னாமுனை.

**திருமறை 52 வினா:-** நெபுகத்நேசர் நிறுவிய சிலையின் அளவு என்ன?

மார்ச். 20க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 52—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**




# அரசும் உதவி வழங்கும் நாடுகளும்



**உதவி வழங்கும் நாடுகள்:**
உங்கள் நாட்டில் ஒரே வன்முறையாக இருக்கிறதே.

**இ.அரசு:**
நாமும், எதிர்க்கட்சியும் ஒன்றுபட்டு வன்முறையை ஒடுக்க முடிவு செய்துவிட்டுத்தானே, உங்களிடம் கடன் வாங்கவே வந்திருக்கிறோம்.

**உ.வ. நாடுகள்:**
அதோ பாருங்கள். தெருவில் தடிகள் பொல்லுகளுடன் ஓடுகிறார்களே, அவர்கள் யார்?

**இ.அரசு:**
ஹி.ஹி.ஹி... எமது தொண்டர்களும், எதிர்க்கட்சி தொண்டர்களும் ஒன்றுபட்டு வன்முறையாளர்களை ஒடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வஞ்சகம் பண்ணாது வாரி வழங்கவேண்டும்.

# அயல் நாட்டு குறும்பு




காதிலை பூ கந்தசாமி

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# சாதனை உடை

ஆடை வடிவமைப்புக் கலைஞர்கள், காலத்துக்குக் காலம் வண்ணம் வண்ணமான- வகை வகையாக உடைகளை உருவாக்குவார்கள். அவர்களுடைய கற்பனைத் திறனால் உருவாகும் உடைகளை அவ்வப்போது கண்காட்சியாக வைத்து விளம்பரப்படுத்துவார்கள்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஆடைவடிவமைப்பாளரான யோஜியமா மொட்டோ, பாரிஸ் நகரில் கடந்த வருடம் மணமகளுக்கான ஆடை ஒன்றை வடிவமைத்தார். பார்வையாளர்களைக் கவர புதிய நகைச்சுவையான- உத்தியையும் யோஜி கையாண்டார்.

மணமகளுக்குரிய இந்த உடையின் அகலம் மட்டும் 4 மீட்டர். இந்த ஆடைக்கேற்ற தலை அணி (தொப்பி)யும் மிகப் பெரிதாகச் செய்யப்பட்டிருந்தது. அந்தத் தொப்பியைத் தலையில் வைத்தால் 'மொடல்' பெண்மணியை முழுமையாக மூடிவிடும். தொப்பியை மூன்று குச்சிகள் மூலம் அவரின் தலையின் மேல் உயர்த்திப் பிடித்துக் கொண்டு மூவர் வரவேண்டியதாயிற்று. பார்வையாளர்கள் இக்காட்சியைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்களாம். உலகில் இதுவரை தயாரான திருமண ஆடைகளில் மிகப் பெரும் ஆடை இதுதான்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

வீட்டுக்கு வீடு 'முரசு' பெற்றுள்ள வரவேற்புக்கு ஈடுகிடையாது. 'முரசு'மீது பெரியவர்கள் மட்டுமல்ல, சின்னம் சிறார்களும் பாசத்தை பொழிகிறார்கள்.

இங்கே பாருங்கள், முரசாலேயே ஆடை தயாரித்து அசத்தியுள்ளனர். பல நாட்களாக மிகுந்த சிரமப்பட்டு 55 பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு முரசால் ஆடை தயாரித்து முடித்தனர். 300 முரசுப் பிரதிகள் வரை இதற்கு தேவைப்பட்டன.

மூதூர் மத்திய அஹதியா பாடசாலைப் பிள்ளைகளது விளையாட்டு விழாவில்தான் இந்த அசத்தலான 'முரசு' ஆடைகளுடன் அணிவகுப்பு நடந்தது.

7.09.98 அன்று இந்த விளையாட்டு விழா நடைபெற்றது. எமக்கும் ஒரு புகைப்படம் அனுப்பிவைத்தனர். அவர்களது முயற்சியை கௌரவிப்பதற்காக முன்னூறாவது முரசுக்காக என்று பத்திரப்படுத்தி வைத்திருந்து வெளியிட்டிருக்கிறோம்.



முரசணிந்த சிறுவர்



# சிறுவர் உலகில்

இன்று உலகளைத்துமுள்ள சிறுவர்களுக்கும் ஏன் பெரியவர்களுக்கும் கூட இந்த உருவம் நன்றாக அறிமுகமான பாத்திரம் தான். பார்த்தவுடன் 'மிக்கிமௌஸ்' என்று சிறுவர்கள் அடையாளம் கண்டுவிடுவார்கள். ஆனால் இந்த மிக்கிமௌஸ் பாத்திரத்தை யார் உருவாக்கினார்கள் என்று பலருக்குத் தெரியாது.

வோல்ற் எலியாஸ் டிஸ்னி என்பவர் ஒரு வர்த்தக அமைப்பை உருவாக்க நினைத்தார். துப்பறியும் அமைப்பாக- மிகச் சிறிய நிறுவனம் அது. 923இல் அலிஸ் என்ற சிறுமி தொடர் பான துப்பறியும் முயற்சியில் டிஸ்னிக்குக் கிடைத்த ஊதியம் 40 டொலர் மட்டுமே.

ஆனால் இன்று வோல்ற் டிஸ்னி நிறுவனம் 37.77 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்கு உரித்துடையதாக விளங்குகிறது.

1928ல் 'ஸ்ரீம் போட் வில்லி' என்ற கார்ட்டூன் படத்தைத்தயாரித்து வெளியிட்டார். ஆரம்பத்தில் வந்த பேசும் படங்களில் இதுவும் ஒன்று. படத்தில் காணப்படும் 'மிக்கி மௌஸ்' மற்றும் 'டொனால் டக்' போன்ற கார்ட்டூன் கதாபாத்திரங்கள்தான் இப்படத்தில் நடித்தன. இப்படம்பெற்ற வெற்றியினால் ஏராளமான கார்ட்டூன் படங்கள் தயாரிக்கப்பட்டன. உலகெங்கும் இப் படங்கள் பணத்தை வாரிக் கொட்டின.



# அதிரடி ஆசை

சடகோபன் ரமேஷ், இந்திய அணியின் புதிய நட்சத்திரம். ஸ்ரீகாந்த்தின் பின்னர் இந்திய அணியில் தமிழர்கள் எவரும் சோபிக்கவில்லை. அந்தக் குறையை எடுத்த எடுப்பிலேயே போக்கிவிட்டார் ரமேஷ்.

தனது சொந்த மைதானமான சென்னை சேப்பாக்கம் மைதானத்திலேயே பாகிஸ்தானுடன் நடைபெற்ற டெஸ்ட்டில் களமிறங்கினார். இதில் முதல் இன்னிங்ஸில் 43 ஓட்டங்கள்.

புதுடில்லியில் பாகிஸ்தானுடன் முதல் இன்னிங்ஸ் 60. இரண்டாவது இன்னிங்ஸ் 96. சதத்தை நான்கு ஓட்டங்களால் தவறவிட்டார்.

ஆசிய சாம்பியன் கோப்பை போட்டியில் கல்கத்தாவில் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தானுடன் 79. இரண்டாவது இன்னிங்ஸில் 40. அதே போட்டியில் இலங்கையுடன் முதல் இன்னிங்ஸில் 143. இரண்டாவது இன்னிங்ஸில் 30.

அதிரடியாக ஆடுவதையே விரும்புவதாகக் கூறுகிறார் சடகோபன் ரமேஷ். இவரது சகோதரரும் கிரிக்கெட் வீரர்தான்.

ரமேஷ் இந்திய அணியில் இடம்பிடிக்க பலமாக சிபாரிசு செய்தவர்கள் இரண்டு பேர். ஒருவர் ராகுல் திராவிட், மற்றவர் ஸ்ரீநாத்.

23 வயதாகும் ரமேசுக்கு யாரையும் காதலிக்கும் யோசனை கிடையாதாம். காதல் என்பது ஃபாஷனாகிவிட்டது. காதலித்தால் விசுவாசமாக காதலிக்க வேண்டும். என் கல்யாணம் அப்பா, அம்மா பார்க்கிற பெண்ணோடுதான் என்கிறார். அதுவும் மூன்று வருடம் சென்றபின்னர்தானாம்.

ரமேசுக்கு பிடித்த நகைச்சுவை நடிகர் யார் தெரியுமா? கவுண்டமணி.

இந்திய-பாகிஸ்தான் டெஸ்ட் போட்டியின்போது, பெண் ரசிகைகள் மத்தியிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் வந்தனவாம். 'ஒருவிதமாக சமாளித்து விட்டேன்,' என்கிறார்.

இந்திய அணியில் ரமேஷ் நம்பிக்கை நட்சத்திரமாக மாறுவது உறுதி. தமிழக வீரர்களான சந்திரசேகர், டபிள்யூவி. ராமன் போன்றோர் வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தவில்லை. ஆனால் ரமேஷ் கெட்டியாக பிடித்துக்கொண்டார்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி ஷ்வானா 14.03.1999

காவெட்டியைச் சேர்ந்த சுரேஷ்குமார்-தனலஷ்மி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஷ்வானா தனது முதலாவது பிறந்த நாளை கனடா டொரன்டோ நகரிலுள்ள தனது இல்லத்தில் 14.03.1999 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, இலண்டனிலுள்ள அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பா, அக்காமார், மச்சான்மார், ஜேர்மன் பெரியப்பா, பெரியம்மா, கொழும்பிலுள்ள தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார்,மச்சான்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஷ்வானாவை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல் பி.ஆர். முத்தையா-ஹெந்தல



படிப்பகம்